
கி. வ. பிளெகானவ்

# வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரம்



கி. வ. பிளெகானவ்

கி. வ. பிளெகானவ்

# வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரம்

பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு
நூலக நூல்கள்
நூற்கொடை : பேராசிரியர் இரா. வேலம்மாள்
பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

அயல் மொழிப் பதிப்பகம்
மாஸ்கோ

மொழிபெயர்ப்பாளர்: ஆர். கே. கண்ணன்

## முன்னுரை

ருஷ்யாவின் முதல் மார்க்ஸீயவாதியான கியோர்கிய் வலென்தீனவிச் பிளெகானவ், உலகத்தின் தலைசிறந்த சிந்தனைச் சிற்பிகளில், நூலாசிரியர்களில் ஒருவர்; மகத்தான தத்துவஞானி; உலகத் தொழிலாளர் இயக்கத்தின் பெரியார்களில் ஒருவர்; மார்க்ஸீயப் புரட்சித் தத்துவத்தின் ஆற்றல்மிக்க பிரச்சாரகர். வளமுள்ள இலக்கியச் செல்வத்தை அவர் நமக்கு வழங்கிச் சென்றுள்ளார்.

பிளெகானவின் தத்துவஞான நூல்கள் ருஷ்ய சமுதாயச் சிந்தனையின் வளர்ச்சியில் ஒரு முழுமையான சகாப்தமாகவே திகழ்கின்றன. மார்க்ஸீயத்தின் தத்துவஞானி என்ற முறையில் அவரை வி. இ. லெனின் உயர்வாக மதிப்பிட்டார். அவரது தத்துவஞான நூல்கள் உலக மார்க்ஸீய இலக்கியத்திலேயே மிகச்சிறந்தவை என்று லெனின் கூறினார்.

இயக்க இயல் லோகாயதவாதத்துக்கும், அதிலும் குறிப்பாகச் சரித்திர இயல் லோகாயதவாதத்துக்கும், தத்துவஞானம், இலக்கியம், கலை, ஒழுக்கவியல், அழகியல், தர்க்க இயல், உளவியல் ஆகியவற்றின் வரலாற்றிற்கும் பிளெகானவ் விலையுயர்ந்த பங்காற்றியுள்ளார். மார்க்ஸீயத்தின், மார்க்ஸீயத் தத்துவ

ஞானத்தின் அடிப்படைக் கருத்துரைகளைச் சிறப் பாகப் பாதுகாத்து உண்மையென நிரூபித்ததுடன் அவர் பல சொந்தக் கருத்துக்களையும் வழங்கினுர். அவை மார்க்ஸீயத்தின் சில முக்கியமான ஆய்வுரை களை மேலும் வளர்த்துச் செழுமைப்படுத்தியுள்ளன.

* * *

தம்போவ் குபேர்னியாவில் ஒரு சிறு நிலப் பிரபுவின் குடும்பத்தில் 1856ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11ம் தேதியன்று பிளெகானவ் பிறந்தார்.

1875ல் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சுரங்கத் தொழில் கல்லூரியில் பயின்ற காலத்தில் பத்தொன் பது வயது மாணவரான பிளெகானவ் நரோத்னிக் ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு புரட்சி இயக்கத்தில் சேர்ந்தார். அதே ஆண்டில் அவர் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களைச் சந் தித்துப் பழகினுர். 1876 டிசெம்பர் 6ம் தேதியன்று செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில், கஸான் மாதா கோவில் முன்னர், ஒரு தொழிலாளர் ஆர்ப்பாட் டத்தை அவர் சில நண்பர்களுடன் சேர்ந்து நடத்தி னுர். ருஷ்யாவின் வரலாற்றிலேயே இதுதான் முத லாவது தொழிலாளர் ஆர்ப்பாட்டமாகும். அதில் அவர் ஜாரிஸ்ட் யதேச்சாதிகாரத்தை எதிர்த்து ஒரு புரட்சிகரமான சொற்பொழிவாற்றினுர். அது முதற்கொண்டு புரட்சி வேலையையே பிளெகானவ் தமது முக்கியத் தொழிலாக வைத்துக்கொண்டார். போலீஸாரால் வேட்டையாடப்பட்டு அவர் செ யின்ட் பீட்டர்ஸ்பர்க்கை விட்டு கீவ் நகரத்துக்கும் அதன்பிறகு ரஸ்தோவிற்கும் சென்ருர், அங்கிருந்து

கிராமப் புறத்துக்கு, ''மக்களிடம் வேலை செய்வதற்கு''ச் சென்று, விவசாயிகளை ஜாரிஸ்ட் அரசாங்கத்துக்கு எதிராகத் திரண்டெழச் செய்யும் பொருட்டு அவர்களிடையே அவர் பிரச்சாரம் செய்யலானுர்.

1870-80ம் ஆண்டுகளின் இடைக்காலத்தில் ருஷ்யப் புரட்சி இயக்கத்தில் நரோத்னிக்குகள் பெரும் பாத்திரம் வகித்திருந்தனர். அவர்களது ஸ்தல ஸ்தாபனங்கள் வலைப் பின்னலைப் போன்று விரிவாகப் பரவியிருந்தன. ''ஸெம்லியா இ வோல்யா'' (''நிலமும் சித்தமும்'') என்ற சொந்தப் பத்திரிகையும் அவர்களுக்கு இருந்தது. அதில் பிளெகானவும் ஓர் ஆசிரியராயிருந்தார்.

நிலப்பிரபுக்களாலும் ஜார் ஆட்சியாலும் சூறையாடப்பட்டு ஒடுக்கப்பட்டு வந்த ஏழை ருஷ்யக் கிராமங்களின் அடிப்படையில், நரோத்னிக் இயக்கம், 1861ல் பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்ட பிறகு, தோன்றியது. ருஷ்யாவில் விவசாயி மக்கள்தாம் முதன்மையான புரட்சிச் சக்தி என்றும் கிராமச் சமுதாயம் (ஒப்ஷீனு) சோஷலிஸத்தின் கரு என்றும் நரோத்னிக்குகள் வாதாடினர்.

ஆக, கற்பனைவகைப்பட்ட விவசாயி ''சோஷலிஸத்தின்'' தத்துவக் கருத்துக்களைத்தான் நரோத்னிக்குகள் கொண்டிருந்தனர். புரட்சிகரமான தத்துவத்தை ஆயுதமாகப் பூண்டிருக்கும் தொழிலாளி வர்க்கம் தான் சமுதாயத்தைப் புரட்சிகரமான முறையில் மாற்றியமைப்பதில் முன் நிற்கும் வர்க்கம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

நரோத்னிக்குகளின் தத்துவம் அகநிலை ஆன்மீகவாதத்தையும் சமுதாய இயலில் அகநிலை ஆய்வுமுறையையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. சமுதாய வளர்ச்சியின் பொருளாதார விதிகளின் புறநிலைத் தன்மையை அவர்கள் அங்கீகரிக்கவில்லை; ''விமர்சன முறையில் சிந்திக்கும் தனிநபர்களும்'', ''வீரர்களும்'' சரித்திரத்தை உருவாக்குகிறார்கள் என்றும், கீழ்ப்படியும் குணமும், செயல் திறனின்மையும் உடைய ''கும்பலாகிய'' மக்களை அவர்கள் தமது கருத்துக்களைக் கொண்டு, வழி நடத்திச் செல்ல முடியும் என்றும் நரோத்னிக்குகள் நினைத்தார்கள்.

நரோதிஸத்தின் தத்துவ வகைப்பட்ட கருத்துரைகளையும் போர்த்தந்திர வகைப்பட்ட கருத்துரைகளையும் 1879ம் ஆண்டிலேயே பிளெகானவ் கண்டனம் செய்து விரைவிலே அவர்களுடன் உறவு முறித்துக்கொண்டுவிட்டார்.

ஜாரிஸ்ட் போலீஸ் பயங்கரம் நாளுக்கு நாள் அதிகரிப்பதை யுத்தேசித்து ருஷ்யாவைவிட்டு நீங்கி வெளிநாடுகளில் போய்த் தங்கும்படி பிளெகானவை அவரது நண்பர்கள் வேண்டிக் கொண்டார்கள். 1880ம் ஆண்டில் பிளெகானவ் ஜெனீவாவுக்கு வந்து சேர்ந்தார். இரண்டு ஆண்டுகள் அவர் கடும் உழைப்புடன் தத்துவ ஆராய்ச்சி வேலை செய்தார். மார்க்ஸீய இலக்கியத்தை விடாமுயற்சியுடன் பயின்றது, மேற்கு ஐரோப்பியப் புரட்சி இயக்கத்துடன் நாடு கடத்தப்பட்ட ருஷ்யர்களுக்கிருந்த நெருங்கிய உறவுகள், ருஷ்யாவில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் (தொழிலாளர் இயக்கத்தில் நேர்ந்த எழுச்சி, நரோத்னிக்

ஸ்தாபனங்களை ஜாரிஸ்ட் போலீஸ் நொறுக்கிவிட்டது ஆகியன) அவர் உள்ளத்தில் விளைத்த மாற்றம் ஆகியவற்றின் காரணமாக, இவ்விரண்டாண்டு காலத்திற்குப் பின் பிளெகானவின் கருத்துக்களில் தீவிரமான மாறுதல் ஏற்பட்டது. பிளெகானவ் திட நம்பிக்கை கொண்ட மார்க்ஸீயவாதியாகவும் சிறந்த மார்க்ஸீயப் பிரச்சாரகராகவும் மலர்ந்தார். 1883ம் ஆண்டில் ருஷ்ய சோஷல்-டெமாக்ராட்டுகளின் முதல் மார்க்ஸீய ஸ்தாபனத்தைப் பிளெகானவ் அமைத்தார். அதன் பெயர் ''தொழிலாளர் விடுதலை''க் குழு என்பதாம். ருஷ்யாவில் மார்க்ஸீயத்தைப் பரப்புவதில் அது பெரும் பணியாற்றியது.

பிளெகானவ் பல மார்க்ஸீய நூல்கள் எழுதினர். தத்துவத் துறையில் அவை மகத்தான முக்கியத்துவம் பெற்றவை. அவற்றில் மிகவும் மதிப்பும் முக்கியத்துவமும் பெற்ற நூல்கள் 1883-1903 ஆண்டுகளின் இடைக்காலத்தில் பிளெகானவ் புரட்சிகர மார்க்ஸீயவாதியாக இருந்த போது எழுதப்பட்டன. சிறந்த முறையில் மார்க்ஸீயத் தத்துவ ஞானத்தைப் பாதுகாத்தும், மெய்ப்பித்தும், ஸ்தூலமாக வியாக்கியானித்தும், வளர்த்தும் இருக்கும் பிளெகானவின் நூல்கள் பின்வருமாறு: ''சோஷலிஸமும் அரசியல் போராட்டமும்'' *(1883)*, ''நமது வேற்றுமைகள்'' *(1884)*, ''ஹெகல் மறைவின் அறுபதாம் ஆண்டு நினைவுவிழாவுக்காக'' *(1891)*, ''வரலாறு பற்றிய ஒருமைப்பார்வையின் வளர்ச்சி'' *(1895)*, ''லோகாயதவாதத்தின் வரலாறு பற்றிய கட்டுரைகள்'' *(1896)*, ''வரலாறுபற்றிய லோகாயதவாதக் கருத்தோட்டம்'' *(1897)*, ''வரலாற்றில்

தனிநபர் வகிக்கும் பாத்திரம்'' (1898), எ. பேர்ன்ஷ்டைன், கொ. ஷ்மிட், ப. ஸ்துரூவே, பக்டானவ், தா. மசாரிக், முதலான மார்க்ஸீயத் ''திருத்தவாதிகள்'' பலரை எதிர்த்து எழுதப்பட்ட கட்டுரைகள்.

சமுதாய சிந்தனை பற்றிய முழு வரலாற்றின் ஒரு தவிர்க்க முடியாத, இயல்பான விளைவே மார்க்ஸீயத்தின் பிறப்பு என்று மிகுந்த தெளிவோடும் மனத்திண்மையோடும் பிளெகானவ் நிரூபித்தார். மார்க்ஸுக்கு முந்தி இருந்த தத்துவஞான முறைகளை விட, ஆளும் வர்க்கங்களின் தத்துவங்கள் எல்லாவற்றையும் விட, இயக்க இயல் லோகாயதவாதம் மேலானது என்று காட்டி, மார்க்ஸீயத்தின் விஞ்ஞானத்தன்மையையும் உபயோகத்தன்மையையும் வலியுறுத்தினர்; ''மார்க்ஸீயம் என்பது செயல் பற்றிய தத்துவஞானமாகும்'' என்று சொன்னர்.

1903ம் ஆண்டுக்குப் பிறகு பிளெகானவ் வலதுசாரிக்கு மாறி, தொழிலாளர் இயக்கத்திலுள்ள சந்தர்ப்பவாதத்தின் ருஷ்ய வகையான மென்ஷெவிஸத்தைப் பற்றி நின்றார். அதன் மூலம், 1905ம் வருடத்தியப் புரட்சியின் தன்மையையும் அதை இயக்கிய சக்திகளையும் மதிப்பிடுவதில் ருஷ்ய சோஷல்-டெமாக்ராட்டுகளில் லெனின் தலைமையைக் கொண்ட புரட்சிகரமான பகுதியினின்று அவர் விலகிச்சென்றார்.

முதலாவது உலக யுத்த காலத்தில் பிளெகானவ் சமூக-இனவெறி நிலைகளைக் கைக்கொண்டார். பிளெகானவ் அக்டோபர் புரட்சிக்குச் சாதகமற்ற கண்ணோட்டம் கொண்டிருந்தார் எனினும் அவர் சோவியத் அரசாங்கத்தைச் செயலளவில் எதிர்த்

துப் போராடவில்லை. பிளெகானவின் மென்ஷெவிக் கருத்துக்கள் தவறானவை என்று வரலாறு நிரூபித்து விட்டது. 1918ம் ஆண்டு மே மாதம் 30ம் தேதி யன்று அவர் காலமானார்.

ருஷ்யத் தொழிலாளர்களின் முதல் ஆசான் பிளெகானவ். தொழிலாளி வர்க்கமும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் அவரை என்றென்றும் நினைவில் நிறுத்தும். அவரது வாழ்நாளில் 1883-1903ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிதான் சிறப்பாகப் பயன் தந்த காலமாகும். அக் காலப் பகுதியில் அவர் எழுதிய தத்துவஞான நூல்கள் மார்க்ஸீயச் சிந்தனைச் செல்வக் களஞ்சியத்தில் என்றென்றும் திகழும்.

* * *

பிளெகானவ் முற்றும் கற்றறிந்த வித்தகர், தத்துவஞானப் பண்பாட்டில் சிறந்தவர், வாதம் புரிவதில் வல்லவர். சமுதாய வளர்ச்சியைப்பற்றிய மார்க்ஸீயத்துக்கு விரோதமான கருத்தோட்டங்களை மிகப் பலமாகத் தாக்கி அவை ஆதாரமற்றவை என்று அவர் நிரூபித்தார். மார்க்ஸுக்கு முந்திய தத்துவஞான முறைகளை அவர் விஞ்ஞானக் கண் கொண்டு ஆராய்ந்து விமர்சித்தார்; சமுதாய வளர்ச்சியின் விதிகளை விளக்குவதில் அவற்றிற்குள்ள வரம்புக்குறுக்கத்தையும், ஆதாரமற்ற தன்மையையும் அவர் எடுத்துக் காட்டினார். மார்க்ஸுக்கு முந்திய தத்துவஞானப் பிரிவுகளில் ஒன்றாவது—18ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சு லோகாயதவாதிகளோ, முடியாட்சி மீட்சிக்காலத்தைச் சேர்ந்த பிரெஞ்சு சரித்திராசிரியர்களோ, கற்பனா சோஷலிஸ்

டுகளோ, ஜெர்மன் ஆன்மீகவாதத் தத்துவஞானிக ளோ, பாயர்பாகோ அன்றி 19ம் நூற்றுண்டைச் சேர்ந்த ருஷ்ய லோகாயதவாதத் தத்துவஞானிக ளோ, யாராயினும் சரி — வரலாற்றின் இயக்கப் போக்குக்குரிய விதிகளுக்கு விஞ்ஞானபூர்வமான விளக்கம் தர முடியவில்லை என்றும் மார்க்ஸ் கண்டு பிடித்த வரலாறு பற்றிய லோகாயதவாதக் கருத்தோட்டம் ஒன்றுதான் சமுதாய விஞ்ஞானத் துக்குத் திடமான அடிப்படை தந்தது என்றும் அவர் காட்டினர்.

''...மனித வரலாற்றின் வளர்ச்சி சம்பந்த மான விதியை மார்க்ஸ் கண்டுபிடித்தார். அதுவரை தத்துவப் புதர்களுக்குள் மறைந்துகிடந்த அந்தச் சாதாரண உண்மை இதுதான்: அதாவது, அரசியல் விஞ்ஞானம், கலை, மதம், முதலானவற்றில் ஈடு படுவதற்கு முன்னல் மனிதகுலம் முதலில் உண்ண வும், அருந்தவும், குடியிருக்கவும், உடுத்தவும் வேண்டியிருக்கிறது; ஆகவே, உயிர்வாழ்வதற்குத் தேவையான பொருட்களின் உற்பத்தியும், அதன் விளைவாக ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூக மோ அல்லது ஒரு குறிப்பிட்ட சகாப்தத்திலோ அடைந்த பொருளாதார வளர்ச்சியின் அளவும் தான், சம்பந்தப்பட்ட அந்தந்த மக்கள் சமூகத்தின் அரசாங்க ஸ்தாபனங்களும், சட்ட வகைப்பட்ட கருத்தோட்டங்களும், கலையும், இன்னும் மதம் சம் பந்தப்பட்ட கருத்துக்களும் கூட, உருவாக்கப்பட் டிருப்பதற்கு அடிப்படையாக இருக்கின்றது....'' (பிரெடெரிக் எங்கெல்ஸ், கார்ல் மார்க்ஸின் சவ அடக்கத்தின் போது ஆற்றிய சொற்பொழிவு).

பிளெகானவ் அபிப்பிராயத்தில், வரலாறு பற்றிய லோகாயதவாதக் கருத்தோட்டம் என்பது சமுதாய வளர்ச்சியின் ''பீஜ கணிதம்'' ஆகும். சமுதாய வளர்ச்சி சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளுக்கும் வேண்டிய விஞ்ஞானரீதியான விடைக்கு இந்த ''பீஜ கணிதத்தில் தான்'' தத்துவரீதியான அடிப்படையைக் காண வேண்டும்.

பிளெகானவ் எழுதிய ''வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரம்'' என்ற நூல் மார்க்ஸீயத் தத்துவச் சிந்தனையைச் சேர்ந்த ஒரு சிறந்த நூல். அதன் பணி இந்தப் பிரச்சினையைப் பற்றிய மார்க்ஸீயக் கருத்தை எடுத்துக் காட்டி மெய்ப்பிப்பதாகும். மார்க்ஸ் விவரித்து விளக்கிய வரலாறு பற்றிய லோகாயதவாதக் கருத்தோட்டம் ஒன்றுதான் இந்தப் பிரச்சினைக்குச் சரியான விடை காண்பதற்குச் சாதனமாயிருந்தது.

இது வாதப்பிரதிவாத நூல்; சரித்திர நிகழ்ச்சிகளின் புறநிலைத் தன்மையை மறுக்கும் அகநிலைச் சமூக விஞ்ஞானிகளாகிய நரோத்னிக்குகளை எதிர்த்து எழுதப் பட்டது. அதே சமயத்தில், விடுதலை என்பதற்கு அர்த்தம் அவசியத்தை உணர்ந்து வைத்திருப்பது தான் என்று சொல்கிற மார்க்ஸீயத்தின் சமுதாயக் கருத்தோட்டத்தில் முரண்பாடுகள் இருப்பதாகக் கூறும் மார்க்ஸீயத்தின் ''விமர்சகர்களையும்'' பிளெகானவ் கண்டித்தார்.

''சூரியன் உதிப்பது, சந்திரக்கிரகணம் ஏற்படுவது போன்று ஏதாவதொரு நிகழ்ச்சி விதிக்குட்பட்டதாகவும், அதன் காரணமாக, அவசியமாகவும் இருந்தால் பிறகு அது நிகழ்வதைக் குறித்துக் கவலைப்

பட வேண்டியதில்லையே! ஏனெனில் நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது நிகழ்ந்துதானே தீரும்! அப்படியென்றால் நீங்கள் ஏன் கம்யூனிஸ்ட் கட்சியை அமைக்க விரும்புகிறீர்கள்?'' என்று மார்க்ஸீயத்தை ''விமர்சிப்பவர்கள்'' சொன்னார்கள்.

இந்த ''விமர்சகர்களை'' எதிர்த்து பிளெகானவ் சில அரிச்சுவடி உண்மைகளை விளக்கினார்: அதாவது, இயற்கை நிகழ்ச்சிகளும் அவற்றின் பிரதான விதிகளும் மக்களின் உணர்வுபூர்வமான நடவடிக்கையைச் சார்ந்திருக்கவில்லை, என்று.

''சந்திரக்கிரகணத்தை நிகழ்விப்பதற்கு அவசியப்படுகிற சூழ்நிலைகளின் தொகையில் மனிதச் செயல் என்பது எந்தச் சந்தர்ப்பத்திலும் சேராது, சேரவும் முடியாது; இந்த ஒரு காரணத்துக்காகவே, சந்திரக்கிரகணத்தை நிகழ்விப்பதற்காகக் கிளம்பும் கட்சி பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் தான் தோன்ற முடியும்.'' (இந்தப் பதிப்பின் **32**ம் பக்கம் பார்க்க.)

சமுதாய நிகழ்ச்சிகளின் விஷயம் இதற்கு நேரெதிரானது. இங்கே மனிதனின் நடவடிக்கை, திரளான மக்களின் அல்லது வர்க்கங்களின் நடவடிக்கை, ஒரு நிகழ்ச்சி ஏற்படுவதற்கு வசதி செய்யும் விதத்திலோ அல்லது அதைத் தடை செய்யும் விதத்திலோ இருக்க முடியும், அதற்கு ஒரு திட்டவட்டமான ''உருவத்தை'' அளிக்க முடியும். எனவே, ஒரு சமுதாய நிகழ்ச்சியின் அவசியத்தைப் பற்றிய உணர்வு, அதன் தவிர்க்கமுடியாமை பற்றிய தத்துவ ரீதியான மெய்ப்பிப்பு, சமுதாய முன்னேற்றத்துக்குப் பெரிதும் வசதியளிக்க முடியும். ''எனது சித்

தத்துக்குச் சுயேச்சை இல்லை என்ற உணர்வு, நான் இப்பொழுது நடந்துகொள்வதற்கு மாருக நடப்ப தற்கு அகநிலையிலோ புறநிலையிலோ அறவே சாத்திய மேயில்லை என்ற வடிவத்தில்மட்டும் எனக்குக் காட்சி தரும் பொழுதும், அதேகாலத்தில் சாத்தியமான மற்றெல்லாச் செய்கைகளையும் விட எனது செய்கை களே எனக்கு மிகவும் விருப்பமானவையாகவும் இருக்கும்பொழுதும், எனது மனத்தில் அவசியம் என்பது சுதந்திரமாகவும், சுதந்திரம் என்பது அவ சியமாகவும் ஒன்ருகிவிடுகின்றன. அதற்குப்பிறகு, நான் எந்த அர்த்தத்தில் சுதந்திரமற்றவனுக ஆகி றேன் என்ருல் சுதந்திரத்துக்கும் அவசியத்துக்கும் இடையேயுள்ள ஒருமைநிலையை என்னுல் குலைக்க முடி யாது, ஒன்றுக்கு எதிராக மற்றென்றை என்னுல் நிறுத்த முடியாது, அவசியத்தின் தளையை என்னுல் உணர முடியவில்லை என்ற அர்த்தத்தில் தான். ஆனுல் அப்படிப்பட்ட சுதந்திரமின்மை அதே சமயத்தில் சுதந் திரத்தின் முழுமையான வெளியீடாகவும் இருக்கிறது. (இந்தப் பதிப்பின் 37ம் பக்கம் பார்க்க.) சுதந்திரம் என்ருல் அவசியத்தைப் பற்றி உணர்வு பெற்றிருப் பது என்று அர்த்தம் என்கிற மார்க்ஸீயக் கூற்றைத் தம் காலத்திய பொது வாழ்விலிருந்து எடுத்துக் கொண்ட புதிய வாதங்களைக் கொண்டு பிளெகானவ் ஊர்ஜிதம் செய்து செழுமைப்படுத்திஞர். ஒரு சமு தாய நிகழ்ச்சியின் அவசியத்தைப்பற்றி உணர்வு பெற்றிருப்பது என்பது மிகத் தீவிரமான நடை முறைச் செயல்களின் அவசியத்தை மறுத்தொதுக்கு வதற்குப் பதிலாக அவற்றின் அவசியத்தை விளக்கி ஊர்ஜிதம் செய்கிறது. மார்க்ஸீயத்தின் இந்த

உண்மையைப் பிளெகானவ் நிரூபித்தார். ''சுதந்திர மான சித்தத்தை'' நிராகரித்த மனிதர்கள், சித்தத் திண்மையிலும், அதை முழுச் சக்தியுடன் செலுத்து வதிலும் தம் காலத்தைச்சேர்ந்த மற்ற மனிதர்களை விட மிகப் பல தடவைகளில் சிறந்து விளங்கியிருக் கிருர்கள் என்று அனுபவம் காட்டியிருக்கிறது.

உணர்வாக மாற்றப் பட்ட அவசியம்தான் சுதந்திரம் என்ற, சுதந்திரத்தைப் பற்றிய மார்க் ஸீயக் கருத்தோட்டத்தை விளக்கும் இந்தத் தத் துவஞான முன்னுரையும் சரி, சுதந்திரமான சித்தம் சம்பந்தமான அகநிலைவகைப்பட்ட கருத்தோட்டத் தைப்பற்றிய விமர்சனமும் சரி,—இவை இரண்டும் வரலாற்றில் இயங்கும் தனிநபரின் செயல்களுடைய வரலாற்றுச் சூழ்நிலைச் சார்பையும் தேவையையும் நிரூபிப்பதற்கு அவசியமாயிருந்தன. மேலும், அந் தத் ''தனிநபரின்'' தன்மையும், அவனது முயற்சி களும் லட்சியங்களும்கூட கடைசிப் பரிசீலனையில் காலத்தைத்தான் சார்ந்திருக்கின்றன என்று பிளெ கானவ் கூறுகிருர். அந்தத் தனிநபரின் ''சமூக அந்தஸ்து அவனுக்கு இந்தத் தன்மையைத் தவிர வேறெதையும் ஊட்டாததினுல் அவன் அவசியத்தின் கருவியாகப் பயன்படுவதோடல்லாமல், அப்படிப் பயன் படாமலிருக்க முடியாமலிருப்பதோடல்லா மல், அப்படிச் செய்வதற்குத்தான் அவன் பேரார்வத் துடன் விரும்புகிருன், அப்படி விரும்பாமல் அவனுல் இருக்கவும் முடியாது. இது சுதந்திரத்தின் ஓர் அம்சம்; அது மட்டு மல்ல, அவசியத்திலிருந்து பிறந்த சுதந்திரத்தின் ஓர் அம்சம்; அதாவது, இன் னும் சரியாகச் சொல்வதென்ருல், அவசியத்தோடு

ஒருமைப்பட்டுவிட்ட சுதந்திரம் அது, சுதந்திரமாக மாற்றப்பட்டுவிட்ட அவசியம் அது.''(இதே பதிப்பின் 40ம் பக்கம் பார்க்க.)

வாழ்வுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்பவர்களாகிய மக்கள் சமுதாயத்தை மாற்றியமைப்பதில் நிர்ணயமான பாத்திரம் வகிக்கின்றனர் என்ற உண்மையை மார்க்ஸீயத் தத்துவம் தெளிவாகக் காட்டியுள்ளது, வரலாறும் அதைப் பளிச்சென்று ஊர்ஜிதப்படுத்தியுள்ளது. முடியாட்சி மீட்சிக்காலத்தைச் சேர்ந்த சரித்திராசிரியர்களின் தத்துவங்களையும், தம் காலத்தைச் சேர்ந்த மொனே, லாம்ப்ரேஹ்ட் ஆகியோரின் தத்துவங்களையும், நரோத்னிக்குகளின் அகநிலை வகைப்பட்ட சமூக இயலையும் பிளெகானவ் பொய் யென்று நிரூபித்தார். மனிதகுலத்தின் வரலாற்று இயக்கத்தைத் தனித்தியங்கும் தனிநபர்களின் நடவடிக்கை எனக் குறுக்கி வரையறை செய்த சிந்தனையாளர்களின் போதனைகளுக்குக் கொஞ்சமேனும் ஆதாரம் கிடையாது என்று பிளெகானவ் எடுத்துக் காட்டினர். வரலாறு என்பது தன்னாலே உருவாகி வருவது, சுயமாக இயங்கி வருவது, மக்களின்றியே உருவாவது என்று நினைத்துக்கொண்டு பொது மக்களின், வர்க்கங்களின், கட்சிகளின், தனிநபர்களின் உணர்வுபூர்வமான ஆக்கல் திறனுள்ள நடவடிக்கையின் அர்த்த முக்கியத்துவத்தை மறுத்த விதிவாதிகளின் போதனைகளுக்கும் கொஞ்சமேனும் ஆதாரமில்லை என்று பிளெகானவ் எடுத்துக்காட்டினர். வரலாற்று நிகழ்ச்சிகளைப் பரிசீலிக்கையில் வரலாறு பற்றிய லோகாயதவாதக் கருத்தோட்டத்தில்

அகநிலைவாதத்துக்கும், சுய இயக்கவாதத்துக்கும், விதிவாதத்துக்கும் இடங்கிடையாது என்று பிளெகானவ் வலியுறுத்தினார்.

வரலாற்றுத் துறையில் அகநிலைவாதத்தையும் விதிவாதத்தையும் எதிர்த்துப் பிளெகானவ் போராடுகையில், வரலாறு என்பது மக்களால், சமுதாய வர்க்கங்களால், உருவாக்கப்படுகிறது என்றும், ஆனால் அது குறிப்பிட்ட புறநிலைவகைப்பட்ட சரித்திரச் சூழ்நிலைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் உட்பட்டே எப்பொழுதும் உருவாக்கப்படுகிறது என்றும் அவர் சாதித்தார். தலைசிறந்த சரித்திர மகா புருஷர்கள், வரலாற்றில் ஒரு மாபெரும் பாத்திரம் வகிக்க முடியும்; ஆனால் அது சூழ்நிலைமைகளையும் சந்தர்ப்பங்களையும் பொறுத்திருக்கிறது, எந்தப் பொதுச் சக்திகளின், வர்க்கங்களின் நலன்களை அவர்கள் பாதுகாக்கிறார்கள், எந்த வர்க்கங்கள் அவர்களை ஆதரிக்கின்றன என்பதைப் பொறுத்திருக்கிறது.

நெப்போலியனும், முதலாவது பீட்டர் மன்னனும், பிஸ்மார்க்கும் வரலாற்றில் முக்கியமான பாத்திரம் வகித்தனர். இதற்குக் காரணம் அவர்கள் சில திட்டவட்டமான பொதுச் சக்திகளின், வர்க்கங்களின் நலன்களை வெளியிட்டார்கள், தமது நாடுகளின் வளர்ச்சியைச் சேர்ந்த புறநிலைவகைப்பட்ட சரித்திரப் போக்குகளை அவர்கள் வெளியிட்டார்கள். எந்த வர்க்கங்களின் நலன்களைத் தான் வெளியிட்டானோ அந்த வர்க்கங்களின் ஆதரவு இருக்கும் வரை நெப்போலியன் வெற்றிபெற்றான். சமுதாய வளர்ச்சி பற்றிய வரலாற்று விதிகளுக்கு

மாருக மாபெரும் செயல் எதுவும் எந்தத் தனிநபராலும் செய்ய முடியாது. விமர்சன ரீதியிலே சிந்திக்கும் தனிநபர்கள் தான் சரித்திரத்தைச் சிருஷ்டிக்கிருர்கள் என்றும், மனிதகுலத்தின் சரித்திர வளர்ச்சியை மக்கள் தாமதப்படுத்துகிருர்களே தவிர வேருென்றும் செய்வதில்லே என்றும் சாதித்த அகநிலேச் சமூக விஞ்ஞானிகளேப் பிளெகானவ் கடுமையாகக் கண்டித்தார். இந்தக் கூற்றுக்களுக்கு ஆதாரமேயில்லே என்று பிளெகானவ் எடுத்துக்காட்டினுர்.

பிளெகானவ் எழுதிய ''வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரம்'' என்ற நூல், வரலாற்று விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான, சிக்கலான பிரச்சினேக்கு ஆக்கல்திறனுள்ள பரிகாரம் காண்பது எப்படி என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். வரலாற்றை உருவாக்குபவர்கள் மக்களே என்கிற மார்க்ஸீயக் கருத்திலிருந்து தொடங்கி, தனிநபரின் முக்கியத்துவத்தை அவர் பின்வருமாறு விஞ்ஞான ரீதியாக வரையறுக்கிருர்: ஒரு நபர் மகாபுருஷஞக இருப்பதற்குக் காரணம் அவன் புதுமையான, மகத்தான அனேத்தையும் துவக்கிவைக்கிருன் என்பதும், மற்றவர்களேவிட அவன் அதிக தூரமாகவும் அதிக ஆழத்துக்குள்ளும் பார்க்கிருன் என்பதும் மக்களின் ஜீவாதாரமான, புனிதமான நம்பிக்கைகளேயும், சரித்திர வளர்ச்சி சம்பந்தப்பட்ட விதிகளேயும் போக்குகளேயும் அவன் அதித் தெளிவாக வெளியிடுகிருன் என்பதுமேயாகும்.

''சமுதாயத்தின் அறிவு வளர்ச்சியின் முந்திய போக்கிஞல் முன்வைக்கப்படுகிற விஞ்ஞானப் பிரச்சினேகளுக்கு அவன் விடையளிக்கிருன். சமுதாய

உறவுகளின் முந்திய வளர்ச்சியால் சிருஷ்டிக்கப்பட்ட புதிய சமுதாயத் தேவைகளை அவன் சுட்டிக்காட்டு கிறான். அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற் கும் அவன்தான் முன்முயற்சி செய்கிறான். அவன் வீரன். விஷயங்களின் இயல்பான போக்கைத் தடுக் கவோ மாற்றவோ அவனால் முடியும் என்ற அர்த்தத் தில் அல்ல; அவசியமாகியிருக்கும், உணர்வின்றி நிகழும் இந்தப் போக்கின் உணர்வுபூர்வமான சுதந் திரமான வெளியீடாக அவனது செயல்கள் இருக் கின்றன என்ற அர்த்தத்தில் அவன் வீரனாகிறான். அவனது முக்கியத்துவம் அனைத்தும், அவனது சக்தி அனைத்தும் இதில்தான் அடங்கியுள்ளன. ஆனால் இந்த முக்கியத்துவம் பிரம்மாண்டமானது, இந்தச் சக்தி பயங்கரமானது.'' (இதே பதிப்பின் **111-2**ம் பக்கங்கள் பார்க்க.)

ஒரு தலைசிறந்த அரசியல் ஞானியோ அல்லது பொதுவாழ்வில் பிரபலமாயுள்ளவரோ தனது நட வடிக்கைகளை நிர்ணயிக்கிற திட்டவட்டமான சரித் திரக் காரணங்களால் மட்டுமின்றி, தனது தன்மை யிலிருக்கிற நல்ல அம்சங்களைக் கொண்டோ அல்லது தீய அம்சங்களைக் கொண்டோ சரித்திர நிகழ்ச்சி களின் போக்கின்மீது செல்வாக்குச் செலுத்த முடி யும். பதினைந்தாவது லூயி மன்னனின்கீழ் பிரெஞ் சுக் கொள்கை தோல்வியடைந்ததற்குப் பிளெகா னவ் சமுதாயக் காரணங்களைச் சுட்டிக்காட்டிய தோடல்லாமல் அந்த முதுகெலும்பற்ற, ஒழுக்கங் கெட்ட மன்னனின் தன்மையையும் ஒரு காரணமா கச் சுட்டிக்காட்டினார். ''மன்னனுயில்லாமல், மன்ன னுடைய சமையல்காரனோ அல்லது குதிரைலாயக்

காவலாளியோ பெண்பித்துப் பிடித்தவனுயிருந் திருந்தால் அதில் சரித்திர முக்கியத்துவம் எதுவும் இருந்திருக்காது. எனவே பெண்பித்து என்பதல்ல இங்கே முக்கிய விஷயம்; அந்தப் பெண்பித்துப் பிடித் தவன் வகிக்கும் சமுதாய அந்தஸ்துதான் இங்கே முக்கியம்.'' (78-79ம் பக்கங்கள் பார்க்க.)

இவ்வாறு, சமுதாய இயக்கப்போக்கின் விதிக் குட்பட்ட தன்மையைக் காட்டி, விதிவாதத்துடனே, சிந்தனை லோகாயதவாதத்துடனே அல்லது சரித் திரத்தின் நிகழ்ச்சிப் போக்கைப் பற்றிய செயலற்ற தத்துவத்துடனே சரித்திர இயல் லோகாயதவாதத் துக்கு ஒரு சம்பந்தமும் கிடையாது என்ற கருத் தைப் பிளெகானவ் விடாப்பிடியாகப் பற்றிநின்ருர். வரலாற்றில் அகநிலை வகைப்பட்ட காரணப் பொருள் வகிக்கும் பாத்திரத்தை, பொது மக்களின், வர்க் கங்களின், கட்சிகளின், தனிநபர்களின் உணர்வு பூர்வமான நடவடிக்கைகள் வகிக்கும் பாத்திரத் தை, அவர் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகிருர்.

வரலாற்றில் பொது மக்களும் தனிநபர்களும் வகிக்கும் பாத்திரம் சம்பந்தமான பிரச்சினையோடு, சமுதாய வளர்ச்சியில் முன்னணித் தத்துவம் வகிக் கும் முக்கியத்துவம் பற்றிய பிரச்சினை நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. பொது மக்கள், முன்னணியில் நிற்கும் சமுதாய வர்க்கங்கள், சமு தாய முன்னேற்றத்தில் நிர்ணயமான காரணப் பொருள் என்று சொன்னுல் பின்வரும் கேள்வி இயல் பாக எழும்: கோடிக்கணக்கான மக்களை ஒரே முழு மையாக ஒன்றுபடுத்தி, குறிப்பிட்ட சரித்திரப் பணி களை நிறைவேற்றுவதற்கு வழிகாட்டி, ஒரு விரும்பிய

குறிக்கோளை நோக்கி அழைத்துச் செல்லும்படியான சக்தி எது? யதார்த்தமான பொருளாதார நலன்களே சமுதாய நிகழ்ச்சிகளை நிர்ணயிக்கின்றன. ஆனால் இந்த நலன்களையும் இயக்கத்தின் அவசரமான பணிகளையும் அந்தக் காலத்துக்கு மிக நவீனமாயுள்ள ஒரு தத்துவம் தெளிவாக்குகிறது. பழைய அமைப்புமுறைகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும் தத்துவத் தூணாகப் பயன்பட்ட, காலத்திற்கொவ்வாத கருத்துக்களையும் கருத்தோட்டங்களையும் வெடிக்கச் செய்யும் வெடிமருந்து என்ற பாத்திரத்தை அந்தத் தத்துவம் வகிக்கிறது. ''புரட்சிகரமான தத்துவம் இல்லாமல், உண்மையான அர்த்தத்திலே புரட்சிகரமான இயக்கம் எதுவுமில்லை. தனது விடுதலைக்காக முயற்சி செய்யும் ஒவ்வொரு வர்க்கமும், ஆதிக்கம் பெற நினைக்கும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் எவ்வளவு தூரத்துக்கு முற்போக்கான சமுதாயப் போக்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் மூலம் தன் காலத்துக்கு மிகுந்த முற்போக்காயிருக்கிற கருத்துக்களைத் தாங்கிச் செல்கிற சாதனமாயுள்ளதோ, அந்த அளவுக்கு அது புரட்சிகரமானதாகும். உள்ளடக்கத்தில் புரட்சிகரமாயுள்ள ஒரு கருத்து ஒரு விதமான வெடிமருந்தேயாகும். உலகில் வேறெந்த விதமான வெடிமருந்தும் அதன் ஸ்தானத்தை வகிக்காது.'' (**நூல்திரட்டு**, முதல் தொகுதி, 95ம் பக்கம்.)

ஆன்மீகவாதத் தத்துவஞானம் பல வகைப்பட்ட விசித்திரமான இரகசியவாதக் கருத்தோட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; அது மனிதனைச் செயலற்றுப் போகும்படியும்,

யதார்த்த உலகைப் பற்றிச் செய்கையொழித்த வகையிலே சிந்தித்துக் கொண்டிருக்கும்படியும் தண்டித்துவிடுகிறது. ஆனல் சரித்திர இயல் லோகாயத வாதமோ ஆக்கல் திறனுள்ள, பயனுள்ள நடவடிக்கைக்கு மனிதனைத் தூண்டுகிறது. சரித்திர இயக்கப் போக்கின் புறநிலை வகைப்பட்ட தன்மையை வெளிப்படுத்தும் பொழுதே, மார்க்ஸீயம் ஒரு தெளிவான காட்சியையும், குறிக்கோளையும், செயல் திட்டத்தையும் தந்து அதன் மூலமாகச் சமுதாயத்திலுள்ள முற்போக்கான பகுதியினரையும், சாதாரண மக்களையும் செயல் புரியுமாறு தட்டியெழுப்புகிறது. மார்க்ஸீயம் செயல்பயனுள்ளதாய் இருப்பதற்குக் காரணம் இதுதான்.

அவசியத்தைப் பற்றிய உணர்வு, ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியின் விதிக்குட்படும் தன்மை பற்றிய உணர்வு, இந்த நிகழ்ச்சியை உண்டாக்குவதில் தன்னையும் ஒரு காரணப் பொருளாகக் கருதிக்கொள்ளும் மனிதனின் சக்தியைக் கட்டுப்படுத்துவதில்லை என்பது மட்டுமின்றி, மாருக அதைப் பலப்படுத்திப் பதின் மடங்காகப் பெருக்கித் தருகிறது. அப்படியானல், இந்தத் தனிநபரின் சுயேச்சையான செயல்கள் அவசியத்தின் உணர்வுபூர்வமான, சுதந்திரமான வெளியீடாக இருப்பதின் காரணமாக அவை ஒரு மாபெரும் சமுதாயச் சக்தியாக ஆகின்றன. அப்போது அவன்,

> ''தெய்விகச் சீற்றப் புயல்போல் வஞ்சகப்
> பொய்யினைத் தகர்த்திடப் பொங்கி எழுவதை''

எதுவும் தடுக்க முடியாது, தடுக்கவும் செய்யாது. ருஷ்யக் கவிஞர் நெக்ராஸவின் மேற்

சொன்ன சொற்களில் இந்நூலின் சமுதாய முக்கியத் துவம் அடங்கியிருக்கிறது. சமுதாயத்தின் பௌதீக, ஆன்மீகச் சக்திகள் முன்னேறுவதற்கு வசதிகள் செய்ய மனிதன் விரும்பினுல் அவன் தனது நடவடிக் கைகளைச் சமுதாய வளர்ச்சி சம்பந்தமான புறநிலை வகைப்பட்ட விதிகளுக்குப் பொருத்தமாக அமைத் துக்கொள்ளவேண்டும்; சமுதாய முன்னேற்றத்தைத் தடுத்துத் தாமதப்படுத்தும் ''வஞ்சகப் பொய்யினை'' அவன் ''தெய்விகச் சீற்றத்தின்'' பலத்துடன் அழிக்க வேண்டும்.

பிளெகானவின் இந்நூல் இந்நாளிலும் முக் கியத்துவம் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம், பத்தொன்பதாம் நூற்ருண்டின் கடைசிப் பகுதி யாகிய அந்தக் காலத்திலேயே விஞ்ஞானபூர்வமாகப் பிளெகானவும் மற்ற மார்க்ஸீயவாதிகளும் பொய் யென்று நிரூபித்த கருத்தோட்டங்களைப் போன்ற பலவகையான கருத்தோட்டங்களை நவீன காலத்திய அகநிலைச் சமூக விஞ்ஞானிகள் விவரித்து விஸ் தரிக்கிருர்கள். ''வீரர்கள்'', ''விமர்சனக் கண் கொண்டு சிந்திக்கும் தனிநபர்கள்'' என்ற சொற் களுக்குப் பதிலாகத் ''தேர்ந்தெடுத்த சில உன்னத புருஷர்கள்'' என்றும் ''பொறுக்கி யெடுத்த உன்னத புருஷர்களின் சங்கம்'' என்றும் நவீன கால அகநிலைச் சமூக விஞ்ஞானிகள் வார்த்தைகளை மாற்றிவிடுவதால் விஷயத்தின் சாராம்சம் மாறி விடவில்லை. அது அப்படியேதான் இருக்கிறது: அதாவது, சரித்திர முன்னேற்றத்தின் விதிக்குட் பட்டியங்கும் புறநிலைவகைப்பட்ட தன்மையை

மறுப்பது, சரித்திரத்தில் பொது மக்கள் வகிக்கும் பாத்திரத்தைச் சிறுமைப்படுத்துவது, என்று.

பிளெகானவும் மற்ற மார்க்ஸீயவாதிகளும் எழுதியுள்ள நூல்களில் வரலாற்றில் தனிநபரும் பொது மக்களும் வகிக்கும் பாத்திரத்தைப் பற்றி விளக்கி விவரித்துள்ள மார்க்ஸீயக் கருத்து சரியானதே என்று சரித்திர வளர்ச்சி, குறிப்பாக தற்காலத்திய சமுதாய இயக்கம், முற்றிலும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

ஆகவேதான் அறுபது ஆண்டுகளுக்குமுன் பிளெகானவ் சமர்ப்பித்த வாதங்கள் நவீன காலத்திய அகநிலைச் சமூக விஞ்ஞானிகளுக்கும் முற்றும் பொருந்தும்.

மி. சிதரவ்

## I

1870-30ம் ஆண்டுகளின் பிற்பாதியில் காலஞ் சென்ற காப்லிட்ஸ், **"முற்போக்குக்குரிய காரணப் பொருட்கள் என்ற வகையில் அறிவும் புலன்களும்"** என்ற தலைப்புடன் ஒரு கட்டுரை வரைந்தார். அதில் அவர் ஸ்பென்ஸரைக் குறிப்பிட்டு மனிதகுலத்தின் முன்னேற்றத்தில் புலன்கள்தாம் பிரதானமான பாத்திரம் வகிக்கின்றன என்றும் அறிவு இரண்டாம் பட்சமான, மிகவும் கீழ்ப்பட்ட பாத்திரம் தான் வகிக்கிறது என்றும் வாதித்தார். "மதிப்பிற்குரிய சமூக விஞ்ஞானி"[1] ஒருவர் காப்லிட்ஸுக்குப் பதிலளிக்கையில், அறிவைக் "கீழ்ப்படியில்" கொண்டுபோய் வைக்கும் ஒரு தத்துவம் விநோதமானது, வியப்புத் தருவது என்று தெரிவித்தார். அறிவை ஆதரித்து அந்த "மதிப்பிற்குரிய சமூக விஞ்ஞானி" சொன்னது சரிதான். என்ற போதிலும் அவர் காப்லிட்ஸ் எழுப்பிய பிரச்சினையின் சாராம்சத்தை ஆராய்ந்து பாராமல் அந்தப் பிரச்சினையைக் காப்லிட்ஸ் முன்வைத்த முறையே அசம்பாவிதமானது, அனுமதிக்க முடியாதது என்று நிரூபித்திருந்தால் இன்னும் எவ்வளவோ சரியாயிருந்திருக்கும். உண்மையில் "காரணப் பொருட்கள்" பற்றிய அசல் தத்துவமே ஆதாரமற்றது. ஏனெனில்

சமுதாய வாழ்வின் பல்வேறு அம்சங்களை அது தான் தோன்றித்தனமாகப் பொறுக்கி எடுத்துக்கொண்டு தனி மூர்த்திகளாக்கிப் பல பக்கங்களிலிருந்து ஏற்றத் தாழ்வான வெற்றியுடன் மனிதனை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் விசேஷத் தன்மையுள்ள சக்திகளாக அவற்றை மாற்றிவிடுகிறது. ஆனால் காப்லிட்ஸ் சமர்ப்பித்த வடிவத்திலோ இந்தத் தத்துவம் இன்னும் ஆதாரமற்றது. அவர் **சமுதாய மனிதனுடைய** நடவடிக்கைகளின் பல்வேறான அம்சங்களை எடுத்துக்கொள்ளாமல் **தனிநபர் மனத்தின்** பல்வேறு துறைகளையே எடுத்துக் கொண்டு அவற்றை விசேஷமான சமூக விஞ்ஞான வகைப்பட்ட மூர்த்திகளாக மாற்றிவிட்டார். பொருளற்ற சிந்தனையின் எல்லைக் கல் இது. இதற்கு மேல் ஒருவர் போக முடியாது; ஏனெனில் அதற்கு மேலே போனால் கோமாளித்தனத்திற்குரிய, படுமோசமான, வெளிப்படையான அபத்தத்தில் இறங்க வேண்டியதுதான். அந்த ''மதிப்புக்குரிய சமூக விஞ்ஞானி'' இதைத் தான் காப்லிட்ஸுக்கும் தமது வாசகர்களுக்கும் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். வரலாற்றில் ஆதிக்கம் வகிக்கும் ''காரணப் பொருள்'' எது என்று கண்டுபிடிக்க காப்லிட்ஸ் எடுத்துக்கொண்ட முயற்சி அவரை எவ்வளவு தூரத்துக்குப் பொருளற்ற சிந்தனையின் ஆழத்திற்குக் கொண்டுபோயிருக்கிறது என்பதை வெளிப்படுத்துவதின் மூலம் ''மதிப்புக்குரிய சமூக விஞ்ஞானி'' இந்தக் ''காரணப் பொருள்'' பற்றிய தத்துவத்தை விமர்சிப்பதில் ஒருவேளை கொஞ்சம் பங்கைத் தற்செயலாகவாவது செலுத்தியிருக்கக் கூடும். இது

நம்மெல்லோருக்குமே அந்தக் காலத்தில் மிகவும் பயன்பட்டிருக்கும். ஆனுல் அதை அவரால் செய்ய முடியவில்லே. அவரும் அந்தத் தத்துவத்தைத் தான் ஆதரித்து நின்ருர். அவருக்கும் காப்லிட்ஸுக்கும் இருந்த வித்தியாசமெல்லாம் இது தான்: அவர் **கதம்பவாதத்தைச்** (eclecticism) சார்ந்து இருந் தார், ஆகவே எல்லாக் ''காரணப் பொருட்களும்'' ஒரேயளவில் முக்கியத்துவமுள்ளவையாக அவருக் குத் தோன்றின, அவ்வளவுதான். பின்னுல் இவர் அறிவின் கதம்பவாத இயல்பு இயக்க இயல் லோகாயதவாதத்தை எதிர்த்து இவர் தாக்குதல் கள் நடத்தியதில் பளிச்செனத் தெரிந்தது. இயக்க இயல் லோகாயதவாதம் பொருளாதாரக் ''கார ணப்பொருள்'' ஒன்றுக்காக மற்ற எல்லாக் ''காரணப் பொருட்களேயும்'' பலியிட்டுவிடுகிற ஒரு தத்துவ மென்றும், அது வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரத்தைப் பூஜ்ஜியமாக்கிவிடுகிற ஒரு தத்துவ மென்றும் அவர் கருதினுர். ''காரணப் பொருட்கள்'' பற்றிய பார்வை இயக்க இயல் லோகாயதவாதத்துக் குப் புறம்பானது என்பதும், தர்க்கரீதியாகக் கடு களவேனும் சிந்திக்கத் திறனில்லாத ஒருவன்தான் **சாந்திவாதம்** (quietism)[2] எனப்படும் தத்துவத்தை அது சரியெனக் காட்டுவதாக எண்ண முடியும் என் பதும் இந்த ''மதிப்புக்குரிய சமூக விஞ்ஞானி''யின் மூளேக்கு எட்டவேயில்லே. ஆனுல் நமது ''மதிப்புக் குரிய சமூக விஞ்ஞானி'' செய்திருக்கிற தவறு அப் படியொன்றும் அபூர்வமானதல்ல என்பதைப் போ கிற போக்கிலே இங்கே குறிப்பிட வேண்டும். எத் தனேயோ பேர் இந்தத் தவறு செய்திருக்கிறுர்கள்,

செய்து வருகிறார்கள், அநேகமாக எதிர்காலத்தி லும் செய்து கொண்டேயிருப்பார்கள்....

இயற்கை, வரலாறு ஆகிய இரண்டையும் குறித்துத் தமது இயக்க இயல் கருத்தோட்டத்தை லோகாயதவாதிகள் வரையறுத்து வகுத்துக்கொள் வதற்கு முன்பே அவர்கள் ''சாந்திவாதத்தை''ச் சார்ந்து நிற்கும் போக்கைக் காட்டுவதாகக் குற் றம் சாட்டப்பட்டார்கள். ''பழைய காலத்திய விஷயங்களுக்குள்'' புகாமல், பிரபல ஆங்கிலேய விஞ் ஞானியான பிரீஸ்ட்லிக்கும் பிரைஸ் என்பவருக்கு மிடையே நடைபெற்ற சர்ச்சையை ஞாபகமூட்டு வோம். பிரீஸ்ட்லியின் தத்துவங்களைப் பகுத்தாரா யும்போது லோகாயதவாதத்துக்கும் சுதந்திரம் என்ற கருத்துக்கும் பொருத்தம் எதுவும் கிடையாது என்றும் தனிநபரின் சுதந்திரமான நடவடிக்கைக ளனைத்தையும் லோகாயதவாதம் மறுத்தொதுக்கு கிறது என்றும் பிரைஸ் வாதாடினார். இதற்குப் பிரீஸ்ட்லி பதிலளிக்கையில் அன்றாட அனுபவத்தைச் சுட்டிக்காட்டினார். ''எல்லா மிருகங்களையும் விட நான் ஒன்றும் துடிப்பற்ற, உயிர்ப்பற்ற பிராணி அல்ல "am not the most torpid and lifeless of all animals", நிச்சயமாக! இருந்தாலும் என் விஷயத்தை விட்டு விடுவோம். அவசியகரவாதிகள் என்று பிரைஸ் தெ ரிந்து வைத்திருக்கிறாரே, அவர்களையே அவர் பார்க் கட்டும். அவர்களைக் காட்டிலும் மன உற்சாகமும், தீவிரமான தீராத உழைப்பும், மிக முக்கியமான குறிக்கோள்களை அடைவதற்காகச் செலுத்தும் கடு மையான, நிலையான முயற்சியும் வேறு யாரிடம்

அவர் பார்க்க முடியும்?''* இதைச் சொல்லும் போது christian necessarians** என்று அக்காலத்தில் அழைக்கப்பட்ட மதச்சார்புள்ள ஜனநாயகக் குழுவையே பிரீஸ்ட்லி மனத்தில் கொண்டிருந்தார். பிரீஸ்ட்லியும் அக்குழுவில் சேர்ந்திருந்தார். அவர் நினைத்ததுபோல் அந்தக்குழு அவ்வளவு சுறுசுறுப்பாக இருந்ததா என்று நமக்குத் தெரியாது. ஆனால் அது முக்கியமல்ல. மனிதச் சித்தத்தைப் பற்றிய லோகாயதவாதக் கருத்தோட்டம் மிகவும் உத்வேகமுள்ள நடைமுறைச் செய்கைகளுக்கு முற்றிலும் பொருந்தும் என்பதில் துளிகூடச் சந்தேகம் இருக்க முடியாது. ''மனிதச் சித்தத்தின் முழுப் பிரயோகமும் தேவைப்பட்டிருந்த எல்லாப் போதனைகளும் மனிதச் சித்தம் சக்தியற்றது என்று கோட்பாடுரீதியிலே சாதித்தன; சுயேச்சையான சித்தத்தை அவை மறுத்தன; உலகத்தை விதிவாதத்துக்கு அடிமைப்படுத்திவிட்டன''*** என்று லான்ஸோன் கூறுகிறார்.

---

* ''லோகாயதவாதம் தத்துவஞான வகை அவசியம் இவற்றின் போதனைகளைப் பற்றிய சுதந்திரமான விவாதம்; டாக்டர் பிரைஸுக்கும் டாக்டர் பிரீஸ்ட்லிக்கும் நடந்த கடிதப் போக்குவரத்து'' என்ற நூல், லண்டன் 1778; பக்கம் 391.

** [கிறிஸ்தவ அவசியகரவாதிகள்]

லோகாயதவாதத்தையும் மதச் சூத்திரத்தையும் இப்படிக் கலந்துவிட்டதைக் கண்டு பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சுக்காரன் வியப்படைந்திருப்பான். ஆனால் இங்கிலாந்தில் அப்படி யாருக்கும் அது அதிசயமாகத் தோன்றவில்லை. பிரீஸ்ட்லி தாமே மிகுந்த மதப் பற்றுள்ளவராயிருந்தார். ஊருக்கு ஊர் பழக்கவித்தியாசம் உண்டல்லவா?

*** கு. லான்ஸோன் எழுதிய ''பிரெஞ்சு இலக்கியத்தின் வரலாறு'' என்ற நூல், பாரிஸ், 1896, பக்கம் 445.

சுயேச்சையான சித்தம் எனப்படுவதை மறுக்கும் **ஒவ்வொன்றும்** விதிவாதத்துக்குக் கொண்டுபோய் விடுகிறது என்று லான்ஸோன் நினைத்தது தவறு. ஆனால் இப்படித் தவறுசெய்த போதிலும் அது அவரை ஒரு மிகச் சுவாரசியமான சரித்திர உண்மையைக் கண்டுகொள்வதினின்று தடுக்கவில்லை. உண்மையிலே, விதிவாதம்கூட சக்திமிக்க நடைமுறைச் செய்கைக்கு எல்லாச் சமயங்களிலும் தடையாக இருந்ததில்லை என்பதைச் சரித்திரம் எடுத்துக் காட்டுகிறது; அதற்கு மாறாக, சில சகாப்தங்களில் விதிவாதமே **அப்படிப்பட்ட செய்கைக்கு உளவியல் ரீதியிலே அவசியமான அடிப்படையாக** இருந்தது. இதற்கு உதாரணமாக ப்யூரிடன்களை நாம் குறிப்பிடுவோம். 17ம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்த மற்றெல்லாக் கட்சிகளையும் செயலூக்கத்திலே அவர்கள் மிஞ்சியிருந்தார்கள். மகமது நபியைப் பின்பற்றுபவர்களையும் உதாரணத்துக்குக் குறிப்பிடுவோம். ஒரு குறுகிய காலத்திற்குள்ளேயே இந்தியாவிலிருந்து ஸ்பெயின் வரை ஒரு பெரும் நிலப்பரப்பை இவர்கள் தங்கள் ஆட்சிக்கு உட்படுத்தினார்கள். நிகழ்ச்சிகளின் ஒரு குறிப்பிட்ட வரிசை தவிர்க்க முடியாதது என்று நாம் திடமாக நம்பிவிட்டால் அதுவே இந்த நிகழ்ச்சிகளுக்கு ஆதரவாகவோ எதிராகவோ செயல் புரிவதற்குரிய உளவியல் வகையான வாய்ப்புக்கள் அனைத்தையும் நாம் இழந்துவிடப் போதுமானது என்று நினைப்பவர்கள் பெருந்தவறு செய்கிறார்கள்.*

* மனிதர்களின் செயல்கள் எல்லாம் கடவுளால் முன்பாகவே நிர்ணயிக்கப்படுகின்றன என்பது கால்வினின் போ

தவிர்க்கமுடியாவையாயிருக்கிற நிகழ்ச்சிகளின் சங்கிலியில் எனது நடவடிக்கைகளும் ஒரு தவிர்க்க முடியாத கண்ணியாக அமைந்திருக்கின்றனவா என்பதைப் பொறுத்துத்தான் இங்கே எல்லாம் இருக்கிறது. அவை அப்படி அமைந்திருந்தால் அப்போது நான் ஊசலாடுவது குறையும், எனது செயல்களில் மேலும் உறுதி நிரம்பும். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை: தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகளின் சங்கிலியில் தனது செயல்களையும் ஒரு தவிர்க்க முடியாத கண்ணியாக ஒரு குறிப்பிட்ட தனிநபர்

---

தனே என்ற விஷயம் எல்லோரும் அறிந்ததே. Praedestinationem vocamur aeternum Dei decretum, quo apud se constitutum habuit, quid de unoquoque homine fieri valet [எந்த ஆணைப்படி ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தவிர்க்க முடியாதவாறு நடந்து தீர வேண்டியதைக் கடவுள் நிர்ணயிக்கிருரோ அந்த ஆணையையே நாம் முன்விதி என்று குறிப்பிடுகிரேம்] என்கிருர் கால்வின். (Institutio, lib. III, cap. 5.) அநியாயமாக ஒடுக்கப்பட்ட மக்களை விடுதலை செய்வதற்காக ஆண்டவன் தனது அடியார்களில் சிலரைத் தேர்ந்தெடுக்கிருர் என்பதும் கால்வினின் போதனையாகும். இஸ்ரேல் மக்களை விடுதலை செய்த மோஸஸ் அப்படிப்பட்டவர்களில் ஒருவர். கிராம்வெல்கூடத் தம்மை ஆண்டவனின் ஒரு கருவியாகக் கருதிக்கொண்டார் என்று எல்லா விபரங்களிலிருந்தும் தெரிகிறது. தமது செய்கைகளையெல்லாம் அவர் தெய்வ சித்தத்தின் பலன்கள் என்றே சொல்லிவந்தார். அதுதான் உண்மை என்று அவர் நிஜமாகவே நம்பியிருக்கக் கூடும். அவரைப் பொறுத்தவரையில் இந்தச் செயல்கள் எல்லாம் ஏற்கனவே அவசியத்தால் குறிக்கப்பட்டிருந்தன. எனினும் இது அவரை மேலும் மேலும் வெற்றி பெறுவதற்கு முயற்சிப்பதிலிருந்து தடுத்துவிடவில்லை. அவரது முயற்சிக்கு அடக்க முடியாத சக்தியை அது அளித்தது கூட.

கருதுகிருன் என்று நாம் சொல்லும் பொழுது அந்தத் தனிநபர் விஷயத்தில் சுதந்திரமான சித்தமின்மை, செயலின்மை அறவே இல்லாமை எனப் பொருள்படும் என்றும், இந்தச் சுதந்திரச் சித்தமின்மை என்பது அவன் மனத்தில் தான் செய்து வருவதற்கு மாருகச் செயல் புரிய முடியாமை என்பதாகத்தான் பிரதிபலிக்கும் என்றும் நாம் சொல்கிரும். "Hier stehe ich, ich kann nicht anders"* என்று லூதர் சொன்னரே, அந்தப் புகழ்பெற்ற சொற்களிலே இந்த மனேபாவத்தைத் துல்லியமாக வெளியிடலாம். இந்த மனேபாவத்தின் விசேஷத்தால் அடக்க முடியாத சக்தியை மனிதர்கள் வெளிப்படுத்துகிருர்கள், அதியாச்சரியமான சாகசங்களைச் செய்து காட்டுகிருர்கள். ஹாம்லெட்டுக்கு இந்த மனேபாவம் கிடையாது; அதனுல் தான் அவனுக்கு முனகுவதற்கும் சிந்திப்பதற்கும் மட்டும்தான் சக்தியிருந்தது. அதனுல்தான், உணர்வாக மாற்றப்பட்ட அவசியம்தான் சுதந்திரம் என்று சொல்கிற தத்துவஞானத்தை ஹாம்லெட் ஒருக்காலும் ஏற்றிருக்க மாட்டான். ''மனிதன் எப்படியிருக்கிருனே, அப்படித்தான் அவனது தத்துவஞானமும் இருக்கும்'' என்று பிஷ்டே சரியாகத்தான் சொன்னர்.

---

* [''இந்நிலையைத்தான் நான் பற்றி நிற்கிறேன். வேறு விதமாக என்னல் இருக்க முடியாது.'']

## II

மேலே ஐரோப்பிய சமுதாய-அரசியல் போதனை ஒன்றின் விசேஷமான குணும்சமாகக் கூறப்படும் தீர்க்க முடியாத முரண்பாட்டைப் பற்றி ஷ்டாம்லர் தந்த கருத்துக்களை நம் நாட்டில் சிலர் ஆழ்ந்த கவனத்துக்குரியதாக எடுத்துக் கொண்டிருக்கிறுர்கள். சந்திரக்கிரகணத்தைப் பற்றி அவர் தந்த உதாரணத்தைக் குறித்துத்தான் இங்கு பேசுகிறேம். உண்மையில் இந்த உதாரணம் சுத்த அபத்தமாகும். சந்திரக்கிரகணத்தை நிகழ்விப்பதற்கு அவசியப்படுகிற சூழ்நிலைகளின் தொகையில் மனிதச் செயல் என்பது எந்தச் சந்தர்ப்பத்திலும் சேராது, சேரவும் முடியாது; இந்த ஒரு காரணத்துக்காகவே, சந்திரக்கிரகணத்தை நிகழ்விப்பதற்காகக் கிளம்பும் கட்சி பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் தான் தோன்ற முடியும். ஆனுல், மனிதச் செயலும் இந்தச் சூழ்நிலைமைகளில் ஒன்ருக உபயோகப்படுவதாயிருந்தாலுங்கூட, சந்திரக்கிரகணத்தைப் பார்க்க மிகவும் விரும்பினுலும் **தங்களுடைய உதவி இல்லாமலேயே** அது நிகழும் என்று உணர்ந்துகொண்டவர்களில் ஒருவர்கூட அந்தக் கட்சியில் சேரமாட்டார். இங்கே அவர்களுடைய ''சாந்திவாதம்'' **அவசியமில்லாத, அதாவது உபயோகமற்ற, செயலில்** ஈடுபடாதிருத்தல் என்றுதான் ஆகும்; அதற்கும் உண்மையான

சாந்திவாதத்துக்கும் ஒரு சம்பந்தமும் இருக்காது. நாம் பரிசீலித்து வரும் விஷயத்தில் சந்திரக்கிர கணம் பற்றிய உதாரணம் அர்த்தமற்றதாக இல்லா திருக்க வேண்டுமானுல் மேலே குறிப்பிட்ட கட்சி யினர் அதை முழுவதாக மாற்றித் தீர வேண்டும். சந்திரனுக்கும் அறிவு இருப்பதாகவும், வான வெளி யில் தான் வகித்து வருகிற, கிரகணத்துக்குக் காரண மாயிருக்கிற, நிலை தன் சித்தத்தின் சுய நிர்ணயத் தின் பலனுகவே ஏற்பட்டது என்று அதற்குத் தோன்றுவதாகவும், அந்த நிலை அதற்குப் பெரு மகிழ்ச்சி யளிக்கிறதோடல்லாமல் அதன் மனச் சாந் திக்கே அது பரம அவசியமென்றும், எனவே அந்த நிலையை வகிப்பதற்கு அது எப்போதுமே உணர்ச்சி மிகுதியுடன் முயற்சிக்கிறது என்றும் இந்தக் கட்சி யினர் கற்பனை செய்து கொள்ள வேண்டும்.* இவற் றை யெல்லாம் கற்பனை பண்ணிக் கொண்ட பிறகு பின்வரும் கேள்வியைக் கேட்டுக்கொண்டு தீர வேண்டும்: வான வெளியில் நடக்கும் தன் இயக் கமானது தனது சித்தத்தாலோ ''இலட்சியங்களா லோ'' நிர்ணயிக்கப்படவில்லை என்றும், அதற்கு மாருக, தனது இயக்கம்தான் தனது சித்தத்தையும் ''இலட்சியங்களையும்'' நிர்ணயித்துள்ளது என்றும்

*"C'est comme si l'aiguille aimantée prenait plaisir de se tourner vers le nord car elle croirait tourner indépendamment de quelque autre cause, ne s'apercevant pas des mouvements insensibles de la matière magnétique." **Leibnitz**, Théodicée, Lausanne MDCCLX, p.598.

[''காந்த முள்ளானது காந்த சக்தியைப் பற்றிய உணர்வில் லாமல், தான் வேறெந்தக் காரணத்துக்கும் உட்படாமல், சுதந்திரமாகச் சுற்றிக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு வடக்கு நோக்கித் திசை காட்டுவதில் சந்தோஷப் பட்டுக்கொள்வது போலத்தான் இருக்கும் இது''. **லைப்னிட்ஸ்**, ''தியோடிஸீ'', லாஸன், 1760, 598ம் பக்கம்.]

கடைசியிலே கண்டுபிடித்துவிட்டால் சந்திரனுக்கு எப்படி இருக்கும்? ஷ்டாம்லர் சொல்கிறபடி பார்த் தால், அந்தச் சந்திரன் ஏதாவதொரு தர்க்கவகைப் பட்ட முரண்பாட்டைக் கொண்டு அந்தச் சங்கட மான நிலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளா விடில் அந்தக் கண்டுபிடிப்பு சந்திரனை இயங்குவதற் குச் சக்தியற்றதாகச் செய்துவிட்டிருக்கும். ஆனல் இத்தகைய அனுமானம் முற்றிலும் ஆதாரமற் றது. வேண்டுமென்ருல் சந்திரன் கடுகடுப்புக் கொண்டிருப்பதற்கும், தனக்குள்ளேயே ஒழுக்கக் கேடுற்றிருப்பதற்கும், அதன் ''இலட்சியங்களும்'' இயந்திரவகை யதார்த்த நிலையும் முரண்பட்டுக் கிடப்பதற்கும் இந்தக் கண்டுபிடிப்பு சடங்குக்காகச் சொல்லும் ஒரு காரணமாகப் பயன்படலாம். ஆனல் ''சந்திரனின் மனப் பான்மை'' பொதுவாகப் பார்க் குமிடத்தில், கடைசிப் பரிசீலனையிலே அதன் இயக் கத்தால் நிர்ணயிக்கப்படுகிறது என்று நாம் கற்பித் துப்பேசுவதால் சந்திரனின் மன அமைதி குலைந்திருக் கும் நிலைக்குரிய காரணத்தை அதன் இயக்கத்தில் தான் தேடிப்பார்க்க வேண்டும். இந்த விஷயத்தைக் கவனமாகப் பரிசீலித்துப் பார்த்தால் பூமியிலிருந்து அதிகப்பட்ச தூரத்தில் சந்திரன் இருக்கும்போது தனது சித்தம் சுயேச்சையாக இல்லையே என்று அது வருத்தப் பட்டிருக்கும் என்றும், பூமியிலிருந்து குறைந்தபட்ச தூரத்திலிருக்கும்போது தனது சித் தம் சுயேச்சையாக இல்லாதிருப்பதே அதன் மகிழ்ச் சிக்கும் மன உற்சாகத்துக்கும் ஒரு புதிய, சடங் குக்காகச் சொல்லும், காரணமாகப் பயன்பட்டது என்றும் ஒரு வேளை தெரிந்திருக்கும். ஒருவேளை

இதற்கு எதிர்மாருகவும் நடந்திருக்கலாம்: அதாவது, சுதந்திரத்தை அவசியத்தோடு சமரசப்படுத்துவதற்கான வழியை அது பூமியிலிருந்து குறைந்தபட்ச தூரத்திலிருக்கும்போது கண்டுபிடிக்காமல் பூமியிலிருந்து அதிகப்பட்ச தூரத்திலிருக்கும்போது கண்டுபிடித்தது என்றும் தெரிந்திருக்கும். சரி, இது எப்படியோ இருந்துவிட்டுப் போகட்டும்; அப்படிப் பட்ட சமரசம் சாத்தியமே என்பதிலும் அவசியத்தைப் பற்றிய உணர்வு என்பது சக்திமிக்க நடைமுறைச் செயலுக்கு முற்றிலும் பொருத்தமானதே என்பதிலும் சந்தேகமேயில்லே. என்ன இருந்தாலும், வரலாற்றிலென்னவோ இது இப்படித்தான் இது வரை இருந்துவந்திருக்கிறது. சுயேச்சையான சித்தத்தை மறுத்த மனிதர்கள் சித்தத்திண்மையில் தம் காலத்தைச் சேர்ந்த அனேவரையும் மிஞ்சியிருப்பதோடு தமது சித்தத்தை முழுக்கப் பிரயோகித்துமிருக்கிருர்கள். இதற்குப் புல உதாரணங்களேச் சொல்ல முடியும். அவை எல்லோரும் அறிந்தவையே. சரித்திர யதார்த்தத்தை அது உண்மையில் எப்படி இருக்கிறதோ அப்படிப் பார்ப்பதற்கு ஒருவன் வேண்டுமென்றே மறுத்தால் தான் ஷ்டாம்லர் ஒரு வேளே மறந்துவிட்டது போல் அவற்றை மறக்க முடியும். உதாரணமாக, நம்மிடையே இருக்கும் அகநிலேவாதிகளிடையேயும்[3] சில ஜெர்மன் பிலிஸ்டைன்களிடையேயும் இந்த மனப் போக்கு மிகப் பலமாகப் படிந்து விட்டிருக்கிறது. ஆனல், அக நிலேவாதிகளும் பிலிஸ்டைன்களும் மனிதர்களல்ல, அவர்கள் வெறும் **நிழல் உருவங்களே**. அப்படித்தான் பெலின்ஸ்கிய் அவர்களே வர்ணித் திருப்பார்.

அதிருக்கட்டும். ஒரு மனிதனுடைய சென்ற கால, நிகழ்கால, எதிர்காலச் செயல்கள் அவசியத்தால் முழுதும் குறிக்கப்பட்டவை என்று அவனுக்கே தோன்றும்படியிருக்கிற விஷயத்தை இன்னும் கொஞ்சம் நெருங்கிப் பரிசீலிப்போம். இப்படிப்பட்ட மனிதன், மகமது நபிகள் கருதிக் கொண்டது போல் தன்னை ஆண்டவனின் தூதனுகக் கருதிக் கொண்டோ, அல்லது நெப்போலியன் நினைத்துக் கொண்டதுபோல் தவிர்க்க முடியாத விதியினுல் தேர்ந்தெடுக்கப்பட்டவனுக நினைத்துக் கொண்டோ, அல்லது 19ம் நூற்ருண்டில் சில சமூகப் பிரமுகர்கள் எண்ணிக் கொண்டதுபோல் சரித்திர முன்னேற்றத்தின் எதிர்க்க முடியாத சக்தியின் வெளியீடாகத் தன்னை எண்ணிக் கொண்டோ, அநேகமாய்ப் பஞ்ச பூதங்களின் பலத்திற்கொப்பான சித்த சக்தியை வெளிப்படுத்தி, தன் வழிக்குக் குறுக்கே சிற்றூர் ஹாம்லெட்களும் குட்டி ஹாம்லெட்களும்[4] போடும் தடைக்கற்களை வெங்காயச் சருகென்று ஊதித்தள்ளிச் செல்கிருன்.*

*இந்த வகையைச் சேர்ந்த மனிதர்கள் எவ்வளவு தீவிரமாக உணர்கிருர்கள் என்பதைப் பளிச்சென்று காட்டுவதற்கு மற்ருேர் உதாரணம் தருவோம். பெர்ராரா சீமாட்டியான (12ம் லுயீயின் மகள்) ரெனே தனது குருவாகிய கால்வினுக்கு வரைந்த கடிதத்தில் பின்வருமாறு எழுதுகிருர்: ‘‘ஆண்டவனின் விரோதிகள்பால் தாவீது மரணத் துவேஷம் பாராட்டினுன் என்று நீங்கள் எனக்கு எழுதினீர்களே, அதை நான் மறக்கவில்லை. வேறு மாதிரியாக நானும் என்றைக்கும் நடந்துகொள்ள மாட்டேன். ஏனெனில் எனது தகப்பனுராகிய அரசனும் சரி, தாயாகிய அரசியும் சரி, காலஞ்சென்ற பிரபுவாகிய எனது கணவனும் (feu monsieur mon mari)

சரி, இப்போது இந்த விஷயத்தை இன்னொரு கோணத்திலிருந்து பார்க்கச் சுவாரசியமாயிருக் கிறது. அது பின்வருமாறு: எனது சித்தத்துக்குச் சுயேச்சை இல்லை என்ற உணர்வு, நான் இப் பொழுது நடந்துகொள்வதற்கு மாருக நடப்பதற்கு அகநிலையிலோ புறநிலையிலோ அறவே சாத்தியமே யில்லை என்ற வடிவத்தில் மட்டும் எனக்குக் காட்சி தரும்பொழுதும், அதே காலத்தில் சாத்தியமான மற்றெல்லாச் செய்கைகளையும் விட எனது செய் கைகளே எனக்கு மிகவும் விருப்பமானவையாகவும் இருக்கும்பொழுதும், எனது மனத்தில் அவசியம் என்பது சுதந்திரமாகவும், சுதந்திரம் என்பது அவ சியமாகவும் ஒன்ருகிவிடுகின்றன. அதற்குப் பிறகு நான் எந்த அர்த்தத்தில் சுதந்திரமற்றவனுக ஆகி றேன் என்ருல் சுதந்திரத்துக்கும் அவசியத்துக்கும் இடை யேயுள்ள ஒருமைநிலையை என்னுல் குலைக்க முடியாது, ஒன்றுக்கு எதிராக மற்ருென்றை என்னுல் நிறுத்த முடி யாது, அவசியத்தின் தளையை என்னுல் உணர முடியவில்லை என்ற அர்த்தத்தில்தான். ஆனுல் அப்படிப்பட்ட சுதந்திர மின்மை அதே சமயத்தில் சுதந்திரத்தின் முழுமையான வெளியீடாகவும் இருக்கிறது.

---

சரி, எனது குழந்தைகள் அத்தனை பேரும் சரி, இவர்கள் அனை வரையும் ஆண்டவன் நிராகரித்துத் தள்ளிவிட்டார் என்று எனக்குத் தெரிந்தால் மரணத் துவேஷத்தோடு அவர்களை நான் துவேஷிப்பேன், அவர்கள் நரகத்தில் விழட்டும் என்று வேண்டிக்கொள்வேன்'' இத்தியாதி. இம்மாதிரி உணர்ச் சிகளைக் கொண்ட நபர்கள் எவ்வளவு பயங்கரமான, சர்வ நாசகரமான சக்தியை வெளிப்படுத்த முடிந்திருக்கிறது! அப்படியிருந்தும் இவர்கள் சுயேச்சையான சித்தம் ஒன்றுங் கிடையாது என்று மறுத்தார்களே!

எப்போதும் ஏதாவது ஒன்றிலிருந்து விடுபடுவது தான் சுதந்திரம் என்றும் கட்டுத்தளையின் எதிர்மறையாகக் கருதப்படாத விடத்தில் சுதந்திரம் அர்த்தமற்றது என்றும் ஸீம்மெல் சொல்கிருர். அது வாஸ்தவந்தான். ஆனுல், சுதந்திரம் என்பது அவசியத்தைப் பற்றி உணர்வு கொண்டிருப்பது என்கிற—தத்துவஞானச் சிந்தனையின் மேதை நிறைந்த கண்டுபிடிப்புகளில் ஒன்ருகிய — ஆய்வுரையை நிராகரிப்பதற்கு இந்தச் சிறிய சாதாரண உண்மை ஆதாரமாகப் பயன்பட முடியாது. ஸீம்மெல் தந்துள்ள விளக்கம் மிகவும் குறுகியதாகும். வெளித் தளையிலிருந்து விடுபடுவதான சுதந்திரத்துக்கே அது பொருந்தும். இப்படிப்பட்ட கட்டுத்தளைகளைக் குறித்து நாம் பேசிக் கொண்டிருக்கும் வரை சுதந்திரத்தை அவசியத்துடன் ஒருமைநிலையில் வைத்துப்பார்ப்பது முற்றிலும் கேலிக்கிடமானதே. ஒரு ஜேப்படித்திருடன் உங்கள் கைக்குட்டையைத் திருடாதபடி நீங்கள் தடுத்துக் கொண்டிருக்கும் வரையில், உங்கள் எதிர்ப்பை அவன் மீருத வரையில், அவன் உங்கள் கைக்குட்டையைத் திருடுவதற்குச் சுதந்திரம் இல்லாமலிருக்கிருன். இது சுதந்திரத்தைப்பற்றி இருக்கக் கூடிய மிகவும் சாதாரணமான, மேல்போக்கான கருத்தோட்டமாகும். இத்துடன் இன்னெரு, ஒப்பிலாத ஆழமுள்ள கருத்தோட்டமும் இருக்கிறது. தத்துவஞான ரீதியிலே சிந்திக்கத் திறனில்லாதவர்களுக்கு இந்தக் கருத்து இருப்பதே தெரியாது. தத்துவஞான ரீதியிலே சிந்திக்கத் திறனுள்ளவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இருமைநிலை வாதத்தை விட்டொழித்து, இருமைநிலைவாதிகள்

கற்பித்துக்கொள்வதுபோல் 'தான்' என்கிற அகப் பொருளுக்கும் 'அது' என்கிற புறப்பொருளுக்கும் இடையே பிளவு ஏதுமில்லை என்று உணர்ந்து தெளியும்போது மட்டுமே இந்தக் கருத்தோட்டத் தைப் புரிந்துகொள்கிறார்கள்.

ருஷ்ய அகநிலைவாதி தனது கற்பனை லட்சியங் களை நமது முதலாளித்துவ யதார்த்தத்துக்கு எதி ராக நிறுத்துகிறான்; அதற்குமேல் அவன் போகிற தில்லை. இருமைநிலை என்ற சேற்றுக் குழியில் அகநிலை வாதிகள் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறார்கள். ருஷ்ய ''சீடர்'' எனப்படுவோரின்[5] லட்சியங்கள் முதலாளித்துவ யதார்த்தத்தை ஒத்திருப்பது அக நிலைவாதிகளின் லட்சியங்களைக் காட்டிலும் மிக மிகக் குறைவாகவே தான். இருந்தாலும், லட்சியங் களை யதார்த்தத்துடன் இணைப்பதற்குரிய பாலத் தை இந்தச் ''சீடர்கள்'' கண்டுபிடித்திருக்கிறார் கள். **ஒருமை நிலையின்** தரத்துக்கு இந்தச் ''சீடர்கள்'' உயர்ந்துவிட்டார்கள். அவர்களின் அபிப்பிராயத்தில் முதலாளித்துவம் என்பது தன் வளர்ச்சிப்போக்கிலே தனது எதிர் மறைக்குத் தானே கொண்டு போய்விடும், அவர்களது லட் சியங்களை, அதாவது ருஷ்ய ''சீடர்களின்''—மற் றைய நாட்டுச் ''சீடர்களின்'' கூடத் தான்— லட் சியங்களை, நடைமுறையில் சாதிப்பதில் கொண்டு போய்விடும். இதுதான் சரித்திரரீதியான **அவ சியம்** என்பது. இந்த **அவசியத்துக்கு "சீடன்" ஒரு கருவியாகப் பயன்படுகிறான்.** அவனது சமூக அந்தஸ்து, அந்த அந்தஸ்தினால் சிருஷ்டிக்கப்பட்ட அவனது மனப்பான்மை, மனோநிலை ஆகியவற்றின் காரண மாக **அவன் அப்படிப் பயன்பட்டுத் தீர வேண்டும்.** இதுவும்

அவசியத்தின் ஓர் அம்சமே. அவனது சமூக அந்தஸ்து அவனுக்கு இந்தத் தன்மையைத் தவிர வேறெதை யும் ஊட்டாததினல் அவன் அவசியத்தின் கருவி யாகப் பயன்படுவதோடல்லாமல், அப்படிப் பயன் படாமலிருக்க முடியாமலிருப்பதோடல்லாமல், அப் படிச் செய்வதற்குத்தான் அவன் பேரார்வத்துடன் விரும் புகிருன், அப்படி விரும்பாமல் அவனுல் இருக்கவும் முடி யாது. இது சுதந்திரத்தின் ஓர் அம்சம்; அது மட்டுமல்ல, அவசியத்திலிருந்து பிறந்த சுதந்திரத்தின் ஓர் அம் சம்; அதாவது, இன்னும் சரியாகச் சொல்வதென் ருல், அவசியத்தோடு ஒருமைப்பட்டுவிட்ட சுதந் திரம் அது, சுதந்திரமாக மாற்றப்பட்டுவிட்ட அவசி யம் அது.* இவ்வகைச் சுதந்திரமும்கூடச் சிறிதளவு கட்டுத்தளையினின்று பெறப்படும் சுதந்திரமே; அதோடுகூட, அது சிறிதளவு தடையின் எதிர்மறை யுமாகும். ஆழ்ந்த வரையறுப்புக்கள் மேல்போக் கான வரையறுப்புக்களைப் பொய்யென்று நிரூபிக்கிற தில்லை; அதற்குப் பதிலாக, அவற்றிற்கு அனுபந்த மாக இருந்து, அவற்றைத் தம்முள் கொண்டு பேணி வருகின்றன. ஆனல் இந்த விஷயத்தில் பரிசீலிக்கப் படும் கட்டுத்தளை எப்படிப்பட்டது, தடை எப்படிப் பட்டது? இது தெளிவானதுதான்: இருமைநிலைவா தத்தை அகற்றியெறியாதவர்களின் சக்தியை இழுத்

*"Die Notwendigkeit wird nicht dadurch zur Freiheit, dass sie verschwindet, sondern dass nur ihre noch innere Identität manifestiert wird" Hegel, "Wissenschaft der Logik". Nürnberg 1816, zweites Buch, S. 281. [*"அவசியம் என்பது, தான் மறைந்துவிடுகிற காரணத்தினுல் சுதந்திரமாக ஆகிவிடுகிறதில்லை. அது சுதந்திரமாக ஆவது, அதற்குள்ளிருக்கும் ஒருமைநிலை வெளிப்படுவதன் காரணத் தினுல் மட்டுந்தான்''—ஹெகல், ''தர்க்க சாஸ்திரம்,'' நியூ ரன்பர்க், 1816, இரண்டாம் தொகுதி, ப. 281.*]

துப்பிடிக்கும் நீதிக் கட்டுத்தளேதான்; லட்சியங்களுக்கும் யதார்த்தத்துக்குமிடையேயுள்ள பள்ளத்திற்குப் பாலம் அமைக்கமுடியாமலிருக்கிறவர்கள் அனுபவிக்கும் தடைதான். தத்துவஞானச் சிந்தனேயில் வீர முயற்சியினுல் ஒருவன் **இத்தகைய** சுதந்திரத்தைப் பெறும் வரையில் அவன் தனக்குத் தானே முற்றிலும் உரியவனுகிறதில்லே. அவன் அனுபவிக்கும் மனுேவேதனேகள் தனக்கு எதிராக நிற்கும் வெளிப்புற அவசியத்திற்கு அவன் செலுத்துகிற வெட்கக்கேடான காணிக்கையேயாகும். ஆனுல் இந்த வருத்தமிக்க அவமானகரமான தடையை அவன் அகற்றியவுடனே அவனுக்குப் புதிய, நிறைவான, இதுவரை அறிந்திராத வாழ்வு ஒன்று கிட்டுகிறது. அவனது **சுதந்திரமான** செய்கைகள் **அவசியத்தின் உணர்வுபூர்வமான, சுதந்திரமான** வெளியீடாக ஆகின்றன.* அதன் பிறகு அவன் ஒரு மகத்தான சமுதாய சக்தியாக ஆவான். அப்போது அவன்,

தெய்விகச் சீற்றத்தின் புயல் போல் வஞ்சகப்
பொய்யினேத் தகர்த்திடப் பொங்கி எழுவதை...**

எதுவும் தடுக்க முடியாது, தடுக்கவும் செய்யாது.

---

*இன்னெரு இடத்தில் பழைய ஹெகல் சிறப்பாகச் சொல்வதுபோல் “Die Freiheit ist dies, Nichts zu wollen als sich.” Werke, B. 12, S. 98. (“Philosophie der Religion”). *[''சுதந்திரம் என்பது தன்னேத்தானே நிலே நிறுத்துவதே தவிர அதற்கு மேல் ஒன்றுமில்லே'', நூல்கள், தொகுதி 12, ப. 98 (''மதத்தின் தத்துவஞானம்'').*

** நி. அ. நெக்ராஸவின் ஒரு கவிதையிலிருந்து. **பதிப்பாசிரியர்கள்.**

## III

மீண்டும் சொல்கிறோம்: ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி அறவே தவிர்க்க வியலாதது என்ற உணர்வு அந்த நிகழ்ச்சியின் மீது அனுதாபம் கொண்டிருக்கிறவனும் அந்த நிகழ்ச்சியைத் தோற்றுவித்த சக்திகளில் தானும் ஒருவன் என்று கருதிக் கொண்டிருக்கிறவனுமான ஒரு மனிதனின் செயல் சக்தியை அதிகரிக்கமட்டுமே செய்ய முடியும். ஆனால், அந்த நிகழ்ச்சி தவிர்க்க வியலாதது என்ற உணர்வுடன் அந்த மனிதன் கைகட்டி வாளாவிருந்துவிட்டால் தனக்குக் கணக்குத் தெரியாது என்பதைத் தான் காட்டிக்கொள்வான். எப்படி? A என்கிற நிகழ்ச்சி S என்கிற ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைத்தொகையின் காரணமாக அவசியமாக நிகழ்ந்து தீர வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். மேலும், இந்தச் சூழ்நிலைத் தொகையில் ஒரு பகுதி ஏற்கனவே சமைந்திருக்கிறது என்றும் அதன் பாக்கிப்பகுதி T என்கிற ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் சமைந்துவிடும் என்றும் என்னிடம் நிரூபித்துவிட்டீர்கள் எனவும் வைத்துக் கொள்வோம். அந்த நிகழ்ச்சியின்பால் மிக அனுதாபமுள்ள நான் அதை உணர்ந்து தெளிந்தவுடன் ''பலே பேஷ்'' என்று சொல்லிவிட்டு நீங்கள் முன்னறிவித்த நிகழ்ச்சி நடக்கவிருக்கிற அந்த நல்ல நாள் வரும்வரை தூங்கிவிடுகிறேன். விளைவு என்ன

வாகும்? இது தான்: நீங்கள் போட்ட கணக்கில் A என்ற நிகழ்ச்சியைத் தோற்றுவதற்கு அவசியமான S என்ற சூழ்நிலைத்தொகையில் எனது நடவடிக்கைகளும் அடங்குமல்லவா? அந்த எனது நடவடிக்கைகளை a என்று அழைப்போம். ஆனால் நான் தூக்கத்தில் ஆழ்ந்து கிடப்பதால் T என்ற குறித்த காலத்தில் அந்த நிகழ்ச்சி நேரிடுவதற்கு அவசியமான சாதகமான சூழ்நிலைத்தொகை S ஆக இராது, S—a ஆகத்தானிருக்கும். இது நிலைமையை மாற்றிவிடுகிறதல்லவா? ஒரு வேளை எனது ஸ்தானத்தில் இன்னொருவன் வந்துவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். அவனும் செயலற்றிருக்கவேதான் இருந்திருப்பான்; ஆனால் நான் அசட்டையாயிருப்பதைப் பார்த்து அது மகா மோசம் என்று அவனுக்குப் பட்டுச் செயலில் இறங்கியிருப்பான் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானல் a என்கிற பலத்தின் ஸ்தானத்தில் b என்ற பலம் வந்துசேரும். மேலும் b க்குச் சமமாக a இருந்தால் (a=b) A என்ற நிகழ்ச்சி நேரிடுவதற்கு அவசியமான சாதகமான சூழ்நிலைத்தொகை S என்ற தொகைக்குச் சமமாக இருந்துவிடும். கடைசியிலே T என்ற குறித்த காலத்தில் A என்ற நிகழ்ச்சி சம்பவித்துவிடும்.

ஆனல் ஒன்று. எனது பலம் பூஜ்ஜியம் அல்ல என்று வைத்துக்கொள்வோம். நான் சாதுரியமும் திறமையும் உள்ள ஊழியனாக இருந்து, எனது ஸ்தானத்தில் வேறு யாரும் வராதிருந்தால், S என்ற முழுத் தொகை நமக்குக் கிடைக்காது, A என்ற நிகழ்ச்சி நாம் குறித்த காலத்தைவிடப் பின்னல் நேரிடும், அல்லது நாம் நினைத்ததைப்போல் அவ்வளவு பூர்ண

மாக நிகழாது, அல்லது அறவே நிகழாமற் போனாலும் போய்விடலாம். இது வெட்டவெளிச்சமான சங்கதி. இதை நான் புரிந்துகொள்ளாவிட்டால், படையணியிலிருந்து நான் விலகியோடியபின்பும் S என்ற சூழ்நிலைத்தொகை S என்ற அளவாகவே இருக்கும் என்று நான் நினைத்தால் அதற்கு ஒரே காரணம் எனக்குக் கணக்குப் போட முடியவில்லை என்பது தான். ஆனால் எனக்கு மட்டுமா கணக்குப் போடமுடியவில்லை? T என்ற குறித்த காலத்தில் S என்ற தொகை நிச்சயமாகச் சமையும் என்று முன் கூட்டிச் சொன்ன நீங்களும் உங்களோடு பேசியபின் நான் தூங்கப் போய்விடுவேன் என்று முன்கூட்டி அறியவில்லை. கடைசிவரை நான் ஒரு நல்ல ஊழியனாக இருப்பேன் என்றுதான் நீங்கள் திடமாக நம்பினீர்கள். அந்தப் பலம் நீங்கள் நினைத்ததைப்போல் அவ்வளவு நம்பக் கூடியதல்ல என்று காட்டிவிட்டது. எனவே உங்கள் கணக்கும் தப்பாகிவிட்டது. ஆனால் கணக்கில் நீங்கள் ஒரு தப்பும் செய்யவில்லை என்றும் எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டு தான் இருந்தீர்கள் என்றும் வைத்துக்கொள்வோம். அப்படியானால் உங்கள் கணிப்புகள் பின்வரும் வடிவம் பெற்றிருக்கும்: T என்ற குறித்த காலத்தில் S என்ற தொகை சமைந்திருக்கும் என்று சொல்கிறீர்களல்லவா? நான் விலகிச் சென்றது ஒரு **கழித்தல் அளவாக** இந்தத் தொகையில் சேர்ந்திருக்கும்; மேலும், தமது முயற்சிகளும் லட்சியங்களும் புறநிலை வகை அவசியத்தின் அகநிலைவகை வெளியீடுதான் என்ற திடநம்பிக்கையானது மனோபலமிக்க மனிதர்களிடையே உண்டாக்கும் உற்சாகமும் இந்

தத் தொகையில் ஒரு கூட்டல் அளவாக அடங்கியிருக்கும். அப்படியேற்பட்டால், S என்ற தொகை நீங்கள் குறித்த காலத்தில் நிஜமாகவே கிடைக்கும், A என்ற நிகழ்ச்சியும் நேரிடும். இது தெளிவு என்றே நான் நினைக்கிறேன். சரி, இது தெளிவு என்ருல், பின் A என்ற நிகழ்ச்சி தவிர்க்க முடியாதது என்ற கருத்தால் நான் மனம் குழம்பிப் போனதற்குக் காரணமென்ன? அது என்னைச் செயலறச்செய்யுமென்று எனக்குத் தோன்றியதேன்? அதைப்பற்றி விவாதிக்கையில் சாதாரண கூட்டல்-கழித்தல் கணக்கு விதிகளைக்கூட நான் மறந்து போனதேன்? ஒரு வேளை நான் வளர்ந்த சந்தர்ப்பச் சூழ்நிலைமைகளின் காரணமாகச் செயலின்மையின் பால் எனக்கு ஏற்கனவே மோகம் இருந்திருக்கலாம்; நான் உங்களோடு பேசிய பேச்சு மெச்சத்தக்க இந்த மோகத்தை வழிந்தோடச் செய்திருக்கலாம். அவ்வளவுதான். இந்த அர்த்தத்தில் தான்—எனது மனசின் தொளதொளாத் தன்மையையும் தகுதியின்மையையும் வெளிப்படுத்துவதற்குரிய காரணம் என்ற வகையில் தான்—அவசியத்தைப் பற்றிய உணர்வு இங்கே காட்சி யளித்தது. அந்தத் தொள தொளாத் தன்மைக்கே இதுதான் காரணம் என்று கருதவே முடியாது. அதற்குக் காரணம் நான் வளர்ந்த சந்தர்ப்பச் சூழ்நிலைமைகளே. ஆகவே... ஆகவே கணிதம் என்பது மரியாதைக்குரிய, உபயோகமுள்ள ஒரு விஞ்ஞானம் ஆகும். தத்துவ ஞானிகள் கூட, அதன் விதிகளை மறக்கலாகாது; குறிப்பாகத் தத்துவஞானிகள் தான் அதை மறக்கலாகாது என்று நான் சொல்வேன்.

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி தவிர்க்க முடியாதது என்ற உணர்வு அந்த நிகழ்ச்சியினிடம் அனுதாபம்

இல்லாது அதை எதிர்க்கும் ஒரு பலசாலியிடம் என்ன விளைவை உண்டாக்கும்? இங்கே நிலைமை கொஞ்சம் வித்தியாசப் படுகிறது. அவனுடைய எதிர்ப்புச் சக்தியின் வீரியத்தைத் தளர்த்தும் படி அது செய்யலாம். இது முற்றிலும் சாத்தியம். ஆனால் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி தவிர்க்க முடியாதது என்று எப்போது அதன் எதிரிகள் திடமாக முடிவு கட்டுவார்கள்? அதற்குரிய அனுகூலமான சூழ்நிலைமைகள் எண்ணிக்கையிலும் பலத்திலும் அதிகமாக விருக்கும் போதுதான். அந்த நிகழ்ச்சி தவிர்க்கமுடியாததென்று அதன் எதிரிகள் உணர்ந்து கொள்வது என்ற விஷயமும் சரி, அவர்களின் சக்தியைத் தணித்தலும் சரி—இரண்டுமே அந்த நிகழ்ச்சிக்கு அனுகூலமாயிருக்கிற சந்தர்ப்பச் சூழ்நிலைமைகளின் பலத்தைத்தான் காட்டுகின்றன. ஆகவே இப்படிப்பட்ட விஷயங்கள், தம் முறைக்கு, அனுகூலமான சூழ்நிலைமைகளின் ஒரு பகுதியாக இருக்கின்றன.

ஆனால், அந்த நிகழ்ச்சிக்கு எதிரானவர்கள் எல்லோருமே தமது எதிர்ப்பின் வீரியத்தைக் குறைத்துக்கொள்ள மாட்டார்கள். அந்த நிகழ்ச்சி தவிர்க்க முடியாதது என்ற உணர்வு அவர்களில் சிலரைத் தமது எதிர்ப்பை அதிகப்படுத்தும் படி செய்யும்; அது அப்போது நம்பிக்கை வறட்சியின் மேலெழுந்த எதிர்ப்பாக மாறி விடுகிறது. பொதுவான வரலாறு, குறிப்பாக ருஷ்ய வரலாறு, இப்படிப்பட்ட எதிர்ப்பு பற்றிய, போதனைக்குரிய பல உதாரணங்களைத் தருகின்றது. எமது உதவியில்லாமலேயே வாசகர்கள் இவற்றை ஞாபகப்படுத்திக்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

இங்கே திருவாளர் கரேயெவ் அவர்கள் குறுக்கிடுகிறார். சுதந்திரத்தைப் பற்றியும் அவசியத்தைப்பற்றியும் நாம் கொண்டிருக்கும் கருத்துக்களை அவர் ஒத்துக்கொள்ளவில்லை; ஊக்கமிகுந்த பலசாலிகளின் ''மட்டுமீறிய போக்குக்கு'' நாம் பாரபட்சம் காட்டுவது அவருக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும், தனிநபர் ஒரு மகத்தான சமுதாயச் சக்தியாக இருக்கக் கூடும் என்ற கருத்து நமது பத்திரிகையில் கண்டிருப்பதைக் குறித்து அவருக்குத் திருப்தியாயிருக்கிறது. ''அதைத்தான் நான் எப்போதும் சொல்லிவந்திருக்கிறேன்!'' என்று மதிப்புக்குரிய பேராசிரியர் மகிழ்ச்சியோடு கூவுகிறார். அது வாஸ்தவந்தான். திரு. கரேயெவும் சரி, எல்லா அகநிலைவாதிகளும் சரி, வரலாற்றில் தனிநபருக்கு ஒரு மிக முக்கியமான பாத்திரத்தை எப்போதுமே கற்பித்து வந்திருக்கிறார்கள். அது ஒரு காலத்தில் முன்னணி வாலிபர்களிடையே கணிசமான ஆதரவு பெற்றிருந்தது. பொது நலனுக்காகத் தன்னலங் கருதாது தொண்டாற்ற வேண்டும் என்ற ஆசை அவர்களிடம் குடிகொண்டிருந்தது. ஆகவே அவர்கள் தனிநபரின் முன்முயற்சிக்கு அபார முக்கியத்துவம் கற்பிக்க விரும்பியது இயல்புதான். ஆனால், சாராம்சத்தில் பார்த்தால், வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரத்தைப் பற்றிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அல்லது முறையாக வரையறுப்பதற்குக்கூட, அகநிலைவாதிகளால் முடியவேயில்லை. சமுதாய-சரித்திர முன்னேற்றத்தின் விதிகள் வகிக்கும் செல்வாக்குக்கு எதிராக அவர்கள் ''விமர்சனக் கண் கொண்டு சிந்திக்கும் தனிநபர்களின்''

நடவடிக்கைகளை நிறுத்தினர். அதன் வழியாக, காரணப் பொருட்கள் பற்றிய ஒரு புதுவகைப்பட்ட தத்துவத்தை அவர்கள் சிருஷ்டித்தார்கள். விமர்சனக் கண்கொண்டு சிந்திக்கும் தனிநபர்கள் என்பது இந்த முன்னேற்றத்துக்கு ஒரு காரணப் பொருள்; அதன் சொந்த விதிகள் என்பது இன்னொரு காரணப் பொருள். இது ஒரு தீவிரமான அசம்பாவிதத்தைத் தோற்றுவித்தது. செயலாற்றி வந்த ''தனிநபர்களின்'' கவனம் உடனடியான நடைமுறைப் பிரச்சினைகளில் லயித்ததனுல் தத்துவஞானப் பிரச்சினைகளைக் கவனிக்க நேரமில்லாதிருந்தவரை இந்த அசம்பாவிதத்தைச் சகிக்க முடிந்தது. ஆனுல் 1880-90ம் ஆண்டுகளில் அமைதி[6] ஏற்பட்டு, சிந்திக்கும் திறனுள்ளவர்களுக்கு அது தத்துவஞானச் சிந்தனைக்குத் தேவையான ஒய்வு நேரத்தைத் தற்செயலாக வழங்கியது. அன்றிருந்து அகநிலைவாதிகளின் போதனை எல்லாப் பக்கங்களிலும் பிய்த்துக்கொண்டு வந்துவிட்டது; அக்காக்கிய் அக்காக்கியெவிச்சின்[7] புகழ் பெற்ற மேலங்கி மாதிரி அது துண்டு துண்டாக இற்று விழுந்தும் வருகிறது. ஒட்டுத்தையல் அத்தனையும் உபயோகமில்லாது போயிற்று. அகநிலை வாதம் வெளிப்படையாகவே பழுதுள்ள, அறவே பழுதுள்ள, ஒரு தத்துவம் என்று சிந்திக்கும் திறனுள்ளவர்கள் ஒருவர்பின் ஒருவராக அதை நிராகரிக்கத் தொடங்கினர். ஆனுல், இம்மாதிரி விஷயங்களில் எப்பொழுதும் நடக்கிறதுபோலவே, இந்தத் தத்துவத்துக்கு எதிராகக் கிளம்பிய போக்கும் அதன் எதிரிகளை எதிர்க் கோடிக்கு ஓடச் செய்தது. வரலாற்றில் ''தனிநபருக்கு'' ஆனமட்டும் விரிந்த பாத்திரத்தைக்

கற்பிக்க முயற்சித்து மனித குலத்தின் சரித்திர முன்னேற்றம் விதிக்குட்பட்டியங்கும் ஓர் இயக்கப் போக்கு என்பதை அகநிலைவாதிகள் சிலர் அங்கீகரிக்க மறுத்து வந்த அதே சமயத்தில், அவர்களுக்கு எதிரிகளாகக் கடைசியாக வந்திருப்பவர்களில் சிலர் இந்த முன்னேற்றத்தின் விதிக்குட்பட்டு இயங்கும் தன்மையை இன்னும் கூர்மையாக வெளியிட முயற்சித்து, **வரலாற்றைச் சிருஷ்டிப்பவர்கள் மனிதர்கள் தான்** என்பதையும், ஆகவே வரலாற்றில் **தனிநபர்களின் நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெறுமலிருக்க முடியாது** என்பதையும் மறக்கத் தயாராயினர் என்று தெரிகிறது. தனிநபரை அவர்கள் quantité négligeable* என்று பிரகடனம் செய்திருக்கின்றனர். தத்துவரீதியிலே பார்த்தால், அகநிலைவாதிகளில் கூடுதலாக ஆர்வமுள்ளவர்கள் எட்டியுள்ள அந்தக் கோடியைப் போலவே இவர்களின் இந்தக் கோடியும் அனுமதிக்கத் தகாதது. **எதிருரைக்காக முதலுரையைப்** பலியிடுவது எப்படிச் சரியில்லையோ, அப்படியே **முதலுரைக்காக எதிருரையை** மறப்பதும் சரியில்லைதான். அவ்விரண்டிலும் அடங்கியுள்ள உண்மைக்குரிய அம்சங்களை ஒரு **கூட்டுரையாக** இணைப்பதில் நாம் வெற்றிபெறும் போதுதான் சரியான பார்வை கிடைக்கும்.**

* [பொருட்படுத்த வேண்டாத அற்ப அம்சம்]

** ஒரு கூட்டுரைக்காக நாம் முயற்சிக்கையில் அதே திரு. கரேயெவ்தான் நம்மை முந்திக்கொண்டிருக்கிறார், ஆனால், துரதிர்ஷ்டவசமாக, உடலும் ஆன்மாவும் கொண்டிருப்பவன்தான் மனிதன் என்ற உண்மையை ஒத்துக்கொள்வதற்கு மேல் அவர் போகவில்லை.

## IV

இந்தப் பிரச்சினையில் நாம் வெகு காலமாக அக்கறை செலுத்தி வந்திருக்கிறோம். அதைச் சமாளிப்பதற்கு நம்முடன் சேரும்படி வாசகர்களை அழைக்க வெகு நாளாக விரும்பி வந்திருக்கிறோம். ஆனால், சில ஐயங்கள் நம்மை அப்படிச் செய்ய விடவில்லை. ஒரு வேளை இதை வாசகர்கள் தாங்களாகவே ஏற்கனவே தீர்த்துக் கொண்டிருப்பார்களோ, நமது அழைப்பு காலங்கடந்ததாகி விட்டிருக்குமோ என்று நாம் அஞ்சினோம். இப்போது இத்தகைய ஐயங்கள் நமக்கில்லை. ஜெர்மன் சரித்திராசிரியர்கள் நமது ஐயங்களைப் போக்கிவிட்டார்கள். தமாஷல்ல, நிஜமாகத்தான் இதைச் சொல்கிறோம். விஷயம் என்ன வென்றால், சமீபகாலத்தில் வரலாற்றில் மகாபுருஷர்கள் வகிக்கும் ஸ்தானத்தைப்பற்றி ஜெர்மன் சரித்திராசிரியர்களிடையே ஓரளவுக்குக் காரசாரமான சர்ச்சை நடந்து வந்திருக்கிறது. அவர்களில் சிலர் சரித்திர வளர்ச்சிக்கு இந்த மகாபுருஷர்களின் அரசியல் நடிவடிக்கைகள் தாம் முதன்மையான, அநேகமாய் ஒரே யொரு மூலகாரணம் என்று கருத விரும்பினர். ஆனல் மற்றவர்கள் அது ஒருதலைப்பட்சமான கருத்து என்றும் சரித்திர விஞ்ஞானம் என்பது மகாபுருஷர்களின் நடவடிக்கைகளை மட்டுமின்றி, அரசியல் வரலாற்றை மட்டு

மின்றி, மொத்தத்தில் சரித்திர வாழ்வு முழுவதையும் (das Ganze des geschichtlichen Lebens) கவனத்தில் வைத்திருக்க வேண்டும் என்று சாதித்து வந்திருக்கின்றனர். பின்சொன்ன போக்கின் பிரதிநிதி தான் கார்ல் லாம்ப்ரேஹ்ட்; இவர் ''**ஜேர்மன் மக்களின் வரலாறு**'' என்ற நூலின் ஆசிரியர்; இதை பி. நிக்கலாயெவ் ருஷ்ய மொழியில் மொழிபெயர்த்துள்ளார். லாம்ப்ரேஹ்டின் விரோதிகள் அவர் ''**கூட்டுத்துவவாதி**'' என்றும் லோகாயதவாதி என்றும் குற்றஞ் சாட்டினர். விவாதத்தை முடிக்கையில் லாம்ப்ரேஹ்ட் அவர்களே குறிப்பிட்டபடி ''சோஷல்-டெமாக்ரடிக் நாஸ்திகர்களுக்கு'' — horribile dictu!* — சமமாக அவர் வைக்கப் பட்டார். லாம்ப்ரேஹ்டின் **கருத்துக்களை** நாம் தெரிந்து கொண்ட போது இந்த அப்பாவி அறிஞர் மீது பொழியப்பட்ட குற்றச்சாட்டுகள் முற்றிலும் ஆதாரமற்றவை எனக் கண்டுகொண்டோம். அதே சமயத்தில் வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரம் பற்றிய பிரச்சினையைத் தற்காலத்திய ஜெர்மன் சரித்திராசிரியர்களால் தீர்க்க முடியாது என்றும் முடிவுக்கு வந்தோம். அதன்பிறகு, சில ருஷ்ய வாசகர்களுக்கும் இது தீர்க்கப்படாத பிரச்சினையாகவே இருக்கும் என்று வைத்துக்கொள்ள நமக்கு உரிமையுண்டு என்றும் அதைப் பற்றித் தத்துவ ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் சுவாரசியமுள்ள விஷயம் கொஞ்சமாவது சொல்ல முடியும் என்றும் நாம் கருதினோம்.

தாங்கள் வாழ்ந்த சரித்திரச் சூழ்நிலையில் ஆற்

---

* [சொல்லவே பயமாயிருக்கிறது!]

றிய தமது சொந்த நடவடிக்கைகளைப் பற்றி அரசியல் பிரமுகர்கள் தாங்களே வெளியிட்ட அபிப்பிராயங்களை யெல்லாம் ஒரு முழுத்தொகுப்பில் (அவர் சொல்கிறபடி ''eine artige Sammlung'') லாம்ப்ரேஹ்ட் திரட்டினர். ஆனால் தமது வாதப் போரில் அவர் **பிஸ்மார்க்கின்** சொற்பொழிவுகளையும் அபிப்பிராயங்களையும் குறிப்பதோடு தற்போதைக்கு நின்றுகொண்டார். 'இரும்பு சான்ஸலர்'* வடக்கு ஜெர்மன் ரைக்ஸ்டாக்கில் 1869, ஏப்ரல் 16ம் தேதியன்று சொன்ன பின்வரும் சொற்களை அவர் மேற்கோள் காட்டினர்: ''கனவான்களே! நாம் சென்ற காலத்திய வரலாற்றையும் புறக்கணிக்க முடியாது; எதிர்காலத்தையும் சிருஷ்டிக்க முடியாது. காலம் கழிவதைத் துரிதப்படுத்துவதற்குரிய வழி என்று கடிகாரத்தின் முள்ளை முன்நோக்கித் திருப்பி விடும்படி ஒரு தவருன நினைப்பு சிலரைத் தூண்டுகிறது. இந்தத் தவறைப்பற்றி உங்களை நான் எச்சரிக்க விரும்புகிறேன். நான் சாதகப்படுத்திக்கொண்ட நிகழ்ச்சிகளின் மீது எனக்கிருக்கிற செல்வாக்கு சகஜமாகவே மிகைப்படுத்திச் சொல்லப்படுகிறது. எனினும் நான் சரித்திரத்தைச் **சிருஷ்டிக்க** வேண்டும் என்று என்னை யாரும் கோர மாட்டார்கள். நானும் நீங்களும் சேர்ந்து இந்த உலகத்தையே எதிர்க்க முடியும். ஆனால் நான் உங்களோடு சேர்ந்து கொண்டு பாடுபட்டாலும்கூட என்னால் சரித்திரத்தைச் சிருஷ்டிக்கமுடியாது. நம்மால் சரித்திரத்தைச் சிருஷ்டிக்க முடியாது; அது சிருஷ்டிக்கப்படுகையில்

---

* அதாவது பிஸ்மார்க், — **பதிப்பாசிரியர்கள்**

நாம் காத்துக்கொண்டுதான் இருக்க வேண்டும். விளக்குச் சூட்டைக் காட்டி நாம் பழத்தைச் சீக்கிர மாகப் பழுக்கும்படி செய்யமுடியாது. மேலும் பழுக் குமுன்பே அதை நாம் பறித்தாலும் அதன் வளர்ச் சியைத் தடுத்து அதைக் கெடுத்துவிடுவோம்.'' பிரெஞ்சு-ஜெர்மன் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் பிஸ்மார்க் பலதடவைகளில் வெளியிட்ட அபிப்பிராயங்களையும் ஜொலியின் சாட்சியத்தை மேற்கோள் காட்டி, லாம்ப்ரேஹ்ட் குறிப்பிடுகிருர். இங்கேயும் இந்த அபிப்பிராயங்களினூடே இழை யோடும் கருத்து இது தான்: ''மகத்தான சரித்திர நிகழ்ச்சிகளை நம்மால் சிருஷ்டிக்க முடியாது. விஷ யங்கள் போகும் இயல்பான போக்குக்குத் தகுந்த மாதிரி நாம் நடந்துகொள்ள வேண்டும்; எது ஏற் கனவே பழுத்து இருக்கிறதோ, அதைப்பற்றி மட் டும் நிச்சயம் செய்துகொள்வதோடு நாம் நின்று விட வேண்டும்.'' இது ஆழ்ந்த, முழுமையான உண் மை என்று லாம்ப்ரேஹ்ட் கருதுகிருர். நிகழ்ச்சிக ளின் அடியாழத்துக்குள் பார்வை செலுத்தி, ஒரு குறு கிய கால அளவுக்குள்மட்டும் தனது திருஷ்டியைக் குறுக்கிவிடாமலிருந்தால், நவீனகாலத்திய சரித்தி ராசிரியர்கள் யாருமே இதைத் தவிர வேருகச் சிந் திக்க முடியாது என்பது அவருடைய அபிப்பிராயம். இயற்கைப் பொருளாதாரத்தை நோக்கி பிஸ்மார்க் ஜெர்மனியைப் பின்னுக்குச் செலுத்தியிருக்க முடி யுமா? அதிகாரத்தின் உச்சியில் அவர் இருந்த காலத் தில் கூட அவரால் இதைச் செய்திருக்க முடியாது. பலம் மிகுந்த தனிநபர்களைவிடப் பொதுவான சரித் திரச் சூழ்நிலைமைகள் அதிக பலம் படைத்தவை.

ஒரு மகாபுருஷனுக்கு அவனது சகாப்தத்தின் பொதுத் தன்மையானது ''**அனுபவத்தில் கிடைத்த அவசியமாக**'' அமைகிறது.

தனது கருத்தோட்டம் **சர்வவியாபகமானது** என்றுசொல்லி லாம்ப்ரேஹ்ட் இப்படி வாதாடுகிறார். இந்த ''சர்வவியாபகமான'' கருத்தோட்டத்தின் பலவீனமான அம்சத்தைக் கண்டுகொள்வதில் கஷ்டமெதுவுமில்லை. அவர் குறிப்பிடுகிற பிஸ்மார்க்கின் அபிப்பிராயங்கள் ஓர் உளவியல் தஸ்தாவேஜு என்ற வகையில் மிகவும் சுவாரசியமாக இருக்கின்றன. காலஞ் சென்ற ஜெர்மானியச் சான்ஸலர் பிஸ்மார்க்கின் நடவடிக்கைகளின் மீது ஒருவனுக்கு அனுதாபமில்லாமலிருக்கலாம்; ஆனால் அவை அற்பசொற்பமானவை என்றும், பிஸ்மார்க் ''சாந்திவாதத்துக்கு''ப் பெயர் பெற்றவர் என்றும் யாராலும் கூற முடியாது. ''பிற்போக்கின் சேவகர்கள் சொல்வன்மையுடையவர்களல்ல; ஆனால் முற்போக்குக்கு அவர்களைப் போன்ற சேவகர்கள் இருக்கும்படியாக ஆண்டவன் அருள்புரிவாராக'' என்று அவரைக் குறித்துத்தான் லஸ்ஸால் கூறினார். அப்படியிருந்தும், இந்த மனிதர்—சமயங்களில் உண்மையிலே இரும்பு பலத்தைக் காட்டிய இந்த மனிதர்—விஷயங்களின் இயல்பான போக்குக்கு எதிரே தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று கருதினார்; தான் கேவலம் சரித்திர வளர்ச்சியின் ஒரு சாதாரணக் கருவி மட்டுமே என்று தன்னைக் கருதிக்கொண்டார் என்று தெரிகிறது. அவசியம் என்ற நோக்கில் நிகழ்ச்சிகளைப் பார்க்க முடிகிற போதே ஒருவன் அதே சமயத்தில் ஊக்கம் மிக்க அரசியல்வாதியாகவும் இருக்க

முடியும் என்பதைத்தான் இது மீண்டும் நிரூபிக்கிறது. ஆனால் இந்த ஒரே ஓர் அம்சத்தில் மட்டும்தான் பிஸ்மார்க்கின் அபிப்பிராயங்கள் சுவாரசியமாயிருக்கின்றன. வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரம் என்னவென்ற கேள்விக்கு அவற்றை ஒரு விடையாகக் கருத முடியாது. பிஸ்மார்க்கின் அபிப்பிராயத்தில் சம்பவங்கள் தாமாக நடக்கின்றன, அவை நமக்குத் தயாரித்துத் தருவதைத்தான் நாமே நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் இந்த ''நிச்சயப்படுத்திக்கொள்ளும்'' ஒவ்வொரு செய்கையும் அதே சமயத்தில் ஒரு சரித்திர நிகழ்ச்சியாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கும் தாமாக நேரிடும் நிகழ்ச்சிகளுக்கும் என்ன வித்தியாசம்? யதார்த்தத்தில் பார்த்தால், அநேகமாக ஒவ்வொரு சரித்திர நிகழ்ச்சியும் அதே சமயத்தில் முன்பே நடந்தேறிய வளர்ச்சியின் ஏற்கனவே பழுத்துவிட்ட பழங்களை யாராவது ஒருவர் ''நிச்சயப்படுத்திக்கொள்ளும்'' செய்கையாகவும் எதிர்காலப் பழங்களைப் பழுக்கச் செய்துவருகிற நிகழ்ச்சிச் சங்கிலியின் ஒரு கண்ணியாகவும் இருக்கிறது. ''நிச்சயமாக்கிக்கொள்ளும்'' செய்கைகளை விஷயங்களின் இயல்பான போக்குக்கு எதிராக எப்படி நிறுத்த முடியும்? வரலாற்றில் செயல் புரிகிற தனிநபர்களும் தனிநபர்க் குழுக்களும் சர்வவல்லமை படைத்தவர்களாக ஒருபொழுதும் இருந்ததுமில்லை, ஒருபொழுதும் இருக்கப் போவதுமில்லை என்றே பிஸ்மார்க் கூற விரும்பினர் என்று தெரிகிறது. அதில் ஒரு துளிகூட சந்தேகமில்லை. இருந்தாலும் அவர்களின் சக்தி—அது சர்வவல்லமை பொருந்தியதல்ல, நிஜந்தான்—

எதைச் சார்ந்திருக்கிறது என்பதைத்தான் நாம் அறிய விரும்புகிறோம்; எந்தச் சூழ்நிலைமைகளில் அது வளர்கிறது, எந்தச் சூழ்நிலைமைகளில் அது சுருங்குகிறது என்பதைத்தான் நாம் அறிய விரும்புகிறோம். பிஸ்மார்க்கும் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கவில்லை. அவரை மேற்கோள் காட்டி 'சர்வவியாபகமான'' வரலாற்றுக் கண்ணோட்டத்தை ஆதரிக்கும் மெத்தப்படித்த வித்தகர்கூடப் பதிலளிக்கவில்லை.

இன்னும் நன்றாகப் புரியக் கூடிய மேற்கோள்களை லாம்ப்ரேஹ்ட் தருகிறார் என்பது நிஜம்தான்.* உதாரணமாக பிரான்ஸில் தற்காலத்திய சரித்திர விஞ்ஞானத்தின் தலைசிறந்த பிரதிநிதிகளில் ஒருவரான **மொனோவின்** பின்வரும் சொற்களை அவர் மேற்கோள்காட்டுகிறார்: ''பொருளாதார நிலைமைகளிலும் சமுதாய ஸ்தாபனங்களிலும் ஏற்பட்டுவருகிற மகத்தான மெதுவான மாறுதல்கள் தான், மனிதகுலத்தின் பரிணாமத்தில் உண்மையிலேயிருக்கிற சுவாரசியமான, நிரந்தரமான பகுதியாகும்; இந்தப் பகுதியைத்தான் ஓரளவுக்கு விதிகளாக்கி வரையறுக்கவும் ஓரளவுக்குக் கறாராகப் பகுத்தாராயவும் கூடும். இந்த மகத்தான மெதுவான மாறுதல்களைத் தீட்டிக்காட்டாமல், மனித நடவடிக்கை

---

* தத்துவஞானம், சரித்திரம் ஆகியவை பற்றிய லாம்ப்ரேஹ்டின் மற்றக் கட்டுரைகளை விட்டுவிட்டு இங்கே நாம் அவரது „Der Ausgang des Geschichtswissenschaftlichen Kampfes", „Die Zukunft", 1897, எண் 44. [''சரித்திர இயலின் போராட்டங்களின் விளைவு'', ''வருங்காலம்'' 1897, எண் 44.] என்ற கட்டுரையையே குறிப்பிடுகிறோம்.

களில் உள்ள பிரகாசமான, ஆரவாரமிக்க, தாற்காலிகமான வெளித் தோற்றங்களிலும் மாபெரும் நிகழ்ச்சிகளிலும் மாபெரும் மனிதர்கள் மீதும் மட்டும் கவனத்தைச் செலுத்துவது தான் சரித்திராசிரியர்களுக்கு மிகவும் வழக்கமாகி விட்டிருக்கிறது. நிஜமாகப் பார்த்தால், முக்கியமான நிகழ்ச்சிகளும் மனிதர்களும் முக்கியமா யிருப்பது மேலே சொன்ன பரிணாமத்தின் பல்வேறு தருணங்களின் அறிகுறிகளாகவும் உருவகங்களாகவும் இருக்கிற தொன்றினால் தான். ஆனால், சரித்திர வகைப்பட்டவை என்று அழைக்கப்படுகிற பெரும்பாலான நிகழ்ச்சிகளுக்கும் நிஜமான சரித்திரத்துக்கும் உள்ள சம்பந்தம் எந்த மாதிரி என்றால் கடல் மீதிருந்து கிளம்பி எழும்பி, வெளிச்சத்தில் ஒரு வினாடி பளிச்சிட்டு, மணற்கரையில் மோதிச்சிதறி, இருந்த இடம் தெரியாமற் போய்விடுகிற அலைகளுக்கும் ஏற்றவற்றங்களின் ஆழ்ந்த நிரந்தர இயக்கத்துக்கும் இருக்கிற சம்பந்தம் மாதிரி தான்.'' மொனோவின் இவ்வார்த்தைகளில் ஒவ்வொன்றையும் தான் ஆதரிக்கத் தயார் என்று லாம்ப்ரேஹ்ட் சொல்கிறார். ஜெர்மானிய அறிஞர்கள் பிரெஞ்சு அறிஞர்களுடன் ஒத்துப் போகத் தயங்குவதும் பிரெஞ்சு அறிஞர்கள் ஜெர்மானிய அறிஞர்களுடன் ஒத்துப்போகத் தயங்குவதும் பிரசித்தமான விஷயம். அதனால் தான் பிரேன் என்ற பெல்ஜிய நாட்டு சரித்திராசிரியர் “Revue historique”* என்ற பத்திரிகையில் சரித்திரத்தைப் பற்றிய மொனோவின் கருத்

* [''வரலாறு பற்றிய விமர்சனம்'']

தோட்டம் லாம்ப்ரேஹ்டின் கருத்தோட்டத்துடன் ஒன்ருகப் பொருந்துவதை வலியுறுத்திக் காட்டுவதில் குறிப்பாகச் சந்தோஷப்படுகிருர். ''இந்தக் கருத்தொற்றுமை மிகவும் முக்கியத்துவமுள்ளதாகும்'' என்றும் ''எதிர்காலம் இந்தப் புதிய கருத்தோட்டத்துக்குத் தான் சொந்தம் என்பதை இது காட்டுகிறது என்பது தெளிவு'' என்றும் அவர் கூறுகிருர்.

## V

திரு. பிரேன் அவர்கள் எதிர்பார்க்கும் இனிய நம்பிக்கைகளே நாம் ஏற்கவில்லே. திரு. மொனே அவர்களின் கருத்தோட்டங்கள், குறிப்பாக திரு. லாம்ப்ரேஹ்ட் அவர்களின் கருத்தோட்டங்கள், தெளிவற்றவை, நிர்ணயமற்றவை. இப்படிப்பட்ட தெளிவற்ற, நிர்ணயமற்ற கருத்தோட்டங்களுக்கு எதிர்காலம் சொந்தமாக முடியாது. சமுதாய ஸ்தாபனங்களேயும் பொருளாதார நிலேமைகளேயும் ஊன்றியாராய்ந்து பயில்வது தான் சரித்திர விஞ்ஞானத்தின் தலேயாய கடமை என்று பிரகடனம் செய்கிற ஒரு கருத்துப் போக்கை நிச்சயமாக நாம் வரவேற்க வேண்டியது தான். இந்தக் கருத்துப் போக்கு திட்டமாக நிலே பெற்றுவிடுமேயானல் இந்த விஞ்ஞானம் பெரிய அளவுக்கு முன்னேறும். ஆனல் முதலில் அறிய வேண்டியது ஒன்றுண்டு: இது ஒரு புதிய கருத்துப் போக்கு என்று பிரேன் நினேப்பது தவறு. பத்தொன்பதாம் நூற்ருண்டின் காலப் பகுதியான 1820-30 லேயே வரலாற்றின் பாற்பட்ட விஞ்ஞானத்திடையே இந்தக் கருத்துப் போக்கு உதயமாயிற்று. கிஸோ, மின்யே, ஒகுஸ்தேன் தியேரி, அவர்களுக்குப் பிறகு வந்த தொக்வில்லும், பிறருமே இந்தப் புதிய

கருத்துப் போக்கைச் சிந்தனை யொளியுடனும் முரண்பாடின்றியும் விவரித்தவர்கள். மொனே அவர்களின் கருத்தோட்டங்களும், லாம்ப்ரேஹ்ட் அவர்களின் கருத்தோட்டங்களும் ஒரு பழைய, ஆனல் மிகச் சிறந்த ஓவியத்தை வைத்துக்கொண்டு எடுக்கப்பட்ட மங்கலான பிரதி மாதிரிதான் உள் ளன. இரண்டாவதாக, கிஸோ, மின்யே, முத லான பிற பிரெஞ்சு வரலாற்று வல்லுநர்களின் கருத்துக்கள் அவர்கள் வாழ்ந்த காலத்துக்கு ஆழ மிக்கவையாக இருந்த போதிலும், அவற்றின் பல அம்சங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரம் என்ன என்ற கேள் விக்கு அவை திட்டவட்டமான நிறைவுள்ள விடை வழங்கவில்லை. ஆனல் சரித்திர விஞ்ஞானம் இந்த விடையை வழங்கித்தான் தீர வேண்டும். அப் பொழுதுதான், இத்துறையைச் சேர்ந்த விஞ்ஞானப் பிரதிநிதிகள் தாங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் விஷயத்தைப் பற்றி ஒருதலைப்பட்சமான கருத் தோட்டத்தை விலக்கியொழித்தவர்களாவார்கள். மற்றப் பிரச்சினைகளோடு இந்தப் பிரச்சினையைச் சிறந்த முறையில் தீர்த்துவிடும் வரலாற்று விஞ் ஞானப் பிரிவினருக்குத்தான் எதிர்காலம் சொந்த மாகும்.

இந்தக் கருத்துப் போக்கைச் சேர்ந்த கிஸோ, மின்யே, முதலான சரித்திராசிரியர்களின் கருத்துக் கள் பதினெட்டாம் நூற்றுண்டில் சரித்திரத்தைக் குறித்து நிலவிய கருத்தோட்டத்துக்கு எதிர்வினை யாக உண்டானவையே. அவர்களின் கருத்துக்க ளுக்கு இது ஓர் **எதிருரையாக** அமைந்தது. பதி

னெட்டாம் நூற்ருண்டில் வரலாறு பற்றிய தத்துவ ஞானத்தைப் பயின்றவர்கள் எல்லாவற்றையும் **தனிநபர்களின் உணர்வுபூர்வமான நடவடிக்கைகளாகக்** குறுகத் தரித்துக் காட்டி விட்டனர். இந்தப் பொது விதிக்கு விலக்குகள் அந்தக் காலத்திலேயே உண்டு என்பது வாஸ்தவமே. உதாரணமாக, வீகோ, மொந்தெஸ்கியோ, ஹெர்டர் ஆகியோரின்[8] தத்துவஞான-சரித்திரப் பார்வையின் புலம் அதை விட மிக விசாலமானதாகும். ஆனுல் நாம் விதிவிலக்குகளைப் பற்றிப் பேசவில்லை; பதினெட்டாம் நூற்ருண்டைச் சேர்ந்த மிகப் பெரும்பான்மையான சிந்தனையாளர்கள் வரலாற்றைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தோட்டம் நாம் மேலே வர்ணித்த படியேதான் இருந்தது. உதாரணமாக, இது பற்றி மாப்லி எழுதிய வரலாற்று நூல்களை மீண்டும் ஒரு தடவை படிப்பதற்கு மிகவும் ருசிகரமாயிருக்கிறது. மாப்லியின் அபிப்பிராயத்தின் படி கிரீட் மக்களின் சமுதாய-அரசியல் வாழ்க்கை, அறநெறி, முழுவதையும் மீனேஸ் தான் சிருஷ்டித்தாராம், அதே பணியை ஸ்பார்டாவின் மக்களுக்கு லிக்குர்கஸ் ஆற்றினுராம். லிக்குர்கஸ், ''தமது நாட்டு மக்களின் இதயத்தினுள்ளே ஆழப் புகுந்து அதனில் இருந்த பண ஆசை என்ற கிருமியைக் கொன்று தீர்த்தார்''; (descendit pour ainsi dire jusque dans le fond du coeur des citoyens etc.)*

---

* "Oeuvres complètes de l'abbé de Mably", Londres 1789, tome quatrième, p. 3, 14-22, 34 et 192. ["மாப்லி பாதிரியார் நூல்களின் முழுத்தொகுப்பு", லண்டன், *1789*, தொகுதி *4*, பக்கங்கள் *3, 14-22, 34, 192.*]

எனவே ஸ்பார்டா மக்கள் லௌகீகச் செல்வத்தை ''வெறுத்தொதுக்கிவிட்டார்கள்'' என்றால் அதற்குக் காரணம் லிக்குர்கஸ் ஒருவர் மட்டுமே. பின்னல் அவர்கள் லிக்குர்கஸ் காட்டிய, விவேகமிக்க பாதையை விட்டுப் பிரிந்து போயினர் என்றால் அதற்குக் காரணம் லிசாண்டர் என்பவர்தான்; லிசாண்டர் தான் ''புதிய காலத்துக்கும் புதிய நிலைமைகளுக்கும் ஏற்ற வகையில் புதிய விதிகளும் புதிய கொள்கையும் தேவைப்படுகின்றன''* என்று அவர்களுக்கு எடுத்துச்சொல்லி மனத்தில் பதியவைத்தார். இப்படிப் பட்ட கருத்தோட்டத்தின் பார்வையைப் பின்பற்றி எழுதப்பட்ட ஆராய்ச்சியுரைகளுக்கும் விஞ்ஞானத் துக்கும் சம்பந்தம் துளிக்கூடக் கிடையாது. அவற்றில் ஏதோ நீதிநெறிப் ''படிப்பினைகள்'' அடங்கியுள்ளன என்ற நினைப்பிலே தான் அவ்வுரைகள் உபதேச வகையிலே எழுதப் பெற்றன; முடியாட்சி முறையின் மீட்சிக்காலத்தைச் சேர்ந்த பிரெஞ்சு சரித்திராசிரியர்கள்[9] இப்படிப்பட்ட கருத்தோட்டங்களை எதிர்த்துத்தான் கலகம் செய்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் நடைபெற்ற மகத்தான நிகழ்ச்சிகளுக்குப்பிறகு, ஏறத்தாழப் பிரபலமான, ஏறத்தாழ மேன்மைகொண்ட, ஞான ஒளி பெற்ற, தனிநபர்கள்தாம் சரித்திரத்தைச் சிருஷ்டிக்கிறார்கள் என்றும் அந்தத் தனிநபர்கள் தமது யுக்தானுசாரப்படி சில உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் அஞ்ஞானிகளான, ஆனால் கீழ்ப்படிவுள்ள மக்களிடையே செலுத்திப் பரப்பி

* "Oeuvres complètes de l'abbé de Mably", Londres 1789, tome quatrième, p. 109.

ணர்கள் என்றும் சிந்திப்பது அறவே சாத்தியமில் லாது போயிற்று. மேலும், வரலாறு பற்றிய இந்தத் தத்துவஞானம் பூர்ஷ்வா தத்துவாசிரியர்களின் கீழ்க்குடிப் பிறப்புப் பெருமையைப் பங்கம் செய்வ தாயிருந்தது. பதினெட்டாம் நூற்றுண்டில் எழுந்த பூர்ஷ்வா நாடகங்களிலே வெளியிடப்பெற்ற அதே உணர்ச்சிகள் தான் இவ்வாசிரியர்களேயும் தூண்டி விட்டன. பழைய அழகியலுக்கு எதிராக பொமார்ஷே யும் பிறரும் உபயோகித்த அதே வாதங்களேத்தான் வரலாற்றைப் பற்றிய பழைய கருத்துக்களே எதிர்த் துப்போராடுகையில் தியேரி உபயோகப்படுத்தினர்*. கடைசியாக, மக்களின் உணர்வுபூர்வமான செயல் களேக் கொண்டு மட்டுமே சரித்திர நிகழ்ச்சிகளின் போக்கு நிர்ணயிக்கப்படுவதில்லே என்ற விஷயத்தை அப்பொழுதுதான் பிரான்ஸ் அனுபவித்த புயல்கள் வெகு தெளிவாக வெளிப்படுத்திவிட்டன. இந்த நிகழ்ச்சிகள் ஏதோவொரு மறைவான அவசியத் தின் காரணமாகத்தான் ஏற்பட்டன, அந்த அவசி யம் இயற்கையின் சக்திகளேப் போல் கண்மூடித்தன மாக வேலே செய்கின்றது, ஆனுல் சில மாற்ற முடி யாத விதிகளுக்குப் பட்டு அது வேலே செய்கின்றது என்ற கருத்தைத் தோற்றுவிக்க இந்த ஒரு விஷய மே போதுமானதாயிருந்தது. முடியாட்சியின் மீட் சிக் காலகட்டத்தைச் சேர்ந்த பிரெஞ்சு சரித்திரா சிரியர்கள் பிரெஞ்சுப் புரட்சியைப்பற்றி வரைந்த

* பொமார்ஷே நூல்திரட்டின் முதல் தொகுதியிலுள்ள "Essai sur le genre dramatique sérieux" [''ஆழ்ந்த நாடகபாணி சம் பந்தமான கட்டுரை''] என்ற கட்டுரையுடன் ''பிரான் ஸின் வரலாறு'' பற்றிய முதல் கடிதத்தை ஒப்பு நோக்குக.

நூல்களில் தான் சரித்திரமே விதிக்குட்பட்டு நடக்கிற ஓர் இயக்கப்போக்கு என்று இந்தப் புதிய கருத்தோட்டத்தை முரணற்ற ரீதியிலே செயல்படுத்தினர். இது மிகவும் குறிப்பிடத்தக்க விஷயமாகும். எமக்குத் தெரிந்த வரையில் இதை யாருமே இது வரைக்கும் எடுத்துக்காட்டவில்லை. உதாரணமாக, மின்யே எழுதிய நூல்களும், தியேர் எழுதிய நூல்களும் இப்படித்தான் இருந்தன. இந்தப் புதிய வரலாற்றுப் போக்கை **விதிவாத வகைப்பட்டது** என்று ஷடொபிரியான் அழைத்தார். அது ஆராய்ச்சியாளனுக்கு முன்வைக்கும் கடமைகளை வரையறை செய்கையில் அவர் சொன்னது பின்வருமாறு: ''மிக மிக மிருகத்தனமான குரூரச் செயல்களையும் ஆத்திரப்படாமல் சொல்ல வேண்டும்; மிக உயர்வான பண்புகளைப் பற்றியும் பாசம் எதுவுமின்றிக் கூற வேண்டும்; எதிர்க்க முடியாத விதிகளின் படியே நிகழ்ந்து தீர வேண்டியிருக்கிற முறையிலேதான் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நேர்கிறது என்ற வகையில் எதிர்க்க முடியாத அந்த விதிகளின் வெளியீடாகத் தான் தனது உணர்ச்சியற்ற, வறட்டுக் கண்களால் சமுதாய வாழ்க்கையைப் பார்க்க வேண்டும்; இப்படிச் செய்யும்படி தான் இந்தக் கருத்துக் கோவை சரித்திராசிரியனைக் கோருகிறது.''* நிச்சய

* Oeuvres complètes de Chateaubriand, Paris 1860, t. VII, p. 58 [ஷடொபிரியான் நூல்களின் முழுத் தொகுப்பு, பாரிஸ், 1860, தொகுதி 7, பக்கம் 58.] அடுத்த பக்கத்தையும் படிக்குமாறு வாசகர்களுக்குச் சிபாரிசு செய்கிறோம்; இது திரு. நி. மிஹாய்லோவ்ஸ்கிய் எழுதியதோ என்று படிப்பவர் எண்ணக்கூடும்.

மாக இது தவறு. சரித்திராசிரியன் உணர்ச்சி வசப் படாமல் இருக்க வேண்டும் என்று இந்தப் புதிய வரலாற்றுக் கருத்துப் பிரிவினர் கோரவில்லை. அரசியல் ஆவேச உணர்ச்சிகள் ஆராய்ச்சியாளனின் மனத்தைக் கூர்மையடையச் செய்கின்றன, அதன் மூலம் உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு அது சக்தி மிகுந்த சாதனமாகப் பயன்படக் கூடும் என்றெல்லாம் ஒகுஸ்தேன் தியேரி பகிரங்கமாகவே கூறியுள்ளார்.* கிஸோ, தியேர் அல்லது மின்யே எழுதிய சரித்திர நூல்களைக் கொஞ்சம் புரட்டிப்படித்தால் போதும்—அவர்கள் லௌகீகத் துறையிலும் ஆன்மீகத் துறையிலும் ஆண்ட பிரபுக்களை எதிர்த்துப் போராட்டம் நடத்திய பூர்ஷ்வா வர்க்கத்தின்பால் தீவிரமான அனுதாபம் காட்டினர் என்பதும், தோன்றி வரும் பாட்டாளி வர்க்கத்தின் கோரிக்கைகளை அது—பூர்ஷ்வா வர்க்கம்—நசுக்குவதற்குச் செய்த முயற்சிகள்பால் தீவிரமான அனுதாபம் காட்டினர் என்பதும் புலப்படும். இதில் வாதத்திற்கிடமற்ற விஷயம் என்னவென்றால், இந்தப் புதிய வரலாற்றுக் கருத்துப் பிரிவினர் 1820-30ம் ஆண்டுக் காலத்தில் தான் தோன்றினர்; அதாவது, நிலப்பிரபுத்துவ வர்க்கம் தனது பழைய சலுகைகளில் சிலவற்றை மீண்டும் பெற முயற்சித்து வந்த போதிலும் அது பூர்ஷ்வா வர்க்கத்தால் ஏற்கனவே முறியடிக்

---

* Cf. "Considérations sur l'histoire de France", appendix to "Récits des temps Mérovingiens" Paris, 1840, p.72. [''பிரான்சின் வரலாறு பற்றிய குறிப்புகள்'', ''மெரொவிங்கியேன் காலத்திற்குரிய கதைகளுக்கு'' அனுபந்தம், பாரிஸ், 1840, 72 பக்கம்].

கப்பட்டுவிட்ட காலப்பகுதியில் தான் அவர்கள் தோன்றினர். புதிய கருத்துப் பிரிவைச் சேர்ந்த சரித்திராசிரியர்களின் வாதங்கள் ஒவ்வொன்றிலும் தங்கள் வர்க்கம் வெற்றி பெற்று விட்டதைக் குறிக்கும் பெருமித உணர்வு பிரதிபலித்தது. மேலும், பூர்ஷ்வா வர்க்கம் வீரமரியாதை யுணர்ச்சிக்கு என்றைக்கும் பெயர் பெற்றதில்லை. ஆகவே, தோற்றுப் போனவர்களிடம் மிகக் கடுமையாகப் பேசும் ஒரு தொனி விஞ்ஞானத் துறையைச் சேர்ந்த அதன் பிரதிநிதிகளின் வாதங்களிலே சில சமயங்களில் கேட்கலாம். "Le plus fort absorbe le plus faible, et cela est de droit" (''எளியோரை வலியோர் ஆட்கொள்கின்றனர்; அப்படிச் செய்வதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு'') என்று சர்ச்சைக்கிழுக்கும் தமது நூல்களில் ஒன்றில் கிஸோ கூறுகிறுர். தொழிலாளி வர்க்கத்தின்பால் அவர் கொண்டிருந்த மனப்பான்மையும் அதேயளவில் கடுமையானது. இந்தக் கடுமை சில சமயங்களில் நிதானமிக்க அலட்சியபாவம் என்ற வடிவம் பெற்றிருந்துள்ளது. இது தான் ஷடொபிரியானைத் தவருக நினைத்துக் கொள்ளச் செய்திருக்கிறது. மேலும், சரித்திர முன்னேற்றம் **விதிக்குட்பட்டு இயங்கும் தன்மை** பெற்றுள்ளது என்பதற்கு அர்த்தம் அந்தக் காலத்தில் தெளிவாக வில்லை. கடைசியாக, விதிக்குட்பட்டு இயங்குவது என்ற பார்வையை உறுதியாகக் கடைப்பிடிக்கும் முயற்சியில் அந்தப் புதிய கருத்துப் பிரிவினர் சரித்திரத்தில் காட்சி தரும் மகா புருஷர்களைச் சட்டை செய்யாமலிருந்துவிட்டனர்; எனவே அவர்கள் விதிவாதிகளாகத் தோன்றியிருக்

கக் கூடும்.* பதினெட்டாம் நூற்றுண்டின் சரித்திரத் துறைக் கருத்துக்களால் ஊட்டிவளர்க்கப் பெற்ற வர்களுக்கு இதை ஏற்றுக்கொள்வது கஷ்டமாயிருந் தது. புதிய சரித்திராசிரியர்கள்மீது எல்லாத் திசை களிலிருந்தும் ஆட்சேபனைகள் பொழிந்தன. பிறகு சர்ச்சை கிளம்பியது. நாம் மேலே பார்த்தபடி, அந்தச் சர்ச்சை இன்றைய நாள்வரை தீர்ந்தபா டில்லை.

தியேர் எழுதிய ''பிரெஞ்சுப் புரட்சியின் வர லாறு'' என்ற நூலின் ஐந்தாவது, ஆருவது பாகங் கள் வெளியிடப்பட்டதைப்பற்றி "Globe" என்ற சஞ்சி கையில் செயின்ட்-பியோவ் **1826** ஜனவரியில் பின்

---

*மின்யே எழுதிய ''பிரெஞ்சுப் புரட்சியின் வரலாறு'' என் னும் நூலின் மூன்ரும் பதிப்பைப்பற்றிய மதிப்புரையில் செயி ன்ட்-பியோவ், மகாபுருஷர்களைப் பற்றி அந்தச் சரித்திராசிரி யர் கொண்டிருந்த போக்கைப் பின்வருமாறு சித்திரித்தார்: "A la vue des vastes et profondes émotions populaires qu'il avait à décrire, au spectacle de l'impuissance et du néant où tombent les plus sublimes génies, les vertus les plus saintes, alors que les masses se soulèvent, il s'est pris de pitié pour les individus, n'a vu en eux pris isolement que faiblesse et ne leur a reconnu d'action efficace, que dans leur union avec la multitude." [''பரந்து ஆழ்ந்த பொதுக் கிளர்ச்சியின் நோக்கிலிருந்து அவர் தனிநபர்களை வர்ணிக்க வேண்டியிருந் தது. மக்கள் திரளின் எழுச்சிகளின் போது மிக மாண் புடைய மேதைகளும் மிகக் குணசீலர்களான அறவோர்களும் காட்டிய தகுதியின்மையையும் வீரியமின்மையையும் கவ னித்து, தனிநபர்கள் மீது இரக்கத்தினுல் அவர் உள்ளம் நெகிழ்ந்தது. தனித் தனியே அவர்களிடம் பலவீனத்தைத் தவிர வேறு எதுவும் அவருக்குப் புலப்படவில்லை. எனவே, பொது மக்களின் சேர்க்கை இல்லாமல் எதுவும் செய்வதற் குத் தனிநபர்கள் திறனுடையவர்கள் என்பதையே அவர் மறுத்தார்.

வருமாறு எழுதினர்: ''ஒரு மனிதன் எந்த ஒரு குறிப்பிட்ட வினடியிலும் தனது சித்தத்தின் திடீர்த் தீர்மானத்தின் விளைவாக நிகழ்ச்சிகளின் போக்கில் ஒரு புதிய, எதிர்பாராத, மாறுந்தன்மையுள்ள சக்தியைப் புகுத்தக் கூடும்; அது அந்த நிகழ்ச்சிகளின் போக்கை மாற்றி விடக் கூடும்; ஆனல் அந்தச் சக்தி மாறுந்தன்மை கொண்டிருப்பதின் காரணமாக அதை அளந்தறிய நம்மால் முடியாது.''

மனிதச் சித்தத்தின் ''திடீர்த் தீர்மானங்கள்'' காரணம் இல்லாமலே ஏற்படுகின்றன என்று செயின்ட்-பியோவ் கருதியதாக நினைத்துவிடக்கூடாது. அப்படி நினைத்துக்கொள்வது மிகவும் பேதைமையாகும். அவர் வலியுறுத்திச்சொன்னது இது தான்: சமூக வாழ்வில் ஏறத்தாழ முக்கியமான பாத்திரம் வகித்துவரும் ஒரு மனிதனின் அறிவு பற்றிய குணங்களும் நீதி பற்றிய குணங்களும்—அதாவது அவனது திறன், அறிவு, மனோதிடம் அல்லது மனோதிடமின்மை, தைரியம் அல்லது கோழைத்தனம், முதலியன—நிகழ்ச்சிகளின் போக்கிலும் விளைவிலும் மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படுத்தாமலிருக்க முடியாது. ஆயினும், ஒரு தேசத்தின் வளர்ச்சியின் பொது விதிகளை மட்டும் கொண்டு இந்தக் குணங்களை விளக்க முடியாது. எப்பொழுதுமே, மிகக் கணிசமான அளவில், அவை மனிதனுடைய தனி வாழ்க்கையில் ஏற்படும் தற்செயலான அனுபவங்கள் என்று சொல்லக் கூடியவற்றின் விளைவாகத்தான் பெறப்படுகின்றன. இந்தக் கருத்து எவ்வளவு தெளிவாகத் தோன்றினலும், இதை விளக்கும் பொருட்டு, சில உதாரணங்களை மேற்கோள் காட்டுவோம்.

ஆஸ்திரிய பட்டத்து வாரிசுக்காக நடந்த யுத்தத்தின் போது[10] பிரெஞ்சு ராணுவம் பல அற்புதமான வெற்றிகளைச் சாதித்தது. இன்றுள்ள பெல்ஜிய நாட்டின் விரிவான நிலப்பகுதிகளைத் தனக்குத் தந்துவிடுமாறு ஆஸ்திரியாவை பிரான்ஸ் நிர்ப்பந்திக்க முடியும் என்றே தோன்றியது. ஆனால் பதினைந்தாவது லுயீ மன்னன் இந்த நிலப்பகுதியைத் தனக்குரியது என்று கோரவில்லை. அதற்குக் காரணம், லுயீ மன்னனே சொன்னது போல், தான் ஓர் அரசன் என்ற ரீதியிலே அவன் போர் நடத்தினனே தவிர வியாபாரி என்ற ரீதியிலல்ல. ஆகென் சமாதான ஒப்பந்தத்தினுல்[11] பிரான்ஸுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனல், பதினைந்தாவது லுயீ மட்டும் வேறொரு தினுசான மனிதனுக இருந்திருந்தால், அவன் ஸ்தானத்தில் மற்றோர் அரசன் இருந்திருந்தால், பிரெஞ்சு நாட்டு நிலப்பரப்பு விரிவடைந்திருக்கும், அதன் விளைவாக பிரான்ஸின் பொருளாதார-அரசியல் வளர்ச்சி ஓரளவுக்கு வேறு போக்கிலே போயிருக்கும்.

ஆஸ்திரியாவுடன் கூட்டணி சேர்த்து பிரான்ஸ் ஏழாண்டு யுத்தத்தை[12] நடத்திற்று என்பது எல்லோரும் அறிந்ததே. பொம்பதூர் சீமாட்டியின் பெருத்த உதவியினுலேயே இந்தக் கூட்டணி ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. கர்வம்படைத்த மரியா தெரிஸா தனக்கு எழுதிய ஒரு கடிதத்தில் தன்னை ''அத்தை மகள்'' அல்லது ''அருமைத் தோழி'' (bien bonne amie) என்று அழைத்ததினுல் பொம்பதூர் சீமாட்டி பெருமையிலே பூரித்துப் போனுள். எனவே,

பதினைந்தாவது லுயீ மட்டும் கொஞ்சம் திடமான ஒழுக்கசீலனாக இருந்திருந்தால், தனது வைப்பாட்டிகளின் செல்வாக்குக்கு அதிகமாக உட்பட்டிராமலிருந்திருந்தால், பொம்பதூர் சீமாட்டி நிகழ்ச்சிகளின் போக்கின் மீது தனது செல்வாக்கைச் செலுத்தியிருக்க முடியாது, அந்த நிகழ்ச்சிகளும் வேறு திசையிலே திரும்பியிருக்கும்.

மேலும், ஏழாண்டு யுத்தத்தில் பிரான்ஸ் வெற்றி பெறவில்லை. அதன் ராணுவ தளபதிகள் வரிசையாகப் பல மானக்கேடான தோல்விகளைக் கண்டார்கள். பொதுவிலே அவர்களுடைய நடத்தை, குறைந்த பட்சமாகச் சொல்வதானாலும், மிகவும் விசித்திரமாக இருந்தது. ரிஷெலியோ கொள்ளையடிப்பதில் இறங்கிவிட்டான்; சூபீஸூம் புரோய்லீயும் ஒருவன் காரியத்தில் மற்றவன் இடைவிடாது குறுக்குச் சால் ஓட்டிய வண்ணமாயிருந்தார்கள். உதாரணமாக, வில்லிங்ஹாஸன் என்ற இடத்தில் எதிரியை புரோய்லீ தாக்கிப் போராடிக் கொண்டிருக்கும் சமயத்தில் பீரங்கிப்படைகளின் சத்தத்தை சூபீஸ் கேட்டவாறிருந்தானே யொழிய ஏற்பாடு செய்திருந்தபடியோ, நிச்சயமாகத் தனது கடமையை யாற்றும் முறையிலோ, அவனது உதவிக்குச் செல்லவில்லை. அதன் விளைவாக புரோய்லீ பின்வாங்க வேண்டியதாயிற்று.* கொஞ்சமேனும்

*தனது நண்பனுக்காக புரோய்லீ காத்திருக்கவில்லை; ஏனெனில் வெற்றி தரும் புகழைத் தனது நண்பனுடன் பகிர்ந்துகொள்ள அவன் விரும்பவில்லை; விளைவுக்கு புரோய்லீ தான் பழியேற்க வேண்டும் என்றெல்லாம் சிலர் சொல்கிறார்கள். இதனால் நமக்கொன்றுமில்லை, நாம் எடுத்துக் கொண்டிருக்கும் வழக்கை இது கொஞ்சங்கூட மாற்றுவதாயில்லை.

தகுதியற்ற சூபீஸ் மேலே குறிப்பிட்ட பொம்பதூர் சீமாட்டியின் ரக்ஷணையிலிருந்தான். எனவே நாம் மீண்டும் சொல்ல முடியும்: பதினைந்தாவது லூயீ மட்டும் ஓரளவுக்கு ஸ்திரீலோலனுயில்லாமலிருந் திருந்தால், அல்லது அவனது வைப்பாட்டி அரசிய லில் குறுக்கிடாமல் மட்டும் இருந்திருந்தால் நிகழ்ச் சிகள் பிரான்சுக்கு இவ்வளவு பாதகமாகப் போயிரா.

ஐரோப்பா கண்டத்தில் பிரான்ஸ் போர் நடத்தி யிருக்க வேண்டிய தேவையே இல்லை, தனது காலனி களை இங்கிலாந்து பறிக்கப் புகுவதை எதிர்க்கும் பொருட்டு பிரான்ஸ் தனது சகல முயற்சிகளையும் கடல் மார்க்கத்தின்பால் திரட்டிக் குவித்திருக்க வேண்டும் என்று பிரெஞ்சு சரித்திராசிரியர் கள் சொல்கிறுர்கள். ஆனுல் பிரான்ஸ் வேறு போக் கில் காரியம் புரிந்தது; அதற்குக் காரணமும் இதே பொம்பதூர் சீமாட்டிதான். பொம்பதூர் சீமாட்டி ''தனது அன்புக்குரிய சிநேகிதி''யான மரியா தெரிஸாவைத் திருப்திப் படுத்த விரும்பினுள். ஏழாண்டு யுத்தத்தின் விளைவாக பிரான்ஸ் தனது மிகச் சிறந்த காலனிகளை இழந்துவிட்டது; இப்படி இழந்ததானது பிரான்ஸின் பொருளாதார உறவு களின் வளர்ச்சியை மிகவும் பாதித்தது என்பதில் ஐயமில்லை. இவ்விஷயத்தில், பொருளாதார வளர்ச் சியின் மீது செல்வாக்கு வகிக்கும் ஒரு ''காரணப் பொருள்'' என்ற வகையிலே பெண்மையின் தற்பெரு மை தோற்றமளிக்கிறது.

உதாரணங்கள் இன்னும் வேண்டுமா? மே லும் ஒன்று தருவோம்; அது எல்லாவற்றையும்விட

ஆச்சரியமானது. மேலே சொன்ன ஏழாண்டு யுத்தம் நடக்கையில், 1761 ஆகஸ்ட் மாதத்தில், ஆஸ்திரியப் படைகள் சைலீஷியாவில் ருஷ்யத் துருப்புக்களுடன் ஒன்ருகச் சேர்ந்த பிறகு பிரெடெரிக் மன்னனின் படைகளை ஷ்டிரீகா என்ற இடத்தில் வளைத்துக்கொண்டன. பிரெடெரிக்கின் நிலைமை படுமோசமாயிருந்தது. என்ருலும் நேசநாடுகள் ஏறித் தாக்குவதில் மந்தமாயிருந்தன. எதிரியை நோக்கியபடி இருபது நாட்களாக ஒன்றும் செய்யாமலேயே இருந்துகொண்டிருந்த தளபதி புதூர்லின், ஆஸ்திரிய தளபதி லாடனுக்கு உதவிப்படைகளாகத் தனது ராணுவத்தில் சில படைகளை மட்டும் விட்டு வைத்து சைலீஷியாவிலிருந்து தனது துருப்புக்களை வாபஸ் பெற்றுக்கொண்டார். ஷ்வெயிட்னிட்ஸை லாடன் கைப்பற்றிஞர். அதன் அருகாமையில்தான் பிரெடெரிக் முகாம் போட்டிருந்தார். என்ருலும் இந்த வெற்றியில் பிரமாத முக்கியத்துவம் கிடையாது. ஆனல், புதூர்லின் மட்டும் இன்னும் அதிக மனேவுறுதிபடைத்த மனிதனுக இருந்திருந்தால்? பிரெடெரிக்குக்குத் தன் அரண்களைக் கெட்டிப்படுத்திக் கொள்ள நேரம் கிடைக்குமுன் நேசநாடுகள் அவனைத் தாக்கியிருந்தால் என்ன ஆகியிருக்கும்? அவர்கள் அவனை அடியோடு முறியடித்திருப்பார்கள்; வெற்றி பெற்றவர்களின் கோரிக்கைகளுக்கெல்லாம் அவன் இணங்கித் தீர வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டிருக்கும். மேலும், இந்த நிகழ்ச்சி எப்பொழுது ஏற்பட்டது? எலிஸவெத்தா சக்கிரவர்த்தினியின் மரணம் என்ற ஒரு புதிய தற்செயலான விஷயம், பிரெடெரிக்குக்கு மிகவும் சாதகமாக நிலை

மையை மாற்றுவதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பு தான் அது ஏற்பட்டது. புதூர்லின் மட்டும் இன்னும் அதிக மனோ உறுதி படைத்த மனிதனாக இருந்திருந்தால், அல்லது அவன் ஸ்தானத்தில் சுவோரவ் போன்ற ஒரு மனிதர் இருந்திருந் தால், என்ன நடந்திருக்கும்? என்று நாம் கேட்க விரும்புகிறோம்.

''விதிவாத'' சரித்திராசிரியர்களின் கருத்துக் களை ஆராய்கையில் செயின்ட்-பியோவ் மற்றோர் அபிப்பிராயமும் தெரிவித்தார். அதுவும் கவனிக் கத்தக்கதே. மின்யேயின் ''பிரெஞ்சுப் புரட்சியின் வரலாறு'' என்ற நூலைப் பற்றிய, முன்பு குறிப்பிட்ட கட்டுரையில் பிரெஞ்சுப் புரட்சியின் போக்கையும் விளைவையும் அந்தப் புரட்சியைத் தோற்றுவித்த பொதுவான காரணங்கள் மட்டும் நிர்ணயிக்கவில்லை, தன் முறைக்கு அந்தப் புரட்சி தூண்டிவிட்ட உணர்ச்சி யெழுச்சிகள் மட்டும் நிர்ணயிக்கவில்லை; ஆராய்ச்சியாளனின் பார்வையினின்று தப்பிவிட்ட, சமுதாய நிகழ்ச்சிகள் என்று முறையாகச் சொல்லக் கூடியதின் ஒரு பகுதி என்று அமைந்திராத, பற்பல சிறிய நிகழ்ச்சிகளும்கூட பிரெஞ்சுப் புரட்சியின் போக்கையும் விளைவையும் நிர்ணயித்திருக்கின்றன என்றெல்லாம் அவர் வாதித்தார். அவர் எழுதிய தாவது: ''இந்தப் (பொதுவான) காரணங்களும் (அவை தோற்றுவித்த) உணர்ச்சி யெழுச்சிகளும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது இயற்கை யின் பௌதீக சக்திகளும் உடலியல் வகைப்பட்ட சக்திகளும் செயலற்றிருக்கவில்லை: பூமியின் ஆகர் ஷண சக்தியின் விதிகளுக்குக் கற்கள் தொடர்ந்து

கட்டுப்பட்டுத்தான் இருந்துவந்தன; ரத்தக் குழாய் களில் ரத்தம் ஓடாமல் நின்றுபோகவுமில்லை. ஒரு பேச்சுக்குச் சொல்லும் முறையில், மிரபோ காய்ச் சலில் இறந்து போயிருக்காவிடில், அல்லது தற் செயலாக ஒரு செங்கல் ரொபெஸ்பியேர் மீது விழுந்து அவன் கொல்லப்பட்டிருந்தால் அல்லது வலிப்பு வியாதியால் இறந்திருந்தால், அல்லது போனபார்த் ஒரு துப்பாக்கிக் குண்டுக்கு இரை யாகியிருந்தால் நிகழ்ச்சிகளின் போக்கு மாறிவிட் டிருக்காதா? அப்படிக்கில்லாமல் முடிவு அதே மாதிரிதான் இருந்திருக்கும் என்று நீங்கள் அறுதி யிட்டுச் சொல்லத் துணிவீர்களா? நான் கற்பித்துக் கொண்டுள்ளபடி போதிய அளவுக்குப் பல தற்செய லான விஷயங்கள் நடப்பதாக ஏற்படுமேயானல் எந்த முடிவு உங்கள் அபிப்பிராயத்தில் தவிர்க்க முடியாதது என்று இருக்கிறதோ, அதற்கு நேர் விரோதமான முடிவு விளைந்திருக்கலாம். இப்படிப் பட்ட தற்செயலான விஷயங்கள் நிகழக் கூடும் என்று கற்பித்துக்கொள்ள எனக்கு உரிமையுண்டு; ஏனெனில் புரட்சி ஏற்பட்டதற்குரிய பொது வான காரணங்களும் சரி, அந்தக் காரணங்கள் தூண்டிவிட்ட உணர்ச்சி ஆவேசங்களும் சரி, அவற் றை நிகழக் கூடியவையல்ல என்று விலக்கவில்லை.''

பிறகு, கிளியோபாத்ராவின் மூக்கு மட்டும் இன் னும் கொஞ்சம் குறுகியதாக இருந்திருந்தால் சரித் திரம் முற்றிலும் வேறுன போக்கில் போயிருக்கும் என்ற பிரபலமான கருத்தை அவர் மேற்கோள் காட்டிச் செல்கிறுர். மின்யேயின் கருத்துக்கு ஆதர வாக இதற்கும் அதிகமாகவே சொல்ல முடியும்

என்று ஒப்புக் கொண்டு, முடிவில் இந்த ஆசிரியர் எங்கே தவறு செய்கிறார் என்பதை மீண்டும் எடுத்துக்காட்டுகிறார். சிறுசிறு, மர்மமான, கவனத்தில் அகப்படாத வேறு பல காரணங்களும் துணையாக நின்று தோற்றுவித்த முடிவுகளைப் பொதுவான காரணங்களின் செய்கையால் மட்டுமே தோற்றுவிக்கப் பட்டவை என்று கற்பிக்கிறார். ஒழுங்கும் விதியும் இல்லாததுபோல் அவருக்குத் தோன்றுகிற எதையும் அவருடைய கண்டிப்பான அறிவு அங்கீகரிக்க மறுக்கிறது எனலாம்.

## VI

செயின்ட்-பியோவின் ஆட்சேபனைகள் ஆதார முள்ளவை தாமா? அவற்றில் ஒரளவு உண்மை யுண்டு என்றே நாம் நினைக்கிறோம். ஆனால் எவ் வளவு? இதை நிர்ணயிப்பதற்காக நாம் முதன் முத லாக மனிதன் ''தன்னுடைய சித்தத்தின் திடீர்த் தீர்மானங்களை'' வைத்து நிகழ்ச்சிகளின் போக்கை யே கணிசமான அளவுக்கு மாற்றிவிடக் கூடிய ஒரு புதிய சக்தியை அந்நிகழ்ச்சிகளின் போக்கில் புகுத்த முடியும் என்ற கருத்தை ஆராய்ந்து பார்ப்போம். நம் அபிப்பிராயத்தில் இதை மிக நன்றாக விளக்கித் தருகிற பல உதாரணங்களை நாம் மேற்கோள் காட்டி யிருக்கிறோம். இந்த உதாரணங்களைக் கவனிப்போம்.

பதினைந்தாவது லுயீ மன்னன் ஆண்ட காலத் தில் பிரான்ஸின் ராணுவ விவகாரம் மோசமாகிக் கொண்டே வந்தது என்பதை எல்லோரும் அறிவார் கள். அன்ரி மார்தேன் சொல்லியிருக்கிற படி, ஏழாண்டு யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் பிரெஞ்சு ராணுவத்துடன் விபச்சாரிகளும், வியாபாரி களும், வேலைக்காரர்களும் எப்பொழுதும் போய்க் கொண் டிருந்தார்கள். சவாரிக் குதிரைகளைப் போல் எண்ணிக்கையில் மூன்று மடங்கு அதிகமாகப் பொதி சுமக்கும் குதிரைகள் அதில் இருந்தன.

துரேன், குஸ்தாவ்-ஆடால்ப் ஆகியோரின்* ராணுவங்களைவிட டேரியஸ், செர்க்ஸெஸ் ஆகியோரின் படைக் கும்பல்களைத்தான் அது அதிகமாக ஒத்திருந்தது. பாசறைக்காவல் பணிக்கு நியமிக்கப்பட்ட பிரெஞ்சு அதிகாரிகள் அருகாமையில் எங்காவது நாட்டிய மாடுவதற்காக அடிக்கடி தமது காவல் ஸ்தானத்தை விட்டகன்று சென்ருர்கள் என்றும் தங்களுக்குச் சரியாகவோ அல்லது சௌகரியமாகவோ தோன்றிய பொழுது தான் மேலதிகாரிகளின் உத்தரவுகளுக்கு அவர்கள் கட்டுப்பட்டு நடந்தார்கள் என்றும் இந்த யுத்தத்தைப் பற்றிய தமது வரலாற்று நூலில் ஆர்கென்ஹால்ட்ஸ் சொல்கிருர். இராணுவ விவகாரத்தின் இந்த வருந்தத்தக்க நிலைமைக்குக் காரணம் பிரபுவம்சம் சீரழிந்து வந்ததுதான். அப்படிச் சீரழிந்து வந்தபோதிலும் இந்தப் பிரபுவம்சத்தினர் தாம் ராணுவத்திலுள்ள எல்லா உயர்தரப் பதவிகளிலும் நீடித்து வந்தார்கள். அதற்கு இன்னொரு காரணம், அழிவை நோக்கி விரைந்து கொண்டிருந்த ''பழைய அமைப்பு'' முழுவதும் பொதுவாகவே கட்டுக்குலைந்து போயிருந்ததாகும். ஏழாண்டு யுத்தம் பிரான்ஸுக்குப் பாதகமாகப் போய்விடுவதற்கு இந்தப் **பொதுவான** காரணங்கள் மட்டுமே போதுமானவையாயிருக்கும். என்றபோதிலும், பிரெஞ்சு ராணுவத்துக்குப் பொதுவான காரணங்களால் விளையக்கூடிய தோல்விக்கு சூபீஸ் போன்ற தளபதி

---

*"Histoire de France", 4-ème édition, t. XV, p. 520-521. ["பிரான்ஸின் வரலாறு", நான்காவது பதிப்பு, 15-வது தொகுதி, 520-521ம் பக்கங்களைப் பார்க்க.]

களின் திறமையின்மை அதிக வாய்ப்புக்களைப் பெருக்கித்தந்தது. பொம்பதூர் சீமாட்டியின் ரக்ஷணையால் தான் சூபீஸ் தொடர்ந்து பதவி வகித்துவந்தான் என்பதால் ஏழாண்டு யுத்தம் நடந்த காலத்தில் நிலவிய நிலைமையின் மீது பொதுவான காரணங்கள் வகித்த பாதகமான செல்வாக்கைக் கணிசமாக அதிகப்படுத்துவதற்கு அமைந்த ''காரணப் பொருட்களில்'' இந்தத் தற்பெருமையுள்ள சீமாட்டியும் ஒரு ''காரணப் பொருளாக'' இருந்தாள் என்பதை ஒப்புக்கொண்டு தீர வேண்டும்.

தனது சொந்தச் சக்தியினுல் பொம்பதூர் சீமாட்டி பலம் பெற்றிருக்கவில்லை. மன்னனின் சக்தியைக் கொண்டுதான் அவள் வலிமை பெற்றிருந்தாள். அரசனை அவள் தன் கைக்குள் வைத்திருந்தாள். பதினைந்தாவது லுயீ மன்னனின் குணம், பிரான்ஸில் சமுதாய உறவுகளின் வளர்ச்சியின் பொதுவான போக்குக்கு ஏற்ப எப்படி இருந்து தீர வேண்டியிருந்ததோ அப்படித்தான் இருந்தது என்று சொல்ல முடியுமா? முடியாது! பெண்களுடன் வேறுவிதமான உறவுகளைக் கொண்ட ஒரு மன்னன் அவன் ஸ்தானத்தில் அதே வளர்ச்சிப் போக்கிலே இருந்திருக்கக் கூடும். மர்மமான, வரையறைக்குள் படாத உடலியல் காரணங்களின் செய்கையே இதற்குப் போதுமானது என்று செயின்ட்-பியோவ் கூறியிருப்பார். அவர் சொல்வதும் சரியாயிருந்திருக்கும். அப்படியானுல், ஏழாண்டு யுத்தத்தின் போக்கின்மீதும் முடிவின்மீதும் செல்வாக்குச் செலுத்தியதின் வழியாக இந்த மர்மமான உடலியல் காரணங்கள் பிரான்ஸின் பின்னுல் வந்த பொரு

ளாதார வளர்ச்சியின்மீதும் செல்வாக்குச் செலுத்தின என்றுதான் கொள்ளவேண்டும். ஏழாண்டு யுத்தத் தின் விளைவாக, தனது காலனிகளில் பெரும்பகுதியை பிரான்ஸ் இழந்திராவிட்டால் அதன் பொருளாதார வளர்ச்சி வேறு விதமாக இருந்திருக்கும். சமுதாய வளர்ச்சி என்பது விதிக்கு உட்பட்டது என்ற கருத் தோட்டத்துக்கு முரண்பட்டதா இந்த முடிவு?

கொஞ்சங்கூட இல்லை. குறிப்பிட்ட இந்த உதாரணங்களில் மனிதர்களின் சொந்தக் குணங்கள் செல்வாக்குப் பெற்று இருந்தன என்பதில் சந்தேக மில்லை. அதே சமயத்தில் **அந்தந்தக் குறிப்பிட்ட சமுதாயச் சூழ்நிலைமைகளின்கீழ்** தான் அவற்றின் செல்வாக்கு பயனளிக்க முடிந்தது. ரோஸ்பாக் போருக்குப்[13] பின்னர் சூபீஸின் ரட்சகியின்மீது பிரெஞ்சு மக்கள் கடுமையான ஆத்திரங்கொண்ட னர். பயமுறுத்தல்களும், பழிச்சொற்களும் நிறைந்த எண்ணற்ற மொட்டைக் கடிதங்கள் தினந்தோறும் அவளுக்குக் கிடைத்தன. பொம்பதூர் சீமாட் டியை இது மிகவும் கலக்கிவிட்டது. அவள் தூக்க மின்மை நோயால் கஷ்டப்படத் துவங்கினாள்.* இருந் தாலும் அவள் சூபீஸைத் தொடர்ந்து ரட்சித்து வந்தாள். அவன் மீது வைத்திருக்கும் நம்பிக்கை களை சூபீஸ் நியாயப்படுத்தவில்லை என்று 1762ல் அவனுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் அவள் குறிப்பிட் டாள்; ஆனால் அத்துடன் கூடவே, ''இருந்தாலும் நீங்கள் பயப்படவேண்டாம். உங்களுடைய நலன்களை

---

*"Mémoires de madame du Hausset", Paris 1824, p. 181. ["ஹொஸ்ஸே சீமாட்டியின் நினைவுகள்'' என்ற நூல், பாரிஸ், 1824, பக்கம் 181] பார்க்க.

நான் கவனித்துக்கொள்கிறேன். உங்களுக்கும் அரசருக்குமிடையே சமரசமேற்படுத்த முயற்சிக்கி றேன்''* என்று எழுதினுள். எனவே பொம்பதூர் சீமாட்டி பொதுஜன அபிப்பிராயத்துக்கு இணங்க வில்லை என்று தெரிகிறதல்லவா? அவள் ஏன் இணங்க வில்லை? ஏனெனில் அவளை அவ்வாறு இணங்கும் படி நிர்ப்பந்திப்பதற்கு வேண்டிய சாதனங்கள் எவையும் அன்றைய பிரெஞ்சு சமுதாயத்திற்கு இல்லாமலிருந்திருக்கலாம். ஆனுல் அன்றைய பிரெஞ்சு சமுதாயத்துக்கு அப்படி ஏன் முடியாமற் போயிற்று? அவ்வாறு செய்யாதபடி அதன் அன் றைய ஸ்தாபன வடிவம் அதைத் தடுத்துவிட்டது. இந்த ஸ்தாபன வடிவமோ பிரான்ஸின் அன்றைய சமுதாய சக்திகளிடையே நிலவிய தாரதம்மியத் தால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எனவே, கடைசிப் பரிசீலனையிலே பார்க்கும்போது, சக்திகளின் தார தம்மியந்தான் பதினைந்தாவது லுயீ மன்னனின் குண மும் அவனது வைப்பாட்டிகளின் சித்தக் கோணல் களும் பிரான்ஸின் தலைவிதியின் மீது வருந்தத் தக்கச் செல்வாக்கை இந்த அளவுக்குப் பெற்றிருக்க முடிந்த விஷயத்தை விளக்கித்தருகிறது. மன்னனு யில்லாமல், மன்னனுடைய சமையல்காரனே அல்லது குதிரைலாயக் காவலாளியோ பெண்பித்துப் பிடித்த வனுயிருந்திருந்தால் அதில் சரித்திர முக்கியத்துவம் எதுவும் இருந்திருக்காது. எனவே பெண்பித்து என் பதல்ல இங்கே முக்கிய விஷயம்; அந்தப் பெண்

* "Lettres de la marquise de Pompadour", Londres, 1772, t. I. [''பொம்பதூர் சீமாட்டியின் கடிதங்கள்'', லண்டன், 1772, முதல் தொகுதி].

பித்துப் பிடித்தவன் வகிக்கும் சமுதாய அந்தஸ்து தான் இங்கே முக்கியம். இது தெளிவு. மேலே மேற்கோள் காட்டிய மற்றெல்லா உதாரணங்களுக்கும் இந்த வாதங்கள் பொருந்தும் என்று வாசகர்கள் தெரிந்துகொள்வர். இந்த வாதங்களில் மாற்ற வேண்டியதை மட்டும் மாற்ற வேண்டும்: உதாரணமாக, பிரான்ஸ் என்பதற்குப் பதில் ருஷ்யா என்றும், சூபீஸ் என்பதற்குப் பதில் புதூர்லின் என்றும், இவ்வாறே மற்றவற்றையும் மாற்ற வேண்டும். ஆகவேதான் நாம் அவற்றைத் திரும்பச் சொல்லப் போவதில்லை.

எனவே, தனிநபர்கள் தமது குணத்தின் குறிப்பிட்ட அம்சங்களின் விசேஷத்தால் சமுதாயத்தின் தலைவிதியைப் பாதிக்க முடிகிறது என்று ஆகிறது. சில சமயங்களில் இந்தச் செல்வாக்கு மிகவும் கணிசமாகவே இருக்கிறது. ஆனால் இந்தச் செல்வாக்கைச் செலுத்துவதற்குரிய வாய்ப்பும் அந்தச் செல்வாக்கின் அளவும் சமுதாயத்தின் ஸ்தாபன வடிவத்தாலும் அந்தச் சமுதாயத்துள் நிலவும் சக்திகளின் உறவாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. எங்கே, எப்பொழுது, எந்த அளவுக்குச் சமுதாய உறவுகள் அனுமதிக்கின்றனவோ, அங்கே, அப்பொழுது, அந்த அளவுக்குத்தான் தனிநபரின் குணம் சமுதாய வளர்ச்சியின் ''காரணப் பொருளாக'' இருக்கிறது.

தனிநபர்களின் சொந்தச் செல்வாக்கின் அளவை அவர்களின் திறன்களும் நிர்ணயிக்கக் கூடும் என்று நம்மிடம் யாராவது சொல்லலாம். அதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அந்தத் தனிநபர் சமுதாயத்தில் அதற்குத் தேவையான ஸ்தானத்தில்

வீற்றிருந்தால்தான் தனது திறன்களை வெளிப் படுத்த முடியும். சமுதாயத்துக்குப் பணி புரியத் திறமையோ விருப்பமோ இல்லாத ஒரு மனிதனின் கையில் பிரான்ஸின் தலைவிதி ஏன் கிடந்தது? அந்தச் சமுதாயத்தின் ஸ்தாபன வடிவம் அப்படியிருந்ததனாலே தான். ஒவ்வொரு குறிப்பிட்ட காலப்பகுதியிலும் சமுதாயத்தின் ஸ்தாபன வடிவம்தான் திறனுள்ள அல்லது திறனற்ற தனிநபர்களின் பாத்திரத்தையும் அதன் விளைவாக அவர்களின் சமுதாய முக்கியத்துவத்தையும் நிர்ணயிக்கிறது.

ஆனால், சமுதாயத்தின் ஸ்தாபன வடிவம்தான் தனிநபர்கள் வகிக்கும் பாத்திரத்தை நிர்ணயிக்கிறதென்றால், அவர்கள் வகிக்கும் பாத்திரத்தால் நிர்ணயிக்கப்படுகிற அவர்களின் சமுதாயச் செல்வாக்கு சமுதாய வளர்ச்சியின் விதிக்குட்படும் தன்மை என்ற கருத்தோட்டத்துடன் எப்படி முரண்பட முடியும்? அது முரண்படவில்லை; அதற்கு மாறாக, அந்தக் கருத்தோட்டத்தை மிகத் தெளிவாக விளக்குவதற்கு அது பயன்படுகிறது.

ஆனால் இங்கு நாம் ஒன்று கூற வேண்டும். அது பின்வருமாறு: தனிநபர்கள் சமுதாயரீதியான செல்வாக்கைச் செலுத்தக் கூடும் என்ற சாத்தியக்கூறு — இந்தச் சாத்தியக் கூற்றைச் சமுதாயத்தின் ஸ்தாபன வடிவம்தான் நிர்ணயிக்கிறது — நாடுகளின் சரித்திர ரீதியான தலைவிதியின் மீது **தற்செயல் விஷயங்கள்** என்று சொல்லப்படுபவற்றின் செல்வாக்கு செயல்படுவதற்கு வழி திறந்து வைக்கிறது. பதினைந்தாவது லூயீ மன்னனின் காமப்பித்து அவனது உடல் நிலையின் தவிர்க்க முடியாத ஒரு விளைவேயா

கும்; ஆனால் பிரான்ஸின் வளர்ச்சியின் பொதுவான போக்குடன் சம்பந்தப்படுத்திப் பார்க்கும் போது அவனது உடல் நிலை ஒரு **தற்செயல் விஷயமே**. இருந்த போதிலும், நாம் ஏற்கனவே சொன்னபடி, அது பிரான்ஸின் பின்னைய தலைவிதியின் மீது செல்வாக்குச் செலுத்தத்தான் செய்தது. இந்தத் தலைவிதியை நிர்ணயித்த காரணங்களில் அதுவும் ஒன்றாக அமைந்தது. மிரபோவின் மரணம் உடல்நோய் சம்பந்தமான, முற்றிலும் விதிக்குட்பட்டு நடக்கிற போக்குகளின் காரணமாகத் தான் ஏற்பட்டது என்பது நிச்சயம். ஆனால் இந்தப் போக்குகளின் தவிர்க்க முடியாத தன்மை பிரான்ஸின் வளர்ச்சியின் பொதுப் போக்கிலிருந்து தோன்றவில்லை. அது அந்தப் புகழ்பெற்ற பேச்சாளரின் உடம்பினுடைய சில குறிப்பிட்ட குணவிசேஷங்களிலிருந்தும், தனது நோயை எந்தப் பௌதீக நிலைமைகளிலிருந்து பெற்றாரோ, அந்தப் பௌதீக நிலைமைகளிலிருந்துமே தோன்றியது. பிரான்ஸின் வளர்ச்சியின் பொதுப் போக்குடன் சம்பந்தப்படுத்திப் பார்க்கையில் இந்தக் குணவிசேஷங்களும் நிலைமைகளும் **தற்செயலானவையே**. இருந்தபோதிலும் மிரபோவின் மரணம் புரட்சி மேற்கொண்டு சென்றதின் போக்கைப் பாதித்தது, அதை நிர்ணயிக்கும் காரணங்களில் அதுவும் ஒன்றாக அமைந்தது.

இரண்டாம் பிரெடெரிக் பற்றி மேலே சொன்ன உதாரணத்திலோ தற்செயலான காரணங்களின் விளைவு இன்னும் ஆச்சரியகரமாயிருந்தது. புதூர்லினின் மனவுறுதியின்மை என்ற ஒரே காரணத்தால் தான் பிரெடெரிக் மிகவும் கஷ்டமான ஒரு

நிலைமையிலிருந்து மீள முடிந்தது. ருஷ்யாவின் வளர்ச்சியின் பொதுப் போக்குடன் சம்பந்தப்படுத்திப்பார்த்தால் புதூர்லினுக்குப் பதவி கிடைத்தது— நாம் சொல்கிற அர்த்தத்தில்— தற்செயலானதாயிருக்கக்கூடும்; பிரஷ்யாவின் வளர்ச்சியின் பொதுப் போக்குடன் அதற்கு ஒரு சம்பந்தமும் இல்லை என்பது நிச்சயம். இருந்தாலும் புதூர்லினின் மன வுறுதியின்மை பிரெடெரிக்கை மிக நெருக்கடியான ஒரு நிலைமையிலிருந்து காப்பாற்றியது என்ற அனுமானம் அசாத்தியமானதல்ல. புதூர்லின் ஸ்தானத்தில் சுவோரவ் இருந்திருந்தால் பிரஷ்யாவின் சரித்திரம் வேறு போக்கில் போயிருக்கக் கூடும். ஆகவே, சில சமயங்களில் நாடுகளின் தலைவிதி **இரண்டாந்தர தற்செயல் விஷயங்கள்** என்று அழைக்கக் கூடிய தற்செயல் விஷயங்களைச் சார்ந்துள்ளது என்றுகிறது.

"In allem Endlichen ist ein Element des Zufälligen" (எல்லையும் முடிவுமுள்ள ஒவ்வொன்றிலும் தற் செயல்தன்மை ஒன்றிருக்கத்தான் செய்கிறது) என்று ஹெகல் சொன்னர். விஞ்ஞானத்தில் நாம் ''எல்லையும் முடிவுமுள்ளவற்றைத்தான்'' கவனிக்கிறோம். எனவே விஞ்ஞானங்கள் ஆராய்ந்து அறியும் எல்லா இயக்கப்போக்குகளிலும் தற்செயலின் அம்சம் ஒன்று உள்ளடங்கியிருக்கிறது என்று சொல்லலாம். நிகழ்ச்சிகளை விஞ்ஞான பூர்வமாய் அறிவதை இது மறுத்து விலக்கவில்லையா? இல்லை. **தற்செயல் என்பது ஒரு சார்பு நிலைப்பொருளே.** தவிர்க்க முடியாத இயக்கப் போக்குகள் எங்கே சந்தித்துப் பிரிகின்றனவோ, அந்த இடங்களில் மட்டுமே தற்செயல் என்பது தோன்றுகிறது. அமெரிக்காவில் ஐரோப்பியர்கள் தோற்ற

மளித்தது மெக்ஸிகோ, பெரு என்ற நாடுகளின் மக்களுக்குத் தற்செயல் விஷயமாய் இருந்தது. எந்த அர்த்தத்தில்? இந்த நாடுகளின் சமுதாய வளர்ச்சியிலிருந்து தொடர்ந்து வந்ததல்ல அது என்ற அர்த்தத்தில். ஆனால், மத்திய காலத்தின் முடிவில் மேலைய ஐரோப்பியர்களைக் கப்பல் செலுத்தும் ஆசை ஆட்கொண்டதென்னவோ தற்செயலான நிகழ்ச்சியல்ல. அதேபோல், அமெரிக்க சுதேசிகளின் எதிர்ப்பை ஐரோப்பியப் படைகள் சுலபமாக முறியடித்ததும் தற்செயலான நிகழ்ச்சியல்ல. ஐரோப்பியர்கள் மெக்ஸிகோவையும் பெருவையும் வசப்படுத்திக்கொண்டதின் விளைவுகளும் தற்செயலானவையல்ல. கடைசிப் பரிசீலனையில் பார்க்கும் போது, வசப்படுத்திக்கொள்ளப்பட்ட நாடுகளின் பொருளாதார நிலை, வசப்படுத்திக்கொண்ட நாடுகளின் பொருளாதார நிலை என்ற இரு சக்திகளின் பயனே இந்த விளைவுகளை நிர்ணயித்தது. மேலும் இந்தச் சக்திகளும் அவற்றின் விளைவும் துல்லியமான விஞ்ஞான ரீதியான பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளத் தகுந்த விஷயங்களாகும்.

ஏழாண்டு யுத்தத்தில் கண்ட தற்செயல் நிகழ்ச்சிகள் பிரஷ்யாவில் பின்தொடர்ந்த சரித்திரத்தின் மீது கணிசமான செல்வாக்கைச் செலுத்தியது. ஆனால் அவற்றின் செல்வாக்கு பிரஷ்யாவின் வளர்ச்சியின் வேறொரு கட்டத்தில் முற்றிலும் வேறாக இருந்திருக்கும். இங்கேயுங்கூட, பிரஷ்யாவின் சமுதாய-அரசியல் நிலைமை, பிரஷ்யாவின்மீது செல்வாக்குச் செலுத்திய ஐரோப்பிய நாடுகளின்

சமுதாய-அரசியல் நிலைமை என்ற இரு சக்திகளின் பயனே தற்செயல் விஷயங்களின் விளைவுகளை நிர்ணயித்தது. எனவே, இங்கேயுங்கூட தற்செயல் விஷயங்கள் விஞ்ஞான ரீதியில் நிகழ்ச்சிகளைப் பரிசீலிப்பதைத் தடை செய்யவேயில்லை.

அடிக்கடி சமுதாயத்தின் தலைவிதியின்மீது தனி நபர்கள் கணிசமான செல்வாக்குச் செலுத்துகின்றனர் என்றும், ஆனால் இந்தச் செல்வாக்கை அந்தச் சமுதாயத்தின் உள்ளமைப்பும் அதற்கும் மற்றச் சமுதாயங்களுக்குமுள்ள உறவும் நிர்ணயிக்கின்றன என்றும் இப்பொழுது நாம் தெரிந்துகொண்டோம். இருந்தபோதிலும் இத்துடன் வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரம் பற்றி எல்லாம் சொல்லிவிட்டதாகாது. இந்தப் பிரச்சினையை இன்னொரு கோணத்திலிருந்தும் பார்க்க வேண்டும்.

தாம் குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த, சிறிதான, மர்மமான க்ாரணங்கள் போதுமான எண்ணிக்கையில் இருந்திருந்தால் பிரெஞ்சுப் புரட்சியின் முடிவு நாம் அறிந்திருக்கிற முடிவுக்கு **நேரெதிரானதாக** இருந்திருக்கும் என்று செயின்ட்--பியோர்வ் கருதினர். இது பெரிய தவருகும். உளவியல் வகைப்பட்ட, உடலியல் வகைப்பட்ட சிறிய காரணங்கள் எவ்வளவுதான் சிக்கலாகப் பின்னிக் கொண்டிருந்தாலும் பிரெஞ்சுப் புரட்சியைத் தோற்றுவித்த மகத்தான சமுதாயத் தேவைகளை அவை எந்தச் சந்தர்ப்பச் சூழ்நிலைமைகளிலும் அகற்றியிருக்கமாட்டா. மேலும், இந்தத் தேவைகள் நிறைவேருதிருக்கிற வரையில் பிரான்ஸில் புரட்சி இயக்கம் தொடர்ந்து நடந்துகொண்டிருந்திருக்கும்.

ஏற்பட்ட முடிவுக்கு நேர்மாறாக இந்த இயக்கத்தின் முடிவு அமைந்திருக்க வேண்டுமானால் அந்தத் தேவைகளும் நேர்மாறான தேவைகளாக இருந்திருக்க வேண்டும். ஆனால், சிறிய காரணங்களின் எந்தக் கூட்டும் இதை எந்தக் காலத்திலும் ஏற்படுத்தியிருக்க முடியாது.

பிரெஞ்சுப் புரட்சிக்குரிய காரணங்கள் **சமுதாய உறவுகளின்** தன்மையிலே அடங்கியிருந்தன; செயின்ட்-பியோவ் பாவனை செய்துகொண்ட சிறிய காரணங்களோ, **தனிநபர்களின் சொந்தக் குணவிசேஷங்களில்** மட்டும்தான் அடங்கியிருக்கக் கூடும். சமுதாய உறவுகளுக்குரிய இறுதிக் காரணம் உற்பத்திச் சக்திகளின் நிலையிலே அடங்கியுள்ளது. இது—பொருளுற்பத்திச் சக்திகளின் நிலை—எப்படி தனிநபர்களின் குணவிசேஷங்களைச் சார்ந்திருக்கிறது? தொழில் நுணுக்க மேம்பாடுகளையும், கண்டுபிடிப்புகளையும், புதுப்புனைவுகளையும் செய்வதற்கு இந்த நபர்கள் ஏறத்தாழத் திறன் பெற்றிருக்கிறார்கள் என்ற அர்த்தத்தில் மட்டுமே அது அவர்களைச் சார்ந்திருக்கிறது. இந்தத் திறன்களை மனத்தில் கொண்டு செயின்ட்-பியோவ் பேசவில்லை. உற்பத்திச் சக்திகளின் நிலையின் மீது நேரடியாகச் செல்வாக்கு வகிக்கவும், அதன் விளைவாக, அவை நிர்ணயிக்கும் படியான சமுதாய உறவுகள்மீது, அதாவது **பொருளாதார உறவுகள்** மீது, நேரடியாகச் செல்வாக்கு வகிக்கவும் வேறெந்தக் குணவிசேஷங்களும் தனிநபர்களுக்குச் சக்தி யளிக்கிறதில்லை. குறிப்பிட்ட தனிநபரின் குணவிசேஷங்கள் எவையாயிருந்தாலும் சரி, உற்பத்திச் சக்திகளின் குறிப்பிட்ட நிலையோடு

குறிப்பிட்ட சமுதாய உறவுகள் பொருந்தியமைந்திருக்குமானுல் அந்தச் சமுதாய உறவுகளை அவரால் அகற்றிவிட முடியாது. ஆனுல் தனிநபர்களின் குண விசேஷங்கள், குறிப்பிட்ட பொருளாதார உறவுகளின் அடிப்படையிலிருந்து தோன்றுகிற சமுதாயத் தேவைகளைப் பூர்த்தி செய்யவோ அல்லது அவற்றைப் பூர்த்தியாகாதபடி தடுக்கவோ அவர்களை ஏறத்தாழத் தகுதி பெறச் செய்கின்றன. பதினெட்டாவது நூற்ருண்டின் இறுதியில் பிரான்ஸுக்கு அவசர சமூகத் தேவையாயிருந்தது எது? காலவழக்கொழிந்த அரசியல் ஸ்தாபனங்களுக்குப் பதிலாக அதன் புதிய பொருளாதார அமைப்போடு இன்னும் மேலாகப்பொருந்தியமையக்கூடிய மற்ற ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதேயாகும். மிகவும் அவசரமான இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய உதவுவதற்கு மற்றவர்களைவிட யாருக்கு மேலான திறமையிருக்கிறதோ, அவர்கள்தான் அந்தக் காலத்தில் மிகவும் பிரபலமான, உபயோககரமான சமூக ஊழியர்களாக விளங்கினர். மிரபோவும், ரொபெஸ்பியேரும், நெப்போலியனும் இவ்வகை மனிதர்கள் என்று வைத்துக்கொள்வோம். அகால மரணத்தால் மிரபோ அரசியல் அரங்கிலிருந்து அகன்றிராவிட்டால் என்ன நடந்திருக்கும்? அரசியல் சட்டத்துக்குட்பட்ட முடியரசுக் கட்சியினர் தமது மிகுந்த பலத்தை இன்னும் நீண்ட காலத்துக்கு வைத்துக்கொண்டு இருந்திருப்பார்கள். எனவே, குடியரசுவாதிகளை அவர்கள் இன்னும் வலுவாக எதிர்த்து வந்திருப்பார்கள், அவ்வளவுதான். குடியரசுவாதிகளின் வெற்றியை அந்தக் காலத்தில் எந்த மிரபோ

விஞலும் தவிர்த்திருக்க முடியாது. மிரபோவின் சக்தி மக்களின் அனுதாபத்திலும் நம்பிக்கையிலும் ஆதாரப்பட்டிருந்தது. ஏனென்ருல், பழைய அமைப்பைப் பிடிவாதமாக மன்னர் தர்பார் அரண் செய்து மக்களுக்குக் கோபமூட்டியதால் மக்கள் ஒரு குடியரசை விரும்பினர். தமது குடியரசு அபிலாஷைகளின்மீது மிரபோவுக்கு அனுதாபமில்லை என்று மக்களுக்கு என்றைக்குத் திடமாகத் தெரிந்ததோ, அன்றைக்கே அவர்கள் அவர்மீது அனுதாபம் காட்டுவதும் நின்றிருக்கும். பிறகு அந்த மாபெரும் பேச்சாளர் கிட்டத்தட்ட எல்லாச் செல்வாக்கையும் இழந்திருப்பார்; எந்த இயக்கத்தை அவர் வீணுகத் தடுக்க முயற்சித்திருப்பாரோ, அதே இயக்கத்துக்கு அவர் அநேகமாக இரையாகியுமிருப்பார். ரொபெஸ்பியேர் விஷயத்திலும் கிட்டத்தட்ட இதே மாதிரி நடந்திருக்கும் என்று சொல்லலாம். ரொபெஸ்பியேர் தமது கட்சிக்கு முற்றிலும் இன்றியமையாத சக்தியாயிருந்தார் என்றே பாவிப்போம். இருந்தாலும், அவர் அதன் ஒரே ஒரு சக்தி என்பதில்லை. உதாரணமாக, 1793 ஜனவரி மாதத்தில் தற்செயலாக ஒரு செங்கல் அவர்மீது விழுந்து அவரைக் கொன்றிருந்தால் அவரது ஸ்தானத்தில்[14] நிச்சயமாக இன்னெருவர் வந்திருப்பார். அந்த நபர் எல்லா அம்சங்களிலும் ரொபெஸ்பியேருக்குத் தாழ்ந்தவராக இருந்திருந்த போதிலும், நிகழ்ச்சிகள் ரொபெஸ்பியேர் வாழ்ந்த போது எந்தப் போக்கில் சென்றனவோ, அதே போக்கிலேதான் சென்றிருக்கும். உதாரணமாக, இந்த நிலைமைகளிலும்கூட ஜிராண்ட் தோல்வியிலிருந்து அநேகமாகத் தப்பித்

திருக்காது. ஆனல் ரொபெஸ்பியேரின் கட்சி கொஞ்சம் முன்னதாகவே அதிகாரத்தை இழந்திருக்கும்; நாம் இப்பொழுது தெர்மிடோர் மாதப் பிற்போக்கைப் பற்றிப் பேசிக்கொண்டிராமல் புளோரியல், பிரேரியல், அல்லது மெஸ்ஸிடோர்[15] பிற்போக்குப்பற்றி இப்பொழுது பேசிக் கொண்டிருப்போம். தமது இரக்கமற்ற பயங்கரவாதத்தினல் தமது கட்சியின் வீழ்ச்சியை ரொபெஸ்பியேர் துரிதப்படுத்திஞரே ஒழியத் தாமதப்படுத்தவில்லை என்று சிலர் ஒரு வேளை கூறலாம். இந்த ஹேஷ்யத்தை இங்கே நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கப் போவதில்லை; அது முற்றிலும் சரி என்றே வைத்துப் பேசுவோம். அப்படியானல் ரொபெஸ்பியேரின் கட்சி தெர்மிடோரில் வீழ்ச்சியடையாமல் புருக்டிடோரிலோ, வந்தேமியரிலோ அல்லது புருமேரிலோ வீழ்ச்சியுற்றிருக்க வேண்டும் என்று கற்பிப்பது அவசியம். சுருங்கச் சொன்னல், சற்று முன்போ பின்போ அது வீழ்ந்திருக்கும் என்ருலும் வீழ்வதென்னமோ நிச்சயமாயிருந்திருக்கும். ஏனெனில் ரொபெஸ்பியேரின் கட்சியை ஆதரித்த மக்கட்பகுதி அதிகாரத்தை நீண்ட காலத்துக்கு வைத்திருக்கக் கொஞ்சங்கூட ஆயத்தப்பட்டிருக்கவில்லை. எது எப்படி இருந்தாலும், ரொபெஸ்பியேரின் சுறுசுறுப்பான நடவடிக்கையினல் தோன்றிய விளைவுகளுக்கு ''எதிரிடையான'' விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என்ற பிரச்சினைக்கே இடமில்லை.

நெப்போலியன் போனபார்த் ஆர்கோல் போரில் ஒரு குண்டுக்கு இரையாகியிருந்தாலும் அந்த எதிரிடையான விளைவுகள் ஏற்பட்டிருக்கா. இத்தா

லியப் போரிலும் இதர போர்களிலும் அவன் செய்ததை மற்றத் தளபதிகளும் செய்திருப்பார்கள். அவன் காட்டிய அதே திறனை மற்றவர்கள் காட்டாமலிருந்திருக்கலாம், அவன் சாதித்ததைப்போல் அத்தனை பிரகாசமான வெற்றிகளைச் சாதிக்காமற் போயிருக்கலாம். இருந்தபோதிலும், அந்தக் காலத்தில் பிரெஞ்சுக் குடியரசு தான் நடத்திய போர்களில் வெற்றியடைந்திருக்கும்; ஏனெனில் அதன் போர்வீரர்கள் ஐரோப்பாவிலேயே தமக்கு நிகர் யாருமில்லை என்று சிறந்து விளங்கினர். பதினெட்டாவது புரூமேரையும்[16], பிரான்ஸின் உள்நாட்டு வாழ்வில் அது வகித்த செல்வாக்கையும் பொறுத்த வரையில், இங்கேயும் நெப்போலியனின் கீழ் எப்படியிருந்ததோ, அப்படியே தான், **சாராம்சத்தில்,** நிகழ்ச்சிகளின் பொதுப் போக்கும் முடிவும் பெரும்பாலும் இருந்திருக்கும். தெர்மிடோரின் ஒன்பதாவது நாளன்று நடந்த நிகழ்ச்சிகளால் பிரெஞ்சுக் குடியரசு மரண அடியைப் பெற்று மெல்ல மெல்லச் செத்துக் கொண்டிருந்தது. உயர்தர வகுப்பாரின் ஆதிக்கத்தைத்தானே அகற்றிவிட்டபிறகு பூர்ஷ்வா வர்க்கம் மிக அதிகமாக விரும்பியது ஒழுங்கைத் தான். ஆனால் இந்த ஒழுங்கை 'டிரெக்டுவார்' என்ற ஆட்சியதிகாரத் தலைமைக் குழுவினால் மீண்டும் நிலைநாட்ட முடியவில்லை. ஸீயே சொன்ன படி, ஒழுங்கை மீண்டும் நிலைநாட்டுவதற்கு ஒரு ''**நல்ல வாள்**'' தேவைப்பட்டது. ஒரு ''நல்ல வாள்'' என்ற பாத்திரத்தைத் தளபதி ஜூபேர் வகிப்பான் என்று கருதப்பட்டது. ஆனால் அவன் நோவி என்னும் இடத்தின் அருகாமையில் கொல்லப்பட்ட

பொழுது மொரோ, மாக்டானல்ட், பெர்னடோட் ஆகியோரின் பெயர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.* போனபார்த்தின் பெயர் பின்னுல்தான் குறிப்பிடப் பட்டது. ஜூபேர் மாதிரி அவனும் கொல்லப் பட்டிருந்திருந்தால் அவனது பெயரே குறிப்பிடப் பட்டிருக்காது; வேறு ஏதாவது ஒரு ''வாள்'' முன் நீட்டப்பட்டிருக்கும். நிகழ்ச்சிகளால் சர்வாதிகாரி என்ற நிலேக்கு உயர்த்தப்பட்டுவிட்ட மனிதன் தானும் அதிகாரத்துக்கு வர விடாமுயற்சியுடன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது, தன் பாதையில் குறுக்கிடுபவர்களே யெல்லாம் பலமாக ஒதுக்கித் தள்ளி ஈவிரக்கமில்லாமல் நசுக்கியவாறிருக்க வேண்டியிருந்தது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லே. போனபார்த் இரும்புச் சக்தி படைத்தவன்; தனது குறியை அடைவதிலே ஈவிரக்கம் எதுவும் காட்டாதவன். ஆனுல், அவனேத்தவிர, செயலூக்கமும், மேதையும், பெருமை வேட்கையும், தன்னலமும் படைத்தவர்கள் பலர் இருந்தனர். போனபார்த் தன் முயற்சியினுல் அடைந்த பதவி பெரும்பாலும் காலியாயிருந்திருக்காது. அந்தப் பதவியைத் தன் முயற்சியினுல் அடைந்து இன்னொரு தளபதி நெப்போலியனேவிடச் சமாதானப் போக்குள்ளவனுயிருந்திருப்பான், தனக்கெதிராக ஐரோப்பா முழுவதையும் திரண்டெழச் செய்யாதிருந்திருப்பான், அதன் காரணமாக செயின்ட் ஹெலினு தீவில்

* "La vie en France sous le premier Empire", par le Vicomte de Broc, Paris, 1895, p. 35-36. [விகோன்ட் டி பிரோக், ''முதல் முடியரசுக்குக் கீழ் பிரான்ஸில் நடந்த வாழ்க்கை'' பாரிஸ், *1895*, பக்கங்கள் *35-36*] முதலியன.

சாகாமல் துயெல்ரீயில்[17] காலமாகியிருந்திருப்பான் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானல் பூர்பான்கள் திரும்பவும் பிரான்ஸுக்கு வந்திருக்கவே மாட்டார்கள். ஏற்பட்ட அசல் விளைவுக்கு ''நேரெதிரான'' **விளைவாக அது அவர்களுக்கு** இருந்திருக்கும் என்பது நிச்சயம். ஆனால் பிரான்ஸ் முழுவதின் உள்நாட்டு வாழ்க்கையைப் பொறுத்தவரையில் இத்தகைய விளைவு உண்மையில் நிகழ்ந்த விளைவிலிருந்து மாறுபட்டிருக்காது. அந்த ''நல்ல வாள்'' ஒழுங்கை மீண்டும் நிலைநாட்டிவிட்டு பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆதிக்கத்தைக் கெட்டித்த பிறகு அதன் படைவீட்டுப் பழக்கங்களும் சுயேச்சாதிகாரமும் பூர்ஷ்வா வர்க்கத்துக்குச் சலித்துவிட்டிருக்கும். முடியாட்சி மீட்சிக்குப் பிறகு தோன்றியதைப் போன்றதொரு மிதவாத இயக்கம் தோன்றியிருக்கும். போராட்டம் படிப்படியாகக் கொழுந்து விட்டெரியத் தொடங்கியிருக்கும். ஆனல், ''நல்ல வாட்கள்'' இணங்கிப்போகும் இயல்புக்குப் பெயர் பெற்றவையில்லை யாதலால் புண்ணியவான் லுயீ பிலிப் தனது அருமை உறவினர்களின் அரியாசனத்தில் 1830ம் ஆண்டில் அமராமல் ஒரு வேளை 1820ம் ஆண்டிலோ 1825ம் ஆண்டிலோ அமர்ந்திருப்பான். நிகழ்ச்சிகளின் போக்கில் ஏற்படுகிற இப்படிப்பட்ட மாறுதல்கள் எல்லாம் பின்னல் வந்த ஐரோப்பிய அரசியல் வாழ்விலும், அதன்மூலம் பொருளாதார வாழ்விலும் ஓரளவுக்குச் செல்வாக்குச் செலுத்தியிருக்கக் கூடும். இருந்த போதிலும், சந்தர்ப்பச் சூழ் நிலைமைகள் எப்படிப் போயிருந்தாலும் சரி, புரட்சி இயக்கத்தின் கடைசி முடிவு, ஏற்பட்டதற்கு ''**நேர்**

விரோதமான'' முடிவாகப் போயிருந்திருக்காது. செல்வாக்குள்ள தனிநபர்கள் தமது அறிவு சம்பந்தப்பட்ட, தன்மை சம்பந்தப்பட்ட, குறிப்பிட்ட குணவிசேஷங்களின் காரணமாக நிகழ்ச்சிகளின் தனித் தனி விசேஷாம்சங்களையும் அந்நிகழ்ச்சிகளின் தனிப்பட்ட பின்விளைவுகளையும் மாற்ற முடியும், ஆனால் அந் நிகழ்ச்சிகளின் பொதுவான போக்கை அந்தத் தனிநபர்களால் மாற்ற முடியாது. அந்தப் பொதுப் போக்கை வேறு சக்திகளே நிர்ணயிக்கின்றன.

## VII

மேலும், பின்வரும் விஷயத்தையும் நாம் பார்க்க வேண்டும். வரலாற்றில் மகாபுருஷர்கள் வகிக்கும் பாத்திரத்தைப்பற்றி விவாதிக்கையில் நாம் ஒரு மாதிரியான பார்வை மயக்கத்துக்கு அநேகமாக எப்பொழுதும் இரையாகிறோம். வாசகர் களின் கவனத்திற்கு இதைக் கொண்டுவருவது பயனுள்ளதாயிருக்கும்.

பொது ஒழுங்கைக் காப்பாற்றுவதற்காக ''நல்ல வாள்'' என்ற பாத்திரத்தில் நெப்போலி யன் வெளிவந்தபொழுது அவன் மற்றத் தளபதி கள் அனைவரையும் அந்தப் பாத்திரத்தை வகிப்ப திலிருந்து தடுத்தான். அவர்களில் சிலர் அவன்மாதிரி யே, அல்லது கிட்டத்தட்ட அவன் மாதிரியே, அந் தப் பாத்திரத்தை ஏற்று நடித்திருக்கக் கூடும். சக்தி மிக்க ஒரு ராணுவ ஆட்சியாளன் வேண்டும் என்ற பொதுத் தேவை பூர்த்தியானவுடனே ஆற்றல் பெற்ற மற்றப் போர்வீரர்களும் அனைவரும் அந்தப் பதவிக்கு வராதபடி சமுதாய ஸ்தாபனம் வழியடைத் துவிட்டது. அதே வகைப்பட்ட பிற ஆற்றல்கள் வெளிப்படுவதற்கு அதன் சக்தி ஒரு தடையாக ஆகிவிட்டது. நாம் குறிப்பிட்ட பார்வை மயக்கத் துக்கு இதுதான் காரணம். நெப்போலியனின் சுய

சக்தி என்பது ரொம்பவும் மிகைப்படுத்தப்பட்ட உருவத்தில் நம்முன்னே காட்சியளிக்கிறது; ஏனெனில் அந்தச் சுய சக்தியை முன்னணிக்குக் கொண்டு வந்து ஆதரித்த சமுதாய ரீதியான சக்தியைக் கொண்டுபோய் நெப்போலியனின் சுய சக்தியின் பால் ஏற்றிப் பேசுகிறோம். நெப்போலியனுடைய சக்தி ஏதோ ஒரு விதிவிலக்குள்ள விசேஷப் பொருளாக நமக்குத் தோன்றுவதற்குக் காரணம் அதைப் போன்ற மற்றச் சக்திகள் சாத்தியம் என்ற நிலையிலிருந்து யதார்த்தம் என்ற நிலைக்கு மாறத் தவறியதுதான். நெப்போலியன் ஒருவன் இராதிருந்தால் என்ன நடந்திருக்கும்?—இப்படி யாராவது நம்மைக் கேட்டால் நமது கற்பனை மங்கிவிடுகிறது, எந்தச் சமுதாய இயக்கத்தை அவனுடைய சக்தியும் செல்வாக்கும் சார்ந்திருந்தனவோ, அந்தச் சமுதாய இயக்கம் முழுதும் அவன் இல்லாமல் நடைபெற்றிருக்காது என்று நமக்குத் தோன்றுகிறது.

மனித அறிவு வளர்ச்சியின் வரலாற்றில் ஒரு தனிநபரின் வெற்றி மற்றொரு தனிநபரின் வெற்றியைத் தடுப்பது இதைவிட அபூர்வமே. என்றாலும், இங்குகூட நாம் மேற்சொன்ன பார்வை மயக்கத்துக்கு ஆளாகாமல் இருப்பதில்லை. ஒரு குறிப்பிட்ட சமுதாய நிலை தனது அறிவுத்துறைப் பிரதிநிதிகளின்முன் சில பிரச்சினைகளை வைக்கிறபொழுது, அந்தப் பிரச்சினைகளைப் பைசல் செய்யும்வரை அவற்றின்மீது தலைசிறந்த மனிதர்களின் கவனம் முழுதும் செலுத்தப்படுகிறது. அவற்றை அவர்கள் பைசல் செய்வதில் வெற்றியடைந்தவுடனே அவர்களின் கவனம் வேறொரு விஷயத்தின்மீது திரும்பி

விடுகிறது. 'X' என்ற ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலமாக 'A' என்ற ஆற்றல் மிக்க ஒரு புருஷன் 'B' என்ற ஆற்றல் மிக்க புருஷனின் கவனத்தை ஏற்கனவே தீர்வு கண்டுவிட்ட பிரச்சினையிலிருந்து 'Y' என்றவேறொரு பிரச்சினைக்குத் திருப்பி விடுகிறான். இதில், 'A' என்ற ஆற்றல் மிக்க புருஷன் 'X' என்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்குமுன் இறந்து போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்? என்று நம்மைக் கேள்வி கேட்டால், மனித அறிவின் வளர்ச்சி என்ற இழை அறுந்து போயிருக்கும் என்று தான் நாம் கற்பனை செய்துகொள்கிறோம். 'A' இறந்து போயிருந்தால் 'B' என்ற ஆற்றல் மிக்க புருஷனோ, 'C' என்ற ஆற்றல் மிக்க புருஷனோ, 'D' என்ற ஆற்றல் மிக்க புருஷனோ அந்தப் பிரச்சினையைச் சமாளித்திருப்பான் என்பதை நாம் மறந்துவிடுகிறோம், 'A' அகால மரணம் அடைந்த போதிலும் கூட அறிவு வளர்ச்சியின் இழை யென்னமோ அறுபடாமல் அப்படியே ஓடிக் கொண்டிருந்திருக்கும்.

ஒரு குறிப்பிட்டவகை ஆற்றல் படைத்த ஒருவன் தனது ஆற்றலின் மூலமாக நிகழ்ச்சிகளின் போக்கின்மீது மிகுந்த செல்வாக்குச் செலுத்த வேண்டுமென்றால் அதற்கு இரண்டு நிபந்தனைகள் தேவை. முதலாவதாக, அவனது ஆற்றல் குறிப்பிட்ட சகாப்தத்தின் சமுதாயத் தேவைகளுக்குஅவன் மற்றவர்களைவிட ஏற்றவனாக இருக்கும்படி அவனை ஆக்க வேண்டும். நெப்போலியனுக்கு இருந்த ராணுவ மேதைக்குப் பதிலாக பேத்தோவனின் இசையாற்றலை அவன் பெற்றிருந்தால் அவன் ஒரு சக்கரவர்த்தியாகியிருக்கமாட்டான். இரண்டாவதாக,

அந்தந்தக் காலத்துக்குத் தேவையான, பிரயோஜனமாயுள்ள ஒரு குறிப்பிட்ட விசேஷகுணத்தைப் பெற்றிருக்கிற மனிதனுக்கு அன்றையச் சமுதாய அமைப்பு வழியடைத்துவிடக் கூடாது. பிரான்ஸில் பழைய அமைப்பு இன்னொரு எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு இருந்திருந்தால் இதே நெப்போலியன் யாரும் கேள்விப்படாத ஒரு சாதாரண ஜெனரலாகவோ கர்னலாகவோ போனபார்த் என்ற பெயரில் இறந்திருப்பான்.* 1789ம் ஆண்டில் தவூ, தெஸே, மர்மோன், மாக்டானல்ட் ஆகியோர் வெறும் சுபால்டர்ன் என்ற கீழ்த்தர ராணுவப் பதவியில் தான் இருந்தனர்; பெர்னடோட் ஒரு சார்ஜென்ட்-மேஜர்; ஹோஷ், மார்சோ, லிபேவர், பிஷெக்ரூ, நேய், மஸ்ஸேனு, முரா, சூல்ட் ஆகியோர் கமிஷன் பதவியில்லாத ஆபீசர்கள்; ஒஜிரோ ஒரு வாள்வித்தைக்காரர்; லான் ஒரு சாயமேற்றுபவர்; குவியோன் சான்-ஸிர் ஒரு நடிகர்; ஜூர்தான் ஒரு தெருவிற்பனைக்காரர்; பெஸ்ஸியேர் ஒரு முடி வெட்டுபவர்; புரூன் ஒரு அச்சுக் கோப்பவர்; ஜூபேர், ஜூனே இருவரும் சட்டம் படிக்கும் மாணவர்கள்; க்ளீபர் ஒரு கட்டடக் கலைஞன்; மொர்தியே புரட்சி

* பெரும்பாலும் நெப்போலியன் ருஷ்யாவுக்குப் போயிருக்கலாம்; புரட்சிக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர்த்தான் ருஷ்யாவுக்குப் போவ தென்று நெப்போலியன் நினைத்திருந்தான். அங்கே துருக்கியர்களுடனே அல்லது காக்கஸஸ் மலைப் பிரதேசத்தினருடனே நடந்த போரில் அவன் புகழ் பெற்றிருப்பான் என்பது சாத்தியம். ஆனால் இந்த ஏழ்மையான, ஆனால் திறமையுள்ள அதிகாரி சாதகமான சூழ்நிலைமைகளில் உலகத்தையே ஆள்வோனுக ஆக முடியும் என்று ருஷ்யாவில் யாரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

வருகிற வரைக்கும் ராணுவ சேவையில் இருந்ததே யில்லை.*

நம் காலம்வரை பழைய அமைப்பே நீடித்திருந்துவந்திருந்தால் பிரான்ஸில், சென்ற நூற்றுண்டின் முடிவில், சில நடிகர்களும், அச்சுக்கோப்பவர்களும், முடிவெட்டுபவர்களும், சாயமேற்றுபவர்களும், வக்கீல்களும், தெருவிற்பனைக்காரர்களும், வாள்வித்தைக்காரர்களும் **வருங்கால** ராணுவ மேதைகளாக இருந்தனர் என்று நம்மில் யாருக்கும் பட்டிருக்காது.**

டிஷியன் பிறந்த அதே காலத்தில், அதாவது 1477ம் ஆண்டில், பிறந்த ஒரு மனிதன் 1520ல் இறந்த ராபேலுடனும் 1519ல் இறந்த லியோனுர் தோ தவின்சியுடனும் நாற்பதாண்டுகள் வாழ்ந்திருக்க முடியும் என்று ஸ்டென்டால் கூறினுர்; மேலும், 1534ல் இறந்த கொர்ரிஜியோவுடன் அவன் பல ஆண்டுகள் கழித்திருக்க முடியும் என்றும் 1563ம்

---

* "Histoire de France", par V. Duruy, Paris 1893, t. II, p. 524-525. [வி. டுரூவர் எழுதிய ''பிரான்ஸின் வரலாறு'' என்ற நூல், பாரிஸ் 1893, 2ம் தொகுதி, 524-25ம் பக்கங்கள்] பார்க்க.

**பதினைந்தாவது லுயீ மன்னனின் ஆட்சிக் காலத்தில் 'மூன்றுவது எஸ்டேட்'டின் ஒரே ஒரு பிரதிநிதியான ஷெவேர் என்பவன் மட்டுமே லெப்டினன்ட்-ஜெனரல் என்ற பதவிக்கு உயர முடிந்தது. பதினுருவது லுயீ மன்னனின் ஆட்சிக் காலத்தில் இந்த எஸ்டேட்டைச் சேர்ந்தவர்கள் ராணுவப் பதவித் துறையில் முன்னேறுவது இன்னும் கடினமாயிருந்தது. Rambeaud, "Histoire de la civilisation française", sixième édition, t. II, p. 226. [ராம்போ எழுதிய ''பிரெஞ்சு நாகரிகத்தின் வரலாறு'' என்ற நூல், 6வது பதிப்பு, 2ம் தொகுதி, 226ம் பக்கம்] பார்க்க.

ஆண்டுவரை வாழ்ந்த மிகேல் ஆஞ்செலோவுடனும் பல ஆண்டுகள் கழித்திருக்கமுடியுமென்றும் கூறினர்; ஜியார்ஜியோனே இறக்கும் போது அந்த மனிதனுக்கு முப்பத்தி நான்கு வயதுக்கு மேல் ஆகியிருக்கமுடியாது என்று ஸ்டென்டால் கூறினர்; தின்டொரெட்டோவுடனும், பஸ்ஸானேவுடனும், வெரொனேஸேயுடனும், ஜூலியோ ரொமானேவுடனும், ஆன்டிரியா டெல் ஸார்டோவுடனும் அந்த மனிதன் அறிமுகமாகிப் பழகியிருக்க முடியும் என்றும் அவர் கூறினர்; சுருங்கச் சொன்னல், முழுசாக ஒரு நூற்றுண்டுக்குப்பின் தோன்றிய பொலோன் வகை ஓவியப்பிரிவினரைத்தவிர மற்றெல்லா மாபெரும் ஓவியர்களுடனும் சமகாலத்தில் அவன் வாழ்ந்திருப்பான் என்று ஸ்டென்டால் கூறினர்.* அதேபோல், ஊவர்மான் பிறந்த அதே ஆண்டில் பிறந்த ஒரு மனிதன் எல்லா மாபெரும் டச்சு நாட்டு ஓவியர்களுடனும் நேரடியாக அறிமுகமாகியிருப்பான் என்றும் சொல்லலாம்.** மேலும், ஷேக்ஸ்

---

* "Histoire de la peinture en Italie, Paris", 1892, p. 24-25. [''இத்தாலிய ஓவியக்கலையின் வரலாறு'' என்ற நூல், பாரிஸ் 1892, 24-25ம் பக்கம்] பார்க்க.

**1608ல் தெர்பர்க், பிரூவர், ரெம்பிரான்ட் ஆகியோரும், 1610ல் ஏட்ரியன் வான் ஓஸ்தாத், போத், பெர்டினன்ட் போல் ஆகியோரும், 1613ல் வான் டெர் ஹெல்ஸ்ட், ஜெரார்ட் டோ ஆகியோரும், 1615ல் மெட்ஸுவும், 1620ல் ஊவர்மானும், 1621ல் வீனிக்ஸ், எவர்டிங்கென், பெனேக்கர் ஆகியோரும், 1624ல் பெர்கெம் என்பவரும், 1625ல் பால் போட்டரும், 1626ல் ஜான் ஸ்டேனும், 1630ல் ரூயிஸ்டேலும், 1637ல் வான் டெர் ஹெய்டனும், 1638ல் ஹொப்பேமாவும், 1639ல் ஏட்ரியன் வான் டிவெல்டும், பிறந்தனர்.

பியருடன் சமவயதுடைய ஒரு மனிதன் பல குறிப் பிடத்தக்க நாடகாசிரியர்களுடன் சமகாலத்தில் வாழ்ந்திருப்பான்.*

தமது வளர்ச்சிக்கு அனுகூலமான சமுதாய நிலைமைகள் எங்கெங்கு, எவ்வெப்போது நிலவுகின் றனவோ, அங்கெல்லாம், எப்போதும் ஆற்றல்கள் தோன்றுகின்றன என்பது நீண்டகாலமாகப் பார்த்த விஷயமாகும். இதற்கு அர்த்தம், **யதார்த்தத்தில் தோன்றுகிற** ஒவ்வொரு ஆற்றல் மிக்க புருஷனும், அதாவது **ஒரு சமுதாய சக்தியாக** விளங்கும் ஒவ் வொரு ஆற்றல் மிக்க புருஷனும் **சமுதாய உறவு களால் உண்டாக்கப்பட்ட ஒரு விளைபொருளேயாவான்** விஷயம் இவ்வாறிருக்கிறதனுல், நாம் சொன்ன படி ஆற்றல் மிக்க புருஷர்கள் நிகழ்ச்சிகளின் தனித்தனி விசேஷாம்சங்களை மட்டும்தான் மாற்ற முடியுமே தவிர, அவற்றின் பொதுப் போக்கை ஏன் மாற்ற முடியாது என்பது தெளிவாகிறது. **அவர்களே இந்தப் போக்கினுல் விளைந்த ஒரு விளைபொருள் தான்; இந்தப் போக்கு மட்டும் இருந்திராவிட்டால் சாத்தியத்தையும் யதார்த்தத்தையும் வேறுபடுத்தி வைத்திருக்கிற வாயிற்படி யை அவர்கள் தாண்டியிருக்கவே மாட்டார்கள்.**

---

* ''ஷேக்ஸ்பியர், போமாண்ட், பிளெட்சர், ஜான்ஸன், வெப்ஸ்டர், மாஸிஞ்செர், போர்ட், மிடில்டன், ஹேவுட் ஆகியோர் ஒரே காலத்தில் தோன்றியவர்கள், அல்லது ஒருவர் பின்னெருவராக வந்தவர்கள். அவர்கள் ஒரு புதிய தலைமுறையின் பிரதிநிதிகள். தனக்கிருந்த சாதகமான சூழ் நிலைமைகளினுல் முந்தியத் தலைமுறையின் முயற்சிகளால் பண் படுத்தப்பட்ட மண்ணில் அந்தத் தலைமுறை செழித்தோங்கி யது.'' டேன் எழுதிய "Histoire de la littérature anglaise", Paris, 1863, t. I, p. 468. *[''ஆங்கில இலக்கியத்தின் வரலாறு'', பாரிஸ் **1863**, முதல் தொகுதி, **468**ம் பக்கம்.]*

ஆற்றல்கள் பலவிதம் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ''நாகரிகத்தின் பரிணமத்தில் ஒரு புதிய அடி வைப்பு ஒரு புதிய கலை வடிவத்தைத் தோற்றுவிக்கும் போது சமுதாயச் சிந்தனையை அரைகுறையாக வெளியிடுகிற பலப் பல ஆற்றல்கள் அதை முழுமையாக வெளியிடுகிற ஓரிரு மகாமேதைகளைச் சுற்றிலும் தோன்றுகின்றன'' என்று டேன் சரியாகத்தான் சொல்கிறார்.* இத்தாலியின் சமுதாய-அரசியல்-அறிவுத்துறை வளர்ச்சியின் பொதுப் போக்குடன் சம்பந்தமற்ற சில இயந்திரவகைப்பட்ட காரணங்கள் அல்லது உடலியல் வகைப்பட்ட காரணங்களின் விசேஷத்தால் ராபேலும் மிகேல் ஆஞ்செலோவும் லியோனார்தோ த வின்சியும் குழந்தைப் பருவத்திலேயே இறந்திருப்பார்களேயானால் இத்தாலியக் கலை குறை நிறைவாக இருந்திருக்கும், ஆனால் மறுமலர்ச்சிக் காலப் பகுதியில் அதன் வளர்ச்சியின் பொதுப் போக்கு என்னமோ அதேமாதிரிதான் இருந்திருக்கும். இந்தப் போக்கை ராபேலும், லியோனார்தோ த வின்சியும், மிகேல் ஆஞ்செலோவும் சிருஷ்டிக்கவில்லை; அவர்கள் அதன் தலைசிறந்த பிரதிநிதிகளேயாவர். ஒரு மேதையை மையமாகக் கொண்டு முழுசாக ஒரு பெரும் பிரிவினரே தோன்றிவிடுகின்றனர்; அந்த மேதையின் சீடர்கள் அவரது செயல் முறையை, அதன் நுணுக்கமான விபரம் வரைக்கும்,

*டேன் எழுதிய "Histoire de la littérature anglaise", Paris, 1863, t. II, p. 5. [''ஆங்கில இலக்கியத்தின் வரலாறு'' என்ற நூல், பாரிஸ் *1863*, 2ம் தொகுதி, 5ம் பக்கம்] பார்க்க.

பின்பற்ற முயற்சிப்பது வழக்கம் என்பது உண்மையே. அதனுல்தான் மறுமலர்ச்சிக் காலப்பகுதியில் ராபேல், மிகேல் ஆஞ்செலோ, லியோனுர்தோ த வின்சி ஆகியோரின் அகால மரணத்தால் இத்தாலியக் கலேயில் ஏற்பட்டிருக்கக் கூடிய பள்ளம் அந்தக் கலேயின் பிந்தைய வரலாற்றின் இரண்டாந்தர விசேஷாம்சங்கள் பலவற்றைப் பலமாகப் பாதித்திருக்கும். ஆனுல் பொதுக் காரணங்களினுல் இத்தாலிய அறிவுத்துறை வளர்ச்சியின் பொதுப் போக்கில் முக்கியமான மாறுதல் எதுவும் ஏற்பட்டிராமலிருந்தால் அந்த வரலாற்றில், சாராம்சத்தில், மாறுதல் ஏற்பட்டிருக்காது.

இருந்த போதிலும், அளவுரீதியான வேறுபாடுகள் கடைசியிலே குணரீதியான வேறுபாடுகளாக மாறிவிடுகின்றன என்பது பிரசித்தமான விஷயம். இது எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும்; எனவே சரித்திரத் துறைக்கும் பொருந்தும். கலேயின் ஒரு குறிப்பிட்ட போக்கை வெளியிட்டிருக்கக் கூடிய ஆற்றல் மிக்க பல நபர்களேப் பிரதிகூலமான சூழ்நிலேமைகள் கூடி ஒருவர்பின் இன்னெருவராக வாரிக்கொண்டுபோனுல் அந்தப் போக்குக்குக் குறிப்பிடத்தக்க வெளியீடு எதுவும் இல்லாமலே போய் விடக் கூடும். ஆனுல் இந்தப் போக்கு புதிய ஆற்றல் மிக்க புருஷர்களேத் தோற்றுவிக்க முடியாமற்போகிற அளவுக்கு ஆழமற்றிருந்தால் தான் ஆற்றல் மிக்க இந்த நபர்களின் அகால மரணம் இந்தப் போக்கின் கலேவடிவான வெளியீட்டைத் தடுக்க முடியும். இலக்கியத்திலும் கலேயிலும் காண்கிற ஒவ்வொரு குறிப்பிட்ட போக்கின் ஆழத்தை

நிர்ணயிப்பது அது எந்த வர்க்கத்தின், ஜனப் பகுதியின் ருசிகளை வெளியிடுகிறதோ, அந்த வர்க் கத்திற்கோ ஜனப் பகுதிக்கோ அது எவ்வளவு முக் கியமானதாயிருக்கிறது என்ற விஷயமும், அந்த வர்க்கமோ ஜனப் பகுதியோ வகிக்கும் சமுதாயப் பாத்திரமும் தான். எனவே, இங்கேயும் கடைசிப் பரிசீலனையில் பார்க்கும் போது எல்லாமே சமு தாய வளர்ச்சிப் போக்கையும் சமுதாயச் சக்திக ளின் தாரதம்மியத்தையுமே சார்ந்துள்ளன.

## VIII

ஆக, தலைமை வகிக்கும் பிரமுகர்களின் சொந்தக் குணதிசயங்கள் சரித்திர நிகழ்ச்சிகளின் தனித் தனி குணும்சங்களை நிர்ணயிக்கின்றன; மேலும், நாம் சொன்ன அர்த்தத்தில் தற்செயல் விஷயம் என்று சொல்லப்படுவது அந்த நிகழ்ச்சிகளின் போக்கிலே எப்போதுமே ஓரளவான பாத்திரம் வகிக்கத் தான் செய்கிறது. கடைசிப் பரிசீலனையில் பார்க்கையில், அந்த நிகழ்ச்சிகளின் போக்கை நிர்ணயிப்பது பொதுக் காரணங்கள் என்று சொல்லப்படுபவை தான்; அதாவது, பொருளுற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும், உற்பத்தியின் சமுதாய-பொருளாதார இயக்கப்போக்கில் மனிதர்களிடையே நிலவும், அவ்வளர்ச்சியினுல் நிர்ணயிக்கப்படும் பரஸ்பர உறவுகளும்தான். தற்செயலான நிகழ்ச்சிகளையும் புகழ்பெற்ற நபர்களின் தனிப்பட்ட குணதிசயங்களையும் ஆழப்புதைந்திருக்கும் பொதுக் காரணங்களைக் காட்டிலும் மிக நன்ருகப் பார்க்க முடிகிறது. பதினெட்டாவது நூற்ருண்டு இந்தப் பொதுக் காரணங்களைப் பற்றி வெகுவாகச் சிந்தித்துப் பார்க்கவில்லை. சரித்திரப் பிரமுகர்களின் உணர்வு பூர்வமான செயல்களையும் ''உணர்ச்சியெழுச்சிகளையும்'' கொண்டு சரித்திரத்தை விளக்க முடியும் என்று அது சொல்லியது. அந்த நூற்ருண்

டைச் சேர்ந்த தத்துவஞானிகள் மிகமிக அற்பமான காரணங்களின் விளைவினுல் கூட சரித்திரத்தின் போக்கு முற்றிலும் வேருகப் போயிருக்கக் கூடும் என்று அடித்துப் பேசினுர்கள். உதாரணமாக, ஏதாவதொரு அரசனின் மூளையில் ஓர் ''அணு'' வக்கிர சேஷ்டைகள் பண்ணத் தொடங்கியிருந்தாலும் போதும், சரித்திரத்தின் போக்கே முற்றிலும் மாறிப் போயிருக்கும் என்ருர்கள். (இந்தக் கருத்து "Système de la nature"[18] என்றநூலில் பல தடவை சொல்லப்பட்டிருக்கிறது.)

வரலாற்று விஞ்ஞானத்தில் புதிய போக்கை ஆதரித்துப் பேசியவர்கள் ''அணுக்கள்'' எப்படியிருந்தாலும் சரி, சரித்திரம் வேறு போக்கிலே போயிருக்க முடியாது என்று வாதிக்கத் தொடங்கினுர்கள். பொதுக் காரணங்களின் விளைவைப்பற்றி எவ்வளவுக்கெவ்வளவு அழுத்திச் சொல்ல முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அழுத்திச் சொல்ல இவர்கள் முயற்சிக்கப் போய்ச் சரித்திரப் பிரமுகர்களின் தனிப்பட்ட குணுதிசயங்களை இவர்கள் உதாசீனம் செய்தார்கள். ஏறத்தாழத் திறமையுள்ள நபர்களில் ஒருவருக்குப் பதிலாக இன்னெருவர் இருந்துவிட்டுப் போயிருந்தாலும் சரித்திர நிகழ்ச்சிகள் பாதிக்கப்பட்டிருக்கமாட்டா என்று அவர்கள் வாதித்தார்கள்.* ஆனுல் நாம் இதை ஏற்போமேயானுல்

---

*அதாவது, சரித்திர நிகழ்ச்சிகளின் விதிக்குட்படும் தன்மையைப்பற்றி விவாதிக்கையில் இந்த விதம் வாதித்தார்கள். ஆனுல், அவர்களில் சிலர் இந்த நிகழ்ச்சிகளை வெறுமே வர்ணிக்கும்போது சில சமயங்களில் இந்தத் தனிநபர் அம்சத்துக்கு மிகையான முக்கியத்துவம் கற்பித்தார்கள். ஆனுல் நாம் இங்கே அக்கறை காட்டுவது அவர்களின் வர்ணனைகளில் அல்ல, அவர்களின் வாதங்களில்தான்.

தனிநபர் அம்சத்திற்கு வரலாற்றில் ஒரு முக்கியத்துவ மும் கிடையாது என்று ஒத்துக்கொண்டு தீர வேண் டும், பொதுவான காரணங்களின் செய்கையினுல் தான், வரலாற்றின் முன்னேற்றம் சம்பந்தமான பொது விதிகளால்தான் எல்லாமே நடக்கின்றன என்று ஒத்துக்கொண்டு தீர வேண்டும். எதிரான கருத்தில் அடங்கி யிருக்கும் சிறிதளவு உண்மை இடமே யில்லாதபடி செய்யும் படியான ஓர் எல் லேக்குப் போவதாகும் இது. இதன் காரணமாகவே இந்த எதிரான கருத்து நிலேத்திருக்கக் கொஞ்சம் உரிமை பெற்றுவிட்டது. இவ்விரு கருத்துக்களிடை யே ஏற்பட்ட மோதல் பொதுக் காரணங்களே முதற் பகுதியாகவும், தனிநபர்களின் நடவடிக்கைகளே இரண்டாவது பகுதியாகவும் கொண்ட ஒரு முரண் பட்ட முழுமையாக வடிவம் பெற்றது. இரண்டாம் பகுதியின் கோணத்திலிருந்து பார்க்கையில் வர லாறு என்பது தற்செயல் நிகழ்ச்சிகளின் வெறும் சங்கிலித் தொடர்தான்; முதற் பகுதியின் கோணத் திலிருந்து பார்க்கையில் சரித்திர நிகழ்ச்சிக ளின் தனிப்பட்ட விசேஷாம்சங்களும் கூட பொதுக் காரணங்கள் செயல்படுவதினுல் தான் நிர்ணயிக் கப்படுகின்றன என்று தோன்றியது. பொதுக் காரணங்கள் வகிக்கும் செல்வாக்கினுல் தான் நிகழ்ச்சிகளின் தனிப்பட்ட விசேஷாம்சங்களும் நிர்ணயிக்கப் படுகின்றன என்ருல், அவை சரித் திரப் பிரமுகர்களின் தனிப்பட்ட குணவிசேஷங் களேப் பொறுத்திருக்கவில்லே என்ருல், இந்த விசே ஷாம்சங்களேப் பொதுக் காரணங்கள்தாம் நிர்ணயிக் கின்றன என்றும் அந்தப் பிரமுகர்கள் எவ்வளவு

தான் மாறிப் போனாலும் இந்த விசேஷாம்சங்களை மாற்றவே முடியாது என்றும் ஏற்படுகிறது. இவ்வாறு இந்தத் தத்துவம் **விதிவாதத்தின்** தன்மையைப் பெறுகிறது.

இதை அதன் எதிரிகள் பார்க்கத் தவறவில்லை. மின்யேயின் வரலாற்றுக் கண்ணோட்டத்தை செயின்ட்-பியோவ் பொஸூவேயின் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் ஒப்பிட்டுக் காட்டினார். சரித்திர நிகழ்ச்சிகளை நடத்திவைக்கும் சக்தி மேலிருந்து வருகிறது, தெய்வச் சித்தத்தை வெளியிடுவதற்கு நிகழ்ச்சிகள் உதவுகின்றன என்று பொஸூவே கருதினார். இந்தச் சக்தியை மனித உணர்ச்சி யெழுச்சிகளில் மின்யே தேடிச் சென்றார். இயற்கைச் சக்திகளைப்போல் மாற்றமுடியாத படி நிலையாக இவை சரித்திர நிகழ்ச்சிகளில் வெளியிடப்படுகின்றனவாம். இருவருமே வரலாற்றை நிகழ்ச்சிகளின் ஒரு சங்கிலித் தொடராகவே பாவித்தனர்; சூழ்நிலைமைகள் எந்த விதமானவையாயிருந்தாலும் சரி, அந்த நிகழ்ச்சிகள் வேறாக இருந்திருக்க முடியா என்று கருதினர்; இருவருமே விதிவாதிகள்; அந்த விஷயத்தில் தத்துவஞானிக்கும் பாதிரிக்கும் அதிக வித்தியாசமிருக்கவில்லை (le philosophe se rapproche du prêtre).

சமுதாய நிகழ்ச்சிகளிலுள்ள விதிக்குட்படும் தன்மை பற்றிய போதனை சரித்திரப் பிரமுகர்களின் தனிப்பட்ட குணாதிசயங்கள் வகிக்கும் செல்வாக்கு வெறும் பூஜ்ஜியம் என்று சொல்லிவந்த வரை இந்த இகழ்ச்சியில் நியாயமிருந்தது. இந்த இகழ்ச்சியினால் உண்டான அபிப்பிராயம் அதிக பலமாக இருந்திருக்க வேண்டும் என்பதற்குக் காரணம் என்னவென்றால்

பதினெட்டாம் நூற்றுண்டைச் சேர்ந்த சரித்திராசிரியர்கள், தத்துவஞானிகள் போலவே இந்தப் புதிய கோஷ்டியைச் சேர்ந்த சரித்திராசிரியர்களும் **மனித இயல்பையே** மற்றவற்றை விட மேலானதொரு மூலமென்றும், அதிலிருந்து தான் சரித்திர இயக்கத்தின் **பொதுக் காரணங்கள்** அனைத்தும் பிறந்தன என்றும், அவையனைத்தும் அதற்குக் கீழ்ப் படிந்திருந்தன என்றும் கருதிவந்தார்கள் என்பது தான். ஆனுல், சரித்திர நிகழ்ச்சிகளை மனிதர்களின் **உணர்வுபூர்வமான** செயல்கள் மட்டும் நிர்ணயித்து விடுவதில்லை என்று பிரெஞ்சுப் புரட்சி காட்டிவிட்டது. எனவே, மின்யேயும் கிஸோவும் அதே போக்கையுடைய மற்றச் சரித்திராசிரியர்களும் **மனக்கட்டுப்பாட்டை** எதிர்த்து அடிக்கடி கலகம் செய்கிற **உணர்ச்சி எழுச்சிகளின்** விளைவே தலையாயதென்று கருதினர். சரித்திர நிகழ்ச்சிகளுக்கு உணர்ச்சியெழுச்சிகள் தாம் மிகப் பொதுவான, இறுதியான காரணங்களாகும் என்று சொன்னுல், ஒரு கேள்வி: பிரெஞ்சுப் புரட்சிக் காலத்தில் மக்களைத் தூண்டிய உணர்ச்சி யெழுச்சிகளுக்கு நேர்மாறுன உணர்ச்சி யெழுச்சிகளைத் தூண்டி விடக் கூடிய ஆற்றல் பெற்ற தனிநபர்கள் இருந்திருந்தால் பிரெஞ்சுப் புரட்சி நாமறிந்திருக்கும் முடிவுக்கு நேர்மாறுன முடிவை அடைந்திருக்கக் கூடும் என்று செயின்ட்-பியோவ் சொல்வது ஏன் தவறுகும்? ஏனெனில் மனித இயல்பிலுள்ள குணுதிசயங்களின் நிமித்தமாக பிரெஞ்சு மக்களை வேறு உணர்ச்சி யெழுச்சிகள் தூண்டியிருக்கமுடியா என்று மின்யே சொல்லியிருப்பார். ஒரு விதத்தில் இது உண்மையாயுமிருந்திருக்

கும். ஆனல் இந்த உண்மையில் விதிவாதத்தின் சாயல் பலமாய் விழுந்திருக்கும். ஏனெனில் எல்லா விபரங்களும் அடங்கலாக மனிதகுல வரலாறு முழுவதும் மனித இயல்பின் **பொதுவான** குணுதிசயங்களினுல் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டுவிட்டிருக்கின்றது என்ற ஆய்வுரைக்கு ஒப்பாக இது இருந்திருக்கும். **பொது அம்சத்தில் தனியம்சம்** மறைந்து விடுவதின் விளைவாக விதிவாதம் இங்கே காட்சியளிக்கிறது. எப்போதும் இப்படி மறைந்து விடுவதின் விளைவேதான் அது என்று இங்கே இடையே சொல்லி வைக்கிறோம். ''சமுதாயத் தோற்றங்கள் அனைத்தும் தவிர்க்க முடியாதவை என்று சொன்னல் நமது நடவடிக்கைக்கு ஒரு முக்கியத்துவமும் கிடையாது'' என்று சொல்லப் படுகிறது. இது ஓர் உண்மையான கருத்தைப் பற்றிய தவருன வரையறுப்பாகும். **பொது அம்சத்தின்** விளைவாகத்தான் அனைத்தும் நிகழ்கின்றன என்று சொன்னல், எனது முயற்சிகள் உட்பட, **தனியம்சம்** எதற்கும் எந்த முக்கியத்துவமும் இல்லை என்றுதான் நாம் சொல்ல வேண்டும். **இத்தகைய** அனுமானம் சரியானதே, ஆனல் தவருகப் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. சரித்திரம் பற்றிய நவீனகாலத்திய லோகாயதவாதப் பார்வையுடன் அதைப் பொருத்துவது அர்த்தமற்றது; ஏனெனில் அந்தப் பார்வையில் **தனியம்சத்துக்கு** இடமுண்டு. ஆனல் முடியாட்சி மீட்சிக் காலத்தைச் சேர்ந்த பிரெஞ்சு சரித்திராசிரியர்களின் கருத்துக்களுடன் அதைப் பொருத்துவது நியாயமானதே.

தற்காலத்தில் சரித்திர முன்னேற்றத்துக்கு மனித இயல்புதான் இறுதியான, மிகப் பொதுவான

காரணம் என்று இனிக் கருதுவதற்கில்லை. மனித இயல்பு நிலையானது என்று சொன்னுல் சரித்திரத்தின் மிகவும் மாறுபடும் போக்கை அது விளக்கித் தர முடியாது. மனித இயல்பு மாறுபடும் தன்மையுள்ளது என்று சொன்னுல் அதன் மாறுபாடுகளைச் சரித்திரத்தின் முன்னேற்றம்தான் நிர்ணயிக்கிறது என்பது வெளிப்படை. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியே மனித வர்க்கத்தின் சரித்திர முன்னேற்றத்திற்குரிய இறுதியான, மிகப் பொதுவான காரணம் என்றுதான் தற்காலத்தில் நாம் கருத வேண்டும்; மேலும், இந்த உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிதான் மனிதர்களின் சமுதாய உறவுகளில் வரிசைக்கிரமமாக ஏற்பட்டு வந்துள்ள மாறுதல்களை நிர்ணயிக்கின்றது. இந்தப் **பொதுவான** காரணத்தோடு கூடவே **பிரத்தியேகமான** காரணங்களும் இருக்கின்றன; அதாவது, **சரித்திர நிலைமை** என்று ஒன்று அமைகிறது. இந்தச் சரித்திர நிலைமையில் தான் ஒரு குறிப்பிட்ட நாட்டின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி நடந்தேறுகிறது; கடைசியாகப் பார்க்கப் போனுல், இதர நாடுகளில் இந்த உற்பத்திச் சக்திகள் அடைந்துள்ள வளர்ச்சியே தான், அதாவது அதே பொதுக் காரணம் தான், இந்தச் சரித்திர நிலைமையையும் சிருஷ்டிக்கிறது.

கடைசியாக, **பிரத்தியேகமான** காரணங்கள் வகிக்கும் செல்வாக்குக்குத் துணையாகத் **தனிநபர் வகைப்பட்ட** காரணங்கள்—அதாவது சமூகப் பிரமுகர்களின் தனிப்பட்ட குணுதிசயங்களும், இன்னும் இதர ''தற்செயல்களும்'' —வேலை செய்கின்றன. இவற்றின் விசேஷத்தால்தான் கடைசியிலே நிகழ்ச்

சிகள் தமது **தனிப்பட்ட குணும்சங்களைப்** பெறுகின்றன. **பொதுக்** காரணங்களும் **பிரத்தியேகக்** காரணங்களும் வேலை செய்வதில் **தனிநபர் வகைப்பட்ட** காரணங்கள் அடிப்படையான மாறுதல்களைக் கொண்டுவர முடியாது; மேலும், அந்தப் பொதுக் காரணங்களும் பிரத்தியேகக் காரணங்களும் தான் தனிநபர் வகைப்பட்ட காரணங்கள் வகிக்கும் செல்வாக்கின் போக்கையும் வரம்புகளையும் நிர்ணயிக்கின்றன. இருந்தபோதிலும், சரித்திரத்தின் மீது செல்வாக்குச் செலுத்திய தனிநபர் வகைப்பட்ட காரணங்களுக்குப் பதிலாக அதே வகையைச் சேர்ந்த வேறு காரணங்கள் வேலை செய்திருந்தால் சரித்திரம் வேறு விதமான குணும்சங்களைப் பெற்றிருந்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

மொனேவும் சரி லாம்ப்ரேஹ்டும் சரி, மனித இயல்பு என்ற பார்வையைத்தான் இன்னும் கைக்கொண்டிருக்கிருர்கள். சமுதாய மனப்பான்மை தான் சரித்திரத் தோற்றங்களுக்கு அடிப்படையான காரணம் என்பது தமது அபிப்பிராயம் என்று லாம்ப்ரேஹ்ட் அழுத்தந்திருத்தமாகப் பல தடவைகளில் பறைசாற்றியுள்ளார். இது ஒரு மாபெரும் தவருகும். இந்தத் தவற்றின் காரணமாக, ''சமுதாய வாழ்வின் முழுத்தொகையையும்'' கணக்கில் எடுத்துப்பார்க்க வேண்டும் என்ற ஆசையானது— அந்த ஆசை எவ்வளவோ மெச்சத்தக்கதாயிருந்தாலும் சரி — மொழுமொழு வென்றிருந்த போதிலும் சத்தேயில்லாத வகைப்பட்ட ஒரு கதம்பத் தத்துவத்துக்குக் கொண்டு போய் விடும், அல்லது அதை மிகவும் முரணின்றிப் பின்பற்றுபவர்

களை மனதுக்கும் புலன்களுக்கும் இடையே எது முக்கியம் என்கிற விஷயம் சம்பந்தப்பட்ட காப்லிட்ஸினது போன்ற வாதங்களுக்குக் கொண்டு போய்விடும்.

அதிருக்கட்டும், நம் விஷயத்துக்குத் திரும்பி வருவோம். ஒருவனை மகாபுருஷன் என்று ஏன் சொல்கிறோம்? அவனது தனிப்பட்ட குணாதிசயங்கள் மாபெரும் சரித்திர நிகழ்ச்சிகளுக்குத் தனிப்பட்ட குணாம்சங்களைத் தருகின்றன என்பதற்காக அல்ல; தனது காலத்தில் பொதுக் காரணங்களின் விளைவாகவும் பிரத்தியேகமான காரணங்களின் விளைவாகவும் எழுந்த மகத்தான சமுதாயத் தேவைகளுக்குப் பணி புரிவதற்குத் திறன் அளிக்கும்படியான குணாதிசயங்களை அவன் பெற்றிருக்கிறான் என்பதற்காகத்தான். வீரர்களைப் பற்றிக் கார்லைல் எழுதியுள்ள பிரபல நூலில் மகாபுருஷர்களைத் **துவக்கி வைப்பவர்கள்** (Beginners) என்று வர்ணிக்கிறார். இது மிகப் பொருத்தமான வர்ணனையாகும். சுருக்கமாகச் சொன்னால் மகாபுருஷன் எனப்படுபவன் துவக்கிவைப்பவன்தான். ஏனெனில் மற்றவர்களைவிட அவன் **அதிக தூரம்** பார்க்கிறான், மற்றவர்களைவிட அவன் விஷயங்களை **அதிக ஆர்வத்துடன்** விரும்புகிறான். சமுதாயத்தின் அறிவு வளர்ச்சியின் முந்திய போக்கினால் முன்வைக்கப்படுகிற விஞ்ஞானப் பிரச்சினைகளுக்கு அவன் விடையளிக்கிறான். சமுதாய உறவுகளின் முந்திய வளர்ச்சியால் சிருஷ்டிக்கப்பட்ட புதிய சமுதாயத் தேவைகளை அவன் சுட்டிக்காட்டுகிறான். அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவன்தான் முன்முயற்சி செய்கிறான்.

அவன் வீரன். விஷயங்களின் இயல்பான போக்கைத் தடுக்கவோ மாற்றவோ அவனால் முடியும் என்ற அர்த்தத்தில் அல்ல; அவசியமாகியிருக்கும், உணர்வின்றி நிகழும் இந்தப் போக்கின் உணர்வுபூர்வமான சுதந்திரமான வெளியீடாக அவனது செயல்கள் இருக்கின்றன என்ற அர்த்தத்தில் அவன் வீரனாகிறான். அவனது முக்கியத்துவம் அனைத்தும் அவனது சக்தி அனைத்தும் இதில்தான் அடங்கியுள்ளன. ஆனால் இந்த முக்கியத்துவம் பிரம்மாண்டமானது, இந்தச் சக்தி பயங்கரமானது.

விஷயங்களின் இயல்பான போக்கு என்றால் என்ன?

நாம் சரித்திரத்தை உண்டாக்க முடியாது, சரித்திரம் உருவாக்கப்பட்டு வரும்வரை நாம் காத்திருக்க வேண்டும் என்று பிஸ்மார்க் கூறினார். ஆனால் சரித்திரத்தை உண்டாக்குபவர்கள் யார்? அதை உண்டாக்குபவன் **சமுதாய மனிதனே**; அவன்தான் அதற்குரிய ஒரே **''காரணப் பொருள்''**. சமுதாய மனிதன் தனக்குச் சொந்தமான, அதாவது சமுதாயரீதியான, உறவுகளைச் சிருஷ்டிக்கிறான். ஆனால், குறிப்பிட்ட காலப்பகுதியில் மற்றவற்றிற்குப் பதிலாக இப்படிப்பட்ட உறவுகளை அவன் சிருஷ்டிக்கிறான் என்றால் அதற்கு நிச்சயமாக ஒரு காரணம் இருந்து தீர வேண்டும். அதை நிர்ணயிப்பது உற்பத்திச் சக்திகளின் நிலைதான். இந்தச் சக்திகளின் நிலைக்கு **இனிமேற்கொண்டு** பொருத்தமாயில்லாத உறவுகளையோ அல்லது அவற்றின் நிலைக்கு **இன்னும்** பொருந்தி வராமலேயிருக்கிற உறவுகளையோ சமுதாயத்தின்மேல் எந்த மகாபுருஷனும் திணிக்க முடியாது. இந்த அர்த்தத்தில், அவனால்

சரித்திரத்தை உண்டாக்க முடியாது. இந்த நிலையில் அவன் காலத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து பின்தள்ளிவிட முயற்சிப்பது வீணாகும். அவனால் காலத்தைத் துரிதப்படுத்தவும் முடியாது, பின்செல்லச் செய்யவும் முடியாது. இங்கே லாம்ப்ரேஹ்ட் சொல்வது முழுவதும் சரி. அதிகாரத்தின் உச்சியிலிருந்த போதுகூட பிஸ்மார்க்கினால் ஜெர்மனியைப் பழைய இயற்கைப் பொருளாதார முறைக்குப் பின்தள்ள முடியவில்லை.

சமுதாய உறவுகளுக்கும் தமக்குரிய தர்க்க முறை ஒன்றுண்டு. குறிப்பிட்ட பரஸ்பர உறவு முறைகளில் மனிதர்கள் இருக்கிற வரைக்கும் ஒரு குறிப்பிட்ட வழியில் அவர்கள் உணரவும், சிந்திக்கவும், செயலாற்றவும் செய்கிறார்கள். வேறு வழியில் செய்வதில்லை. இந்தத் தர்க்க முறையை மகாபுருஷர்கள் எதிர்க்க முயற்சிப்பதும் பயனளிக்காது. விஷயங்களின் இயல்பான போக்கு (அதாவது, சமுதாய உறவுகளிலுள்ள இதே தர்க்க முறை) அவனது முயற்சிகளை எல்லாம் வீணாக்கிவிடும். ஆனால், உற்பத்தியின் சமுதாய-பொருளாதாரப் போக்கில் ஏற்பட்ட குறிப்பிட்ட மாறுதல்களின் காரணமாகச் சமுதாய உறவுகள் எந்தத் திசையை நோக்கி மாறி வருகின்றன என்பதை நான் அறிந்தால் எந்தத் திசையில் சமுதாய மனப்பான்மை மாறி வருகிறது என்பதையும் நான் அறிவேன்; எனவே, அதன்மீது செல்வாக்குச் செலுத்தவும் என்னால் முடிகிறது. சமுதாய மனப்பான்மையின்மீது செல்வாக்குச் செலுத்துவது என்பதற்கு அர்த்தம் சரித்திர நிகழ்ச்சிகளின்மீது செல்வாக்குச் செலுத்துவது என்பது

தான். ஆகவே, ஒரு விதத்தில் என்னல் சரித்திரத் தைச் சிருஷ்டிக்க முடியும்; அது ''உருவாகிக் கொண் டிருக்கும்'' வரை நான் காத்துக் கிடக்க வேண் டிய அவசியமேயில்லை.

ஸ்தாபனங்களையும் பொருளாதார நிலைமை களையும் குறிக்கிற அறிகுறிகளாகவும் உருவகங்க ளாகவும் மட்டுமே சரித்திரத்தில் உண்மையிலே முக்கியத்துவம் வகிக்கிற சம்பவங்களுக்கும் தனி நபர்களுக்கும் முக்கியத்துவம் இருக்கின்றது என்று மொனே நம்புகிருர். மிகத் துல்லியமற்ற முறை யில் வெளியிடப் பட்டிருந்த போதிலும் இது சரி யான கருத்துத்தான். இது சரியான கருத்தாயிருப் பதினுல்தான் மகாபுருஷர்களின் செயல்களை மேற் சொன்ன நிலைமைகளின், ஸ்தாபனங்களின் ''மந்த மான முன்னேற்றத்துக்கு'' எதிராக நிறுத்தக் கூடாது. ''பொருளாதார நிலைமைகளில்'' ஏறக் குறைய மெதுவாக நிகழும் மாறுதல் தனது ஸ்தாபனங்களை ஏறத்தாழத் துரிதமாக மாற்றி விடும் படி யான அவசியத்தை அவ்வப்பொழுது சமுதாயத் தின்முன் வைக்கிறது. இந்த மாறுதல் என்றுமே ''தானுக'' நிகழ்வதில்லை. இதற்கு எப்பொழுதும் மனிதர்களின் குறுக்கீடு அவசியப்படுகிறது. இப் படித்தான் மனிதர்களை மாபெரும் சமுதாயப் பிரச் சினைகள் எதிர்கொள்கின்றன. மற்றவர்களைவிட யார் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவியாக அதிகமாகப் பணி புரிகிருர்களோ அவர்களைத் தான் மகாபுருஷர்கள் என்று அழைக்கிருேம். ஆனல் பிரச்சினை தீர்க்கப்பட்டது என்பதற்கு அர்த்தம் அந்தப் பிரச்சினையின் தீர்வைக் குறிக்கும் ''அறி

குறியாக'', ''உருவகமாக'' மட்டும் அவன் இருந்து விடுவதல்ல.

ஒன்றுக்கு எதிராக இன்னொன்றை மொனோ நிறுத்தியதற்குப் பிரதான காரணம் ''மந்தமான'' என்கிற இனிமையான சொல்லைக் கண்டு அவர் மயங்கி விட்டதுதான். நவீனகாலத்திய பரிணமவாதிகள் பலர் இந்த வார்த்தையை வெகுவாக விரும்புகிறார்கள். உளவியல் முறைப்படி பார்த்தால் இந்தப் பெரு வேட்கையைப் புரிந்துகொள்ள முடிகிறது. நிதானமும் நுணுக்கமும் மலிந்த மதிப்பு மிக்க வட்டாரங்களில் இது தவிர்க்க முடியாதவாறு எழுகின்றது.... ஆனால், தர்க்க முறைப்படி பார்த்தால், ஹெகல் நிரூபித்துள்ளபடி இது பரிசோதனையின் முன் நிற்க முடியாது.

மேலும், செயல் புரிவதற்குரிய விரிவான களம் ''துவக்கிவைப்பவர்களுக்கும்'' ''மகா'' புருஷர்களுக்கும் மட்டும் இல்லை. அக்கம் பக்கத்தாரை நேசிப்பதற்கு உள்ளமும், பார்ப்பதற்குக் கண்ணும், கேட்பதற்குக் காதும் உள்ளவர்கள் அனைவருக்குமே அது உண்டு. மகத்தானது என்ற கருத்து ஒரு சார்புக் கருத்தே யாகும். ஒழுக்கவகைப்பட்ட அர்த்தத்தில் பார்த்தால், பைபிளில் சொன்ன வசனத்தின்படி, ''தனது நண்பனுக்காக உயிர்த்தியாகம் செய்கிற'' ஒவ்வொருவனும் ஒரு மகாபுருஷனே.

## குறிப்புகள்

கி. வ. பிளெகானவ் எழுதிய ''வரலாற்றில் தனி நபர் வகிக்கும் பாத்திரம்'' என்ற கட்டுரை 1898ம் ஆண்டில் முதன்முதலாக ''விஞ்ஞான விமர்சனம்'' என்ற பத்திரிகையின் 3வது, 4வது இதழ்களில் ஏ. கிர்ஸானவ் என்ற புனைபெயரில் வெளியிடப்பெற்றது.

[1] இங்கே ருஷ்ய மிதவாத நரோதிஸத்தின் (மூன்ருவது குறிப்பைப் பார்க்க) தத்துவாசிரியரான நி. கோ. மிஹாய்லோவ்ஸ்கிய் (1842-1904) குறிப்பிடப்படுகிருர். காப்லிட்ஸின் கட்டுரை வெளிவந்தவுடனே இவர் தமது ''இலக்கியக் குறிப்பு''களில் (1878) அதைப்பற்றி அபிப்பிராயம் தெரிவித்தார்.

பக்கம் 24

[2] சாந்திவாதம் — இது ஓர் ஆங்கிலேய மதக் குழுவைக் குறிக்கிறது. இந்தக் குழு சித்தத்தின் சுதந்திரத்தை மறுத்தது; மனிதன் சுதந்திரமாகச் செயல் புரிவதில்லை, தேவையின் தூண்டுதலினுல் தான் செயல் புரிகிருன் என்று சாதித்தது.

பக்கம் 26

[3] இது ருஷ்ய நரோத்னிக்குகளான பி. ல. லாவ்ரோவ், நி. கோ. மிஹாய்லோவ்ஸ்கிய் ஆகியோரையும், சமூக விஞ்ஞானத்தில் அகநிலைப் பிரிவு என்று சொல்லப்பட்ட பிரிவைச் சேர்ந்த மற்றவர்களையும் குறிக்கிறது. அகநிலை

வாதிகள் ''விமர்சனக் கண் கொண்டு சிந்திக்கும் தனிநபர்கள்தாம்'' வரலாற்றை உருவாக்குகிறவர்கள் என்று கருதினர்; அந்தத் தனிநபர்களுக்கு எதிராகச் செயலற்ற மக்களை, ''ஜனக்கும்பலை'', நிறுத்தினர். அவர்களின் நடைமுறை நடவடிக்கை வாழ்க்கையுடன் தொடர்பறுத்த ''இலட்சிய''த் திட்டங்களை ஆதாரமாகக் கொண்டிருந்தது. சமுதாய வளர்ச்சியின் பொருளாதார விதிகளை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. காலத்திற்கொவ்வாததாகிவிட்ட பழைய கிராமச் சமுதாயங்களை (ஒப்ஷீனுக்களை) ஆதாரமாகக் கொண்டு தேசியத் தன்மையைப் பாதுகாக்கும் சொந்த வழியில், முதலாளித்துவ ரீதியிலில்லாத வழியில், ருஷ்யாவின் வளர்ச்சியைச் செலுத்தலாம் என்று கருதி, அவற்றைப் பேணிப் பாதுகாத்துக் கெட்டிப்படுத்துவதின் வழியாக ருஷ்யாவில் முதலாளித்துவம் வளர்வதைத் தடுக்க வீண்முயற்சி செய்தனர்.

பக்கம் *35*

[4] இது இ. ஸெ. துர்கேனெவ் எழுதிய ''ஷிக்ரோவ்ஸ்கிய் உயெஸ்டின் ஹாம்லெட்'' என்ற நூலிலிருந்து கி. வ. பிளெகானவ் கையாண்ட சொல் ஆகும்.

பக்கம் *36*

[5] ருஷ்ய''சீடர்கள்'' — தணிக்கையாளர்களிடமிருந்து தப்பிப்பதற்காகச் சட்டபூர்வமான பத்திரிகைகளில் மார்க்ஸீயவாதிகளைக் குறிப்பதற்கென்று கையாளப்பட்ட சொற்றொடர் ஆகும்.

பக்கம் *39*

[6] *1880-90*ம் ஆண்டுக் காலத்திலும் *1890-1900*ம் ஆண்டுக் காலத்தின் முதற் பகுதியிலும் ருஷ்யப் புரட்சி இயக்கத்தில் அரசியல் பிற்போக்கும் ஓரளவு மந்தமும் ஏற்பட்ட காலப்பகுதியை இது குறிக்கிறது. அந்தக் காலத்திற்குள் ருஷ்யாவில் முதலாளித்துவம் ஆழமாக வேரூன்றி விட்டது. அகநிலைவாதிகளான நரோத்னிக்குகள் (மூன்றுவது

குறிப்பைப் பார்க்க) ருஷ்யாவில் தேசியத்தன்மையைக் கடைப்பிடிக்கும், முதலாளித்துவ ரீதியிலில்லாத வளர்ச்சிக்கு வழியுண்டு என்று சொன்ன தத்துவத்தை வாழ்க்கையே பொய்யென்று நிரூபித்துவிட்டது.

பக்கம் 48

[7] அக்காக்கிய் அக்காக்கியெவிச் — நி. வ. கோகல் எழுதிய ''மேலங்கி'' என்ற கதையில் வரும் ஒரு பாத்திரம்.

பக்கம் 48

[8] வரலாற்று நிகழ்ச்சிகள் மன்னர்களின், அரசியல் ஞானிகளின் சித்தத்துக்கும் விருப்பங்களுக்கும் அப்பால் சுதந்திரமாய் நிகழ்வன என்று தமது நூல்களில் காட்டுவதற்கு வீகோ, மொந்தெஸ்கியோ, ஹெர்டர் ஆகியோர் முயற்சித்தனர். வரலாற்றின் நிரந்தரச் சுழலில் ஒன்றன்பின்னென்ருய் வந்த அரசுகள் மாறிமாறி எழுவதும் வீழ்வதுமாயிருப்பதிலுள்ள சரித்திர இயக்கப் போக்குகளின் விதியை வீகோ கண்டு அது தெய்வத்தால் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட விதி என்று குறித்தார். இயற்கையின் சூழ்நிலைமைகள்—குறிப்பாக பூகோள, சீதோஷ்ண நிலைமைகள்—சமுதாயத்தின் மேல் செலுத்தும் செல்வாக்கே சரித்திரத்தின் விதிக்குட்பட்ட தன்மைக்குக் காரணம் என்று மொந்தெஸ்கியோவும் ஹெர்டரும் சொன்னுர்கள்.

பக்கம் 61

[9] இது கிஸோ, மின்யே, தியேரி ஆகியோரைக் குறிக்கிறது. முதலாவது நெப்போலியனை வீழ்த்தியபிறகு வந்த முடியாட்சி மீட்சிக் காலத்தை (1814-1830)ச் சேர்ந்த பிரெஞ்சு சரித்திராசிரியர்கள் இவர்கள்.

பூர்ஷ்வா அமைப்புமுறையை நிலப்பிரபுத்துவப் பிற்போக்கிடமிருந்தும், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்திடமிருந்தும், ஒருங்கே பாதுகாக்கையில் இவர்கள் பூர்ஷ்வா சொத்து உறவுகளின் ஸ்திரத்தன்மை பற்றிய கருத்துக்களை உருவாக்கினர். புதிய காலப்பகுதியின் சமுதாய

வளர்ச்சியில் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் இடையே நடக்கும் வர்க்கப் போராட்டம்தான் மிக முக்கியமான முற்போக்கான காரணப் பொருள் என்று கருதினர். அவர்கள் அபிப்பிராயத்தில் சரித்திர நிகழ்ச்சிகளின் போக்கு தவிர்க்க முடியாதது, அது ஆட்சியாளர்களின் நோக்கத்தையும் சித்தத்தையும் பொருத்திருக்கவில்லை, ஆகவே வரலாற்றில் தனிநபர் முக்கியமான பாத்திரம் எதுவும் வகிக்க முடியாது.

பக்கம் 69

[10] **ஆஸ்திரிய பட்டத்து வாரிசுக்காக நடந்த யுத்தம்** — இங்கிலாந்து, ஹாலந்து, யுத்தக் கடைசியில் சேர்ந்த ருஷ்யா ஆகியவற்றின் ஆதரவுடன் ஒரு பக்கத்தில் ஆஸ்திரியாவுக்கும் இன்னொரு பக்கத்தில் பிரஷ்யா, ஸ்பெயின், பிரான்ஸ், இன்னும் பல ஜெர்மன், இத்தாலிய அரசுகளுக்கும் இடையே 1740ம் ஆண்டிலிருந்து 1748 வரை இந்த யுத்தம் நடந்தது. ஆஸ்திரிய மன்னன் ஆறுவது கார்ல் இறந்த பிறகு ஆண்வாரிசு இல்லாமையால் அவனது மகள் மரியா தெரிஸா பட்டத்துக்கு வந்தாள். ஆறுவது கார்ல் மன்னன் காலமான பிறகு ஆஸ்திரியாவின் எதிரிகள் அதன் ஒரு பகுதிக்கு உரிமைகொண்டாடினர். இந்த யுத்தத்தின் விளைவாகத் தொழில் வளமுள்ள சைலீஷியாவின் பெரும் பகுதியை ஆஸ்திரியா பிரஷ்யாவுக்குப் பறிகொடுத்தது; இத்தாலியிலிருந்த சில உடமைகளையும் இழந்தது.

பக்கம் 69

[11] **ஆகென் சமாதான ஒப்பந்தம்** — ஆஸ்திரிய பட்டத்திற்காகப் பதினைந்தாவது லுயீ மன்னன் நடத்திய யுத்தம் — சாதகமான சூழ்நிலைமைகளில் தொடங்கியது. வெற்றியும் தோல்வியும் மாறிமாறிக் கிடைக்கும் நிலையில் யுத்தம் நடந்தது. ஆகென் சமாதான ஒப்பந்தத்தின் மூலம் 1748ல் யுத்தம் நிறுத்தப்பட்டு, ஹாலந்திலிருந்த தனது உடைமைகள் அனைத்தையும் பிரான்ஸ் இழக்க வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது.

பக்கம் 69

[12] ஏழாண்டு யுத்தம் (*1756-1763*): பிரஷ்யாவும் இங்கிலாந்தும் ஒரு புறமும், பிரான்ஸ், ஆஸ்திரியா, ருஷ்யா, சாக்ஸனி, ஸ்வீடன் இன்னொரு புறமும் இருந்து இந்த யுத்தம் நடந்தது. ஆஸ்திரியப் பட்டத்து வாரிசுக்காக நடந்த யுத்தத்தில் தன்னிடமிருந்து பிரஷ்யா பறித்துக் கொண்ட சைலீஷியாவை ஆஸ்திரியா திரும்பப்பெற விரும்பியதும், வட அமெரிக்காவிலும் இந்தியாவிலும் காலனிகளுக்காக இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் இடையே நடந்து வந்த போராட்டமும் தான் இந்த யுத்தத்துக்கு முக்கிய காரணங்கள்.

பக்கம் 69

[13] *1757* நவம்பர் 5ம் தேதியில் நடந்த ரோஸ்பாக் போரில் இரண்டாவது பிரெடெரிக் மன்னனின் துருப்புக்கள், தளபதி சூபீஸ் தலைமையிலிருந்த *20,000* துருப்புக்கள் கொண்ட பிரெஞ்சுப் படையின் ஆதரவோடு கூடிய எதிரியைத் தோற்கடித்து வெற்றிபெற்றன.

பக்கம் 79

[14] *1793* ஜனவரி *21*ம் தேதியன்று பிரெஞ்சுக் கன்வென்ஷன் பிரெஞ்சு மன்னன் பதினாறாவது லூயீயைச் சிரச்சேதம் செய்தது.

பக்கம் 89

[15] தெர்மிடோர், புளோரியல், பிரேரியல், மெஸ்ஸிடோர், புரூமேர், புருக்டிடோர், வந்தேமியர் — பிரெஞ்சுப் புரட்சிக் காலண்டரில் உள்ள மாதங்களின் பெயர்கள். *1793* இலையுதிர்காலத்தில் கன்வென்ஷனால் புகுத்தப்பட்டன. எதிர்ப்புரட்சித் தன்மைகொண்ட கத்தோலிக்க சர்ச்சுக்கும் புரட்சிக்கும் இடையே அடியோடு தொடர்பு அறுபட்டுவிட்டதை வலியுறுத்துவதற்காக இவ்வாறு செய்யப்பட்டது.

தெர்மிடோர் பிற்போக்கு என்பது *1794*ம் ஆண்டில் தெர்மிடோர் *9*ம் தேதி (ஜூலை *27*) நிகழ்ந்த எதிர்ப்புரட்சியின் அரசியல் அதிரடிக்குப்பிறகு பிரான்ஸில் புகுந்த

சமுதாய-அரசியல் பிற்போக்கு ஆகும். குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தினரின் சர்வாதிகாரத்துக்கு இது முற்றுப்புள்ளி வைத்து அதன் தலைவரான ரொபெஸ்பியேரைச் சிரச்சேதம் செய்தது.

பக்கம் 90

[16] குடியரசின் எட்டாம் ஆண்டில் நடந்த புரூமேர் மாதம் 18ம் தேதி — இந்தத் தேதியில்தான் தளபதி நெப்போலியன் போனபார்த் அரசியல் அதிரடியை நிகழ்த்தினன். இது டிரெக்டுவார் என்ற ஆட்சிக்குழுவின் ஆட்சியை வீழ்த்திவிட்டு 'கான்ஸுலேட்' என்ற ஓர் ஆட்சித்தலைமையை ஸ்தாபித்தது. இந்த 'கான்ஸுலேட்' பிறகு சாம்ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதற்கு வழியைச் செப்பனிட்டுத்தந்தது.

பக்கம் 91

[17] துய்லெரீ — பாரிஸ் நகரிலுள்ள மன்னர் அரண்மனை. முதலாவது நெப்போலியனின் ஜாகை.

பக்கம் 92

[18] "Systeme de la Nature" [''இயற்கையின் அமைப்புமுறை'']: இது ஹோல்பாக் என்ற பிரெஞ்சு லோகாயதவாதத் தத்துவ ஞானியின் பிரதான நூல். அவர் 18ம் நூற்றுண்டைச் சேர்ந்தவர்.

பக்கம் 104

## பெயர்ப் பட்டியல்


ஆர்கென்ஹால்டஸ், யோகன் வில்ஹெல்ம் வான்*(1743-1812)*—*ஜெர்மானியச் சரித்திராசிரியர், 77.*

ஆன்டிரியா டெல் ஸார்டோ: *பார்க்க ஸார்டோ, ஆன்டிரியா டெல்.*

ஊவர்மான், பிலிப்ஸ் *(1619-1668)—டச்சு ஓவியர், 100.*

எங்கெல்ஸ், பிரெடெரிக் *(1820-1895)—10.*

எலிஸவெத்தா பெட்ரோவ்ன *(1709-1761)*—அகில ருஷ்யச் *சக்கரவர்த்தினி (1741-1761), 72.*

எவர்டிங்கென், அல்லார்ட் வான் *(1621-1675)*—*டச்சு ஓவியர், செதுக்குச் சித்திரக் கலைஞர்.*

ஏட்ரியன் வான் டி வெல்டு: *பார்க்க வெல்டு, ஏட்ரியன் வான் டி.*

ஏட்ரியன் வான் ஓஸ்தாத்: *பார்க்க ஓஸ்தாத், ஏட்ரியன் வான்.*

ஓஜிரோ, பியேர் பிரான்ஸுவா ஷார்ல் *(1757-1816)*—பிரெஞ்சு *இராணுவ மார்ஷல், 98.*

ஓஸ்தாத், ஏட்ரியன் வான் *(1610-1685)*—*டச்சு ஓவியர், செதுக்குச் சித்திரக் கலைஞர், 100.*

க்ளீபர், ஜான் படீஸ்ட்*(1753-1800)* — பிரெஞ்சு ஜெனரல், *98.*

கரேயெவ், நிக்கலாய் இவானவிச் *(1850-1931)* — ருஷ்ய மித *வாத-பூர்ஷ்வா சரித்திராசிரியர்; கட்டுரையாளர், சமூக வியலில் அகநிலை முறையைப் பின்பற்றியவர், 47, 49.*

காப்லிட்ஸ் *(1848-1893)*—ருஷ்ய நரோத்னிக் கட்டுரை *யாளர், 24, 25, 26, 113.*

**கார்லைல், தாமஸ்** *(1795-1881)—ஆங்கிலத் தத்துவசாஸ்திரி, சரித்திராசிரியர், கட்டுரையாளர், 113.*

**கால்வின், ஜான்** *(ஜான் ஷொவேன்) (1509-1564)—மதச் சீர்திருத்தத் தலைவர்களில் ஒருவர்; கால்வினிஸம் எனப் படும் பிராடஸ்டெண்ட் சித்தாந்தத்தைத் தோற்று வித்தவர், 29, 30, 36.*

**கிராம்வெல், ஆலிவர்** *(1599-1658) —17ம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் நடந்த புரட்சியின் பிரமுகர், 30.*

**கிளியோபாத்ரா** *(கி. மு. 69-30) — ப்தாலமி வம்ச ஆட்சிக் காலத்து எகிப்தின் கடைசி அரசி (கி. மு. 51-30), 74.*

**கிஸோ, பிரான்ஸூவா பியேர் கிய்யோம்** *(1787-1874)—பிரெஞ்சு சரித்திராசிரியர், ராஜதந்திரி, 59-60, 65-66, 109.*

**குவியோன், சான்-சிர்:** *பார்க்க சான்-சிர், மார்க்விஸ் லூரான் குவியோன்.*

**குஸ்தாவ், ஆடால்ப்** *(1594-1632)—சுவீடன் நாட்டு அரசன் (1611-1632), பொது, இராணுவச் சீர்திருத்தக்காரன்; முப்பதாண்டுப் போரில் பங்காற்றினன், 77.*

**கொர்ரிஜியோ** *(1494-1534) (உண்மைப் பெயர்—அந்தோனி யோ அல்லெக்ரி த கொர்ரிஜியோ)—இத்தாலிய ஓவி யர், 97.*

**கோகல், நிக்கலாய் வசீலியெவிச்** *(1809-1852)—ருஷ்ய எழுத் தாளர், 121.*

**சார்ல்ஸ் ஆறுவது** *(1685-1740)—புனித ரோம சாம்ராஜ் யம் எனப்பட்டதின் சக்கரவர்த்தி (1711-1740), 122.*

**சான்-சிர், லூரான் டெ குவியோன்** *(1764-1830)—பிரான்சின் இராணுவ மார்ஷல், 98.*

**சுவோரவ், அலெக்ஸாந்தர் வசீலியெவிச்** *(1730-1800) — ஜெனரலிஸ்ஸிமோ, ருஷ்ய ஜெனரல், 72, 84.*

**சூபீஸ், ஷார்ல் டெ ரிகான்** *(1715-1787) — பிரான்ஸின் இரா ணுவ மார்ஷல், 70, 74, 79, 81.*

**சூல்ட், நிக்கொலா ஜான் டெ டீயோ** *(1769-1851) — பிரான் ஸின் இராணுவ மார்ஷல், நெப்போலியனது படை யெழுச்சியில் பங்கு கொண்டவன், 98.*

**செர்க்ஸெஸ்** *(519?-465* B. C.*)—பாரசீக அரசன், 77.*

செயின்ட்-பியோவ், ஷார்ல் ஒகுஸ்தேன் *(1804-1869)*— *பிரெஞ்சு விமர்சகர், இலக்கிய விமர்சனத்தில் சரித்திர-வாழ்க்கை வரலாற்று முறையைத் தோற்றுவித்தவர், 66, 68, 72, 76,78, 86-87, 108-109.*

டிஷியன், வெசெல்லி அல்லது வெசெல்லியோ *(சுமாராக 1477-1576)— இத்தாலிய ஓவியர், 99.*

டூருவா, விக்டர் *(1811-1894)— பிரெஞ்சுச் சரித்திராசிரியர், ராஜதந்திரி, 99.*

டேரியஸ் *(558?-486* B. C.*)—பாரசீக மன்னன், 77.*

டேன், இப்பொலித் அடோல்ப் *(1828-1893) — பிரெஞ்சு சரித்திராசிரியர், தத்துவசாஸ்திரி, கலைவிமர்சகர், 99-100.*

டோ, ஜெரார்ட் *(1613-1675) —டச்சு ஓவியர், 100.*

தவூ, லுயீ நிக்கொலா *(1770-1823)—பிரெஞ்சு இராணுவ மார்ஷல்; நெப்போலியனது மிக நெருங்கிய படைத் தோழர்களில் ஒருவன், 98.*

தாவீது *(*கி. மு. *11ம் நூற்றுண்டின் முடிவு-10ம் நூற்ருண் டின் தொடக்கம்)—யூத மன்னன், 36.*

தியேர், லுயீ அடோல்ப் *(1797-1877)—பிரெஞ்சு சரித்திரா சிரியர், ராஜதந்திரி, 1871ம் ஆண்டையப் பாரிஸ் கம்யூ ஊனக் கழுவேற்றியவர், 64-66.*

தியேரி, ஒகுஸ்தேன் *(1795-1856)— பிரெஞ்சு சரித்திராசி ரியர், 59, 63, 65.*

தின்டொரெட்டோ *(உண்மை பெயர்—ஜக்கோப்போ ரொ புஸ்டீ) (1518-1594)—இத்தாலிய ஓவியர், 100.*

துர்கேனெவ், இவான் செர்கேயெவிச் *(1818-1883) —* ருஷ்ய *எழுத்தாளர், 120.*

துரேன், அன்ரி டெ ல தூர் டொவெர்ன் *(1611-1675)— பிரான்ஸின் மார்ஷல், முப்பதாண்டுப் போரில் பங் கெடுத்துக் கொண்டவர், 77.*

தெர்பர்க், கெரார்ட் *(1617-1681)—டச்சு ஓவியர், 100.*

தெஸே டெ வெய்கு, லுயீ ஷார்ல் அண்டுவான் *(1768-1880)— பிரெஞ்சு ஜெனரல், 98.*

தொக்வில், அலெக்ஸிஸ் ஷார்ல் அன்ரி மொரிஸ் கிளெரெல் டெ *(1805-1859)*—*பிரெஞ்சு சரித்திராசிரியர், ராஜ தந்திரி, 59.*

நெக்ராஸவ், நிக்கலாய் அலெக்ஸேயெவிச் *(1821-1877)*—*ருஷ்யக் கவிஞர், 21.*

நெப்போலியன் போனபார்த் *(1769-1821)*—*பிரெஞ்சு மக்களின் சக்கரவர்த்தி (1804-1814, பின்பு 1815), 16, 36, 73, 88, 90, 92, 95-98.*

நேய், மிஷேல் *(1769-1815)*—*பிரான்ஸின் இராணுவ மார்ஷல், நெப்போலியனின் துணைவர்களில் ஒருவன், 98.*

பக்டானவ், அலெக்ஸாந்தர் அலெக்ஸாந்தரவிச் *(மலினோவ்ஸ்கிய்)(1873-1928)*—*தத்துவசாஸ்திரி, பொருளியல் அறிஞர், சோஷல்-டெமாக்ராட்டு; மார்க்ஸீயத்தைத் திருத்த வேண்டுமென்று பிரசாரம் செய்தார், 8.*

பஸ்ஸானோ, ஜக்கோப்போ *(1510-1592)*—*இத்தாலிய ஓவியர், 100.*

பாயர்பாக், லுத்விக் *(1804-1872)* — *ஜெர்மானிய லோகாயதவாதத் தத்துவசாஸ்திரி, 10.*

பிரீஸ்ட்லி, ஜோஸெப் *(1733-1804)* — *ஆங்கில ரசாயன சாஸ்திரி, லோகாயதவாத தத்துவசாஸ்திரி, முன்னேற்றப் போக்குள்ள பிரமுகர், 27-28.*

பிரூவர், ஆட்ரியன் *(1606-1638)*— *டச்சு ஓவியர், 100.*

பிரெடெரிக் இரண்டாவது *(1712-1786)* — *பிரஷ்யாவின் அரசன் (1740-1786), 71-72, 83-84.*

பிரேன், அன்ரி *(1862-1935)* —*பெல்ஜிய சரித்திராசிரியர், 58-59.*

பிரைஸ், ரிசார்டு *(1723-1791)*—*ஆங்கிலக் கட்டுரையாளர், பொருளியல் அறிஞர், நீதிமுறைத் தத்துவசாஸ்திரி, 27-28.*

பிரோக், ஹெர்வே *(1848-1916)* — *பிரெஞ்சு சரித்திராசிரியர்.*

பிளெட்சர், ஜான் *(1579-1625)*—*ஆங்கில நாடகாசிரியர், 101.*

பிஷெக்ரூ, ஷார்ல் *(1761-1804)* — *பிரெஞ்சு இராணுவ, அரசியல் பிரமுகர், 98.*

பிஸ்மார்க், ஆட்டோ எத்வார்த் வான் *(1815-1898)*—இளவரசர், பிரஷ்ய ராஜதந்திரி, அரசியல் வாதி. ஜெர்மன் சாம்ராஜ்ஜியத்தின் முதல் சான்ஸலர், 16, 52-54, 114-115.

பிஹ்டே, யோகன் கொட்லிப் *(1762-1814)*—ஜெர்மானியத் தத்துவ சாஸ்திரி, அகநிலை ஆன்மீகவாதி, 31.

பீட்டர் முதலாவது *(1672-1725)*— ருஷ்ய சக்கரவர்த்தி *(1628-1725)*, படைத் தலைவன், ராஜதந்திரி, 16.

புதூர்லின், அலெக்ஸாந்தர் பரீஸவிச் *(1694-1767)*—ஜெனரல்பீல்டுமார்ஷல்; ஏழாண்டுப் போர்க் காலத்தில் ருஷ்ய இராணுவத்தின் தலைமைத் தளகர்த்தராக இருந்தார், 72, 81, 83-84.

புருன், கிய்யோம் மரீ அண் *(1763-1815)*—பிரெஞ்சு இராணுவ மார்ஷல், 98.

புரோய்லீ, விக்டோர் பிரான்ஸூவா *(1718-1804)* — பிரெஞ்சு இராணுவ மார்ஷல், 71.

பெர்கெம், கிளாயேஸ் பீட்டர் *(1620-1683)*—டச்சு ஓவியர், 100.

பெர்ணடோட், ஜான் படீஸ்ட் ஜூல் *(1763-1844)* — பிரெஞ்சு இராணுவ மார்ஷல்; சுவீடன், நார்வே அரசன் *(1818-1844)*, 91, 98.

பெலீன்ஸ்கிய், விஸ்ஸரியோன் கிரிகோரியெவிச் *(1811-1848)* —ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, இலக்கிய விமர்சகர், 35.

பெனேக்கர், அடாம் *(1622-1673)* — டச்சு ஓவியர், 100.

பெஸ்ஸியேர், ஜான் படீஸ்ட் *(1766-1813)*—பிரெஞ்சு இராணுவ மார்ஷல், 98.

பேத்தோவன், லுத்விக் வான் *(1770-1827)* — ஜெர்மானிய சங்கீதகர்த்தர், 97.

பேர்ன்ஷ்டைன், எடுவார்ட் *(1850-1932)*—ஜெர்மானிய சோஷல்-டெமாக்ராட்டு, மார்க்ஸீயத்தைத் திருத்தவேண்டுமென்று பிரசாராம் செய்தார், 8.

பொம்பதூர், ஜான் அண்டுவனேட் *(1721-1764)*—பதினைந்தாம் லுயியின் ஆசைக் கிழத்தி, 69-70, 71, 78-80.

பொமார்ஷே, பியேர் ஒகுஸ்தேன் கரோன் *(1732-1799)*—
*பிரெஞ்சுக் கேலி நாடகாசிரியர், 63.*
பொஸுவே, ஜாக் பெனிஞ் *(1627-1704)—பிஷப், பிரெஞ்சு நூலாசிரியர், 108.*
போட்டர், பால் *(1625-1654)—டச்சு ஓவியர், செதுக்குச் சித்திரக் கலைஞர், 100.*
போத், ஜான் *(1618-1652)—டச்சு ஓவியர், 98.*
போமாண்ட், பிரென்ஸிஸ் *(1584-1616)—ஆங்கில நாடகாசிரியர், 101.*
போர்ட், ஜான் *(1586?-1638க்குப் பிறகு)—ஆங்கிலக் கவிஞர், நாடகாசிரியர், 101.*
போல், பெர்டினன்ட் *(1616-1680)—டச்சு ஓவியர், செதுக்குச் சித்திரக் கலைஞர், 100.*
போனபார்த்
*பார்க்க: நெப்போலியன்.*
மகமது *(சுமாராக 570-632)—இஸ்லாம் மதத்தின் ஸ்தாபகர், 29, 36.*
மசாரிக், தாமஸ் காரிக் *(1850-1937)—செக்கோஸ்லோவாக்கிய அரசியல் வாதி, தத்துவசாஸ்திரி, 8.*
மர்மோன், ஒகுஸ்ட் பிரெடெரிக் லுயீ வியேஸ் *(1774-1852)—பிரான்ஸின் இராணுவ மார்ஷல், நெப்போலியனது மிக நெருங்கிய துணைவர்களில் ஒருவர், 98.*
மரியா தெரிஸா *(1717-1780)—ஆஸ்திரியாவின் தலைமைக் கோமகள்; புனித ரோம சாம்ராஜ்ஜியம் எனப்படுவதன் சக்கரவர்த்தினி, 69, 71.*
மஸ்ஸேனு, அன்றே *(1758-1817)—பிரெஞ்சு இராணுவ மார்ஷல், நெப்போலியனது படையெழுச்சிகளில் பங்கு கொண்டவன், 98.*
மாக்டானல்ட், ஜாக் எட்டியேன், ஜொஸேப் *(1765-1840)—பிரெஞ்சு இராணுவ மார்ஷல், பிரான்ஸின் பிரபு, நெப்போலியனது படையெழுச்சிகளில் பங்காற்றியவர், 91, 98.*
மாப்லி, காப்ரியேல் பொன்னே *(1709-1785)—பிரெஞ்சு சிந்தனையாளர், கற்பனு கம்யூனிஸ்ட், 61.*
மார்க்ஸ், கார்ல் *(1818-1883)—8-11.*

மார்சோ, பிரான்ஸூவா ஸெவெரின் *(1769-1796)*—ஜென ரல், 18ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் நடந்த பிரெஞ்சு பூர்ஷ்வா புரட்சியின் பிரமுகர், 98.

மார்தேன், பான் லூயீ அன்ரி *(1810-1883)* — பிரெஞ்சு சரித்திராசிரியர், 76.

மாஸிஞ்செர், பிலிப் *(1583-1640)* — ஆங்கில நாடகாசிரியர், 101.

மிகேல் ஆஞ்செலோ, புவனரோட்டி *(1475-1564)*—இத்தாலியச் சிற்பி, ஓவியர், கட்டடச் சிற்பி, கவிஞர், 100, 102-103.

மிடில்டன், தாமஸ் *(1570?-1627)* ஆங்கில நாடகாசிரியர், 101.

மிரபோ, ஒனெரே விக்டோர் ரிக்கெட்டு *(1749-1791)*—18ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற பிரெஞ்சு பூர்ஷ்வா புரட்சியின் தலைவர்களில் ஒருவன், சிறந்த சொல்லாளி, 73, 83, 88-89.

மின்யே, பிரான்ஸூவா ஒகுஸ்ட மரீ *(1796-1884)* — பிரெஞ்சு சரித்திராசிரியர். 59-60, 64-66, 73-74, 108-109.

மிஹாய்லோவ்ஸ்கிய், நிக்கலாய் கன்ஸ்தன்தீனவிச் *(1842-1904)* —ருஷ்ய நரோத்னிக் கட்டுரையாளர், 64.

மீனேஸ்—புராணக் கதைகளின் படி தொன்மைக் கிரீட் நாட்டின் அரசன், 61.

முரா, யோகிம் *(1767-1815)*—பிரெஞ்சு மார்ஷல், நெய்பிள்ஸ் அரசன் *(1805-1815)* நெப்போலியனைப் பின்பற்றியவன். குதிரை வீரர்களின் தலைவன், 98.

மெட்ஸூ, காப்ரியேல் *(1629-1667)*—டச்சு ஓவியர், 100.

மொந்தெஸ்கியோ, ஷார்ல் லூயீ *(1689-1755)* — பிரெஞ்சு நூலாசிரியர், 60.

மொர்தியே, எடுவார்ட் அடோல்ப் கஸிமிர் ஜோஸேப் *(1768-1835)* — பிரெஞ்சு இராணுவ மார்ஷல், அரசியல்வாதி, 98.

மொரோ, ஜான் விக்டோர் *(1763-1813)*—பிரெஞ்சு ஜெனரல், 91.

மொனே, காப்ரியேல் *(1844-1912)*—பிரெஞ்சு சரித்திராசிரியர், *15, 56, 59, 110, 114-115.*
மோஸஸ்—*விவிலிய நூலில் வரும் தலைவர், எபிரேயர்களுக்குச் சட்டம் வழங்கியவர், 30.*
ரம்போ, அல்பிரேட் நிக்கொலா *(1842-1905) மிதவாதப் போக்குள்ள பிரெஞ்சு சரித்திராசிரியர்.*
ராபேல் *(ராபயேல்லோ சான்டி) (1483-1520)—இத்தாலிய ஓவியர், 99, 102-103.*
ரிஷெலியோ, அர்மான் ஜான் டு பிளெஸ்ஸி *(1585-1642)—கோமகன், கார்டினல், பிரெஞ்சு ராஜதந்திரி, 70.*
ரெம்பிரான்ட், ஹார்மன்ஷ் வான் ரெயின் *(1606-1669)—டச்சு ஓவியர், செதுக்குச் சித்திரக் கலைஞர், 100.*
ரெனே*(1510-1575) — பன்னிரண்டாவது லுயீயின் மகள், 36.*
ரூயிஸ்டேல், ஜாக்கப் *(1628?-1682)—டச்சு ஓவியர், 100.*
ரொபெஸ்பியேர், மக்ஸிமிலியேன் பிரான்ஸுவா மரீ இஸிடோர் டெ *(1758-1794)—18ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற பிரெஞ்சு பூர்ஷ்வா புரட்சியின் பிரபலஸ்தர், புரட்சி அரசாங்கத்தின் தலைவர் (1793-1794), 72, 86-88.*
ரொமானே, ஜூலியோ *(1499-1546) — இத்தாலிய ஓவியர், கட்டடச்சிற்பி,100.*
லஸ்ஸால், பெர்டினுன்ட் *(1825-1864)—ஜெர்மானியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பிரபல தலைவர். லஸ்ஸாலிய வாதம் என்ற சீர்திருத்தப் போக்கைத் தோற்றுவித்தவர், 54.*
லாடன், கிடேயன் எர்ன்ஸ்ட் *(1717-1790)—ஆஸ்திரிய பீல்டு மார்ஷல், 72.*
லாம்ப்ரேஹ்ட், கார்ல் *(1856-1915)—ஜெர்மானிய சரித்திராசிரியர், ஜெர்மனியின் வரலாறு பற்றிய முழுமையான நூல் ஒன்றின் ஆசிரியர், 15, 51, 53, 56, 60, 112, 115.*
லாவ்ரோவ், பியோத்தர் லாவ்ரோவிச் *(1823-1900)—ருஷ்ய நரோத்னிக் கட்டுரையாளர்.*

லான், ஜான் *(1769-1809)*—பிரான்ஸின் இராணுவ மார்ஷல், நெப்போலியனது சேனையின் பிரபல தளகர்த்தர், 98.

லான்ஸோன், குஸ்தாவ் *(1857-1934)* — இலக்கிய வரலாறு பற்றிய பிரெஞ்சு எழுத்தாளர், 28-29.

லிக்குர்கஸ்—ஸ்பார்டா நாட்டின் கதைகளில் வரும் சட்ட மியற்றுவோன், 61-62.

லிபேவர், பிரான்ஸூவா ஜொஸேப் *(1755-1820)*—பிரெஞ்சு இராணுவ மார்ஷல், நெப்போலியனது போர்களிலே பங்கெடுத்துக்கொண்டார், 98.

லியோனுர்தோ த வின்சி *(1452-1519)*—இத்தாலிய ஓவியர், விஞ்ஞானி, எஞ்சினீயர், 99, 102-103.

லிசாண்டர் *(கி. மு. 395)* — ஸ்பார்டா கப்பற்படைத் தலைவன், 62.

லுயீ பன்னிரண்டாவது *(1462-1515)* — பிரான்ஸ் அரசன் *(1498-1515)*, 36.

லுயீ பதினைந்தாவது *(1710-1774)*—பிரான்ஸ் அரசன் *(1715-1774)*, 18, 68-69, 74, 76, 78, 80, 97.

லுயீ பதிஞருவது *(1754-1793)*—பிரான்ஸ் அரசன் *(1774-1792)*

லுயீ, பிலிப் *(1773-1850)*—பிரான்ஸ் அரசன் *(1830-1848)*, 93.

லூதர், மார்ட்டின் *(1483-1546)*—மதச் சீர்திருத்தத் தலைவர்களில் ஒருவர், ஜெர்மனியில் பிராடஸ்டென்ட் மதப் பிரிவைத் தோற்றுவித்தவர், 31.

லெனின், விளாதிமிர் இலிச் *(1870 - 1924)*—3, 8.

லைப்னிட்ஸ், கொட்பிரீட் வில்ஹெல்ம் *(1646-1716)*—ஜெர்மன் கணித நிபுணர், ஆன்மீகவாதத் தத்துவசாஸ்திரி, 33.

வான் ஓஸ்தாத்: பார்க்க ஓஸ்தாத் ஏட்ரியன் வான்.

வீகோ, ஜியோவானி படீஸ்டா *(1668-1744)*—இத்தாலியத் தத்துவசாஸ்திரி, சமூகவிஞ்ஞானி, சட்டவியல் நிபுணர், 60.

வீனிக்ஸ், ஜான் பாப்டிஸ்ட் *(1621-1660)*—டச்சு ஓவியர், 100.

வெப்ஸ்டர், ஜான் *(சுமாராக 1580-சுமாராக 1625)*—ஆங்கில நாடகாசிரியர், 99.

வெரொனேஸே, பாவோலோ *(1528-1588)*—இத்தாலிய ஓவியர், 100.
வெல்டு, ஏட்ரியன் வான் டி*(1636?-1672)*—டச்சு ஓவியர், 100.
ஜான்ஸன், பெஞ்சமின் *(1573?-1637)* — ஆங்கில் நாடகாசிரியர், 101.
ஜியார்ஜியோனே, டா காஸ்டெல்பிரான்கோ *(1478?-1510)*—இத்தாலிய ஓவியர், 98.
ஜூபேர், பார்டெலெமி கடெரின் *(1769-1799)* — பிரெஞ்சு ஜெனரல், 91, 98.
ஜூர்தான், ஜான் படீஸ்ட் *(1762-1833)*—பிரெஞ்சு இராணுவ மார்ஷல், 96.
ஜூனோ, அண்டோஷ் *(1771-1813)*—பிரெஞ்சு ஜெனரல், 98.
ஜொலி, அன்ரி *(1839-?)*—பிரெஞ்சுத் தத்துவசாஸ்திரி, 53.
ஷ்டாம்லர், ருடோல்ப் *(1856-1938)*—புதுவகைக் கான்ட் வாதியான ஜெர்மானியத் தத்துவசாஸ்திரி, சட்டவியல் அறிஞர், 32, 34-35.
ஷ்மிட், கொன்ருட்*(1863-1932)*—ஜெர்மானிய சோஷல்-டெமாக்ராட், திருத்தவாதி, 8.
ஷடொபிரியான், பிரான்ஸூவா ரெனே *(1768-1848)*—பிரெஞ்சுக் காதல் கதை ஆசிரியர், 64, 66.
ஷெவேர், பிரான்ஸூவா *(1695-1769)* — பிரெஞ்சு ஜெனரல், 98.
ஷேக்ஸ்பியர், வில்லியம் *(1564-1616)*—ஆங்கிலக் கவிஞர், நாடகாசிரியர், 100.
ஸ்டேன், ஜான் *(சுமாராக1626-1679)*—டச்சு ஓவியர், 100.
ஸ்டெண்டால், மரீ அன்ரி பேய்ல் *(1783-1842)*—பிரெஞ்சு எழுத்தாளர், 99-100.
ஸ்துரூவே, பியோத்தர்*(1870-1944)*—ருஷ்யப் பொருளியல் அறிஞர், கட்டுரையாளர், மார்க்ஸீயவாதியாயிருந்து முடியரசு வாதியாக மாறியவர், 8.
ஸ்பென்ஸர், ஷெர்பர்ட் *(1820-1903)* — ஆங்கில சமூகவிஞ்ஞானி, உளவியல் அறிஞர், 24.
ஸார்டோ, ஆன்டிரியா டெல் *(1486-1531)*—இத்தாலிய ஓவியர், 100.

ஸிம்மெல், கியோர்க்(1858-1918)—ஆன்மீகவாதப் போக்குக் கொண்ட ஜெர்மானியத் தத்துவசாஸ்திரி, சமூக விஞ்ஞானி, கான்ட்டைப் பின்பற்றியவர், 38.

ஸியே, எமானுவேல் (1748-1836) — பாதிரி, 18ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற பிரெஞ்சு பூர்ஷ்வா புரட்சியில் பிரபலமாயிருந்தவர், 91.

ஹெகல், கியோர்க் வில்ஹெல்ம் பிரெடெரிக் (1770-1831)—ஜெர்மன் தத்துவஞானி, புறநிலை ஆன்மீக இயக்கஇயல் வாதி, 7, 40-41, 84, 117.

ஹெர்டர், யோகன் கொட்பிரீட் வான் (1744-1803)—ஜெர்மன் தத்துவசாஸ்திரி, சரித்திராசிரியர், விமர்சகர், 61.

ஹெய்டன், ஜான் வான் டெர் (1637-1712)—டச்சு ஓவியர்,98.

ஹெல்ஸ்ட், பார்ட்டொலோமேவுஸ் வான் டெர் (1613-1670)—டச்சு ஓவியர், 100.

ஹேவுட், தாமஸ் (1574?-1641)—ஆங்கில நாடகாசிரியர், நடிகர், 99.

ஹொப்பேமா, மைன்டர்ட் (1638-1709)—டச்சு ஓவியர், 100.

ஹொல்பாஹ், போல் அன்ரி டீட்ரிஹ் (1723-1789)—பிரெஞ்சு லோகாயதவாதத் தத்துவசாஸ்திரி.

ஹோஷ், லுயீ லஸார் (1768-1797)—பிரெஞ்சு ஜெனரல், 18ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் நடந்த புரட்சிப் போர்களில் பிரபலமடைந்தார், 98.

Г. В. Плеханов

# К ВОПРОСУ О РОЛИ ЛИЧНОСТИ В ИСТОРИИ

*На тамильском языке*

Г. В. ПЛЕХАНОВ

К ВОПРОСУ О РОЛИ ЛИЧНОСТИ В ИСТОРИИ